
கல்கி
KALKI
20-1-1974
50 காசு
எதிர்கால டாக்ஸி – விசேஷக் கட்டுரை

# உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைடமின்களும், தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை.

*அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?*



**வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின்** பற்றுக்குறை உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்துப்போதல், சரும உபாதைகள், மற்றும் பல் உபாதைகள். இவற்றிற்கு மூலகாரணம் சாதாரணமாக, இன்றியமையாத வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறைதான். இருப்பினும், வைடமின்களும், தாதுப் பொருள்களும் பெரும்பாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன. மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட உணவில் கூட இவற்றின் பற்-றுக்குறை காணப்படுகிறது. வளமான உணவு எல்லாம் சரிவிகித உணவாக இருப்பதில்லை; விதவிதமான உணவுகளிலும், வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை இருக்கக் கூடும். அப்படியானால், அத்தியாவசியமான வைடமின்களும், தாதுப் பொருள்களும் – அதுவும் சரியான விகிதங்களில் – உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்?

உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும், தேவையான அளவுகளில் இந்த இன்றியமையாத போஷாக்குச் சத்துக்கள் கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விம்க்ரான் – ஸ்க்விப் பல்வேறு வைட்டமின். தாதுச் சத்து மாத்திரைகள் – கொடுங்கள், தினம் ஒரு மாத்திரை வீதம். இந்த ஆரோக்கியமான வழக்கத்தை இன்றே ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

விம்க்ரானில் 11 முக்கியமான வைடமின்களும், 8 தாதுப் பொருள்களும் சரியான அளவுகளில் அடங்கியிருக்கின்றன. இரத்தச் சிவப்பு உயிரணுக்களை வளர்க்கவும், சக்தியை மீண்டும் பெற உதவவும் இரும்புச் சத்து – எலும்புகளையும் பற்களையும் உறுதியாக வைத்திருக்க கால்ஷியம் – ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்க வைடமின் ஸி – சிறந்த கண் பார்வைக்கும், ஆரோக்கியமான சருமத்திற்கும் வைடமின் ஏ – பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் வைடமின் பி – 12 – இவற்றுடன், உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்குத் தேவையான, இதர போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

# விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்

## 11 வைட்டமின்களும் 8 தாதுப் பொருள்களும் அடங்கியது.

**ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது.**

SQUIBB SARABHAI CHEMICALS

Shilpi HPMA-25A/71 Tam

# கல்கி

பொருளடக்கம்

பிரமாதீச, தை 7 — ஜனவரி 20, 1974



| | |
|---|---|
| ஜெயப்பிரகாசர் யோசனைகள்... | 3 |
| தமிழ் நாட்டிலே... | 4 |
| காமாக்ஷியின் சரிதை–1 | 11 |
| எதிர்கால டாக்ஸி | 12 |
| படித்துப் பாருங்கள் | 15 |
| தேடுங்கள் ஒரு மனைவியை ! | 17 |
| சிவகாமியின் சபதம் | 19 |
| சிக்கன வாழ்வில் மகிழ்ந்து... | 30 |
| விண்ணும் மண்ணும் | 35 |
| ஆசைகள் மடிவதில்லை ! | 44 |
| ஆரோக்கியம் அழைக்கிறது ! | 46 |
| வட்ட மேஜை | 51 |
| கோபுரங்கள் உயரமானவை | 52 |
| உடலில் கனம்... | 59 |
| நகைகளைக் கவர்ந்த நாணயமான திருடன் | 60 |



| கல்கி சந்தா விவரம் | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 26-00 | ரூ. 13-00 |
| பிற நாடுகள் | ரூ. 55-00 | ரூ. 27-50 |
| இலங்கை (இலங்கைநாணயம்) | ரூ. 30-00 | ரூ. 15-00 |





"கல்கி"யில் வெளி வரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்ப வங்களும் கற்பனையே.

"பழமையான கரகரப்பான
பற்பொடிகள் உங்கள்
ஈறுகளுக்கும், பற்களுக்கும்
தீங்கு இழைக்கக்கூடும்..."



# கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!




பழமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக் கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும்போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய் நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி நவீன பராமரிப்பு முறையில், உங்கள் பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்கிறது; மற்றும் வாய் நாற்றத்தையும் உடனே நிறுத்துகிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

**உங்கள் குடும்பத்திற்கு எகானமி சைஸ் கால்கேட் பற்பொடியை இன்றே வாங்குங்கள்! ஒரு டப்பா மாதக் கணக்கில் வரும்!**



...பூரணமான பல் பராமரிப்-பிற்கு விஞ்ஞான முறையில் உருவாக்கப்பட்ட கால்கேட் டூத் ப்ரஷ் உபயோகியுங்கள்.

TP.G.21 TM

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா --பாரதியார்

மலர் 33 :: இதழ் 25

# ஜெயப்பிரகாசர் யோசனைகள் ஜெயமடையட்டும்

**நா**ம் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ள லோக் சபை, ராஜ்ய சபை மன்ற உறுப்பினர்களுக்கு, நம்முடைய கவலைகளை உணர்த்தி வைக்கச் சிறந்த தேச பக்தரும், சர்வோதயத் தலைவருமான திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன், மிக உருக்கமாக ஒரு கடிதம் எழுதியுள்ளார். பொருளாதாரம், அரசியல், சமூகம் போன்ற ஒவ்வொரு துறையிலும் நாட்டில் பிரச்னைகள் பல இருப்பினும், இவற்றை யெல்லாம் ஜாபிதா போட்டுச் சிந்தனையைக் குழப்பாமல், எதிர்க் கட்சிகள் உள்பட எல்லா மக்களுக்கும் ஒன்று போலக் கவலை தரும் இரண்டு பிரச்னைகளை மட்டும் தமது கடிதத்தில் அவர் விவரித்துச் சொல்லி யிருக்கிறார். இந்த இரண்டு பிரச்னைகளுக்கும் நல்ல ஆரோக்கியமான முடிவு காணப்பட்டால் மற்ற எல்லாப் பிரச்னைகளும் தாமாகவே தீர்ந்து விடும்.

முதலாவது, பிரஜைகளுக்குள்ள சுதந்திரமும், ஆதார உரிமைகளும் அவற்றை நிலைக்கச் செய்யும் சாதனமான நீதி மன்றங்களின் சுதந்திரமும் பற்றியது.

சமீபத்தில் உயர்நீதி மன்றம் அளித்துள்ள 'மெஜாரிட்டி'த் தீர்ப்புப்படி அரசியல் சாஸனம் மக்களுக்கு அளித்துள்ள ஆதார உரிமைகளை வேண்டும்போது, ஒவ்வொன்றாகவோ அல்லது மொத்தமாகவோ, அழித்துவிட, பார்லிமெண்டுச் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தேசத்தின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படும்போது மட்டும், மக்கள் உரிமைகளை அவசியமான அளவுக்குக் கட்டுப்படுத்தலாம் என்று கூறும் அரசியல் சாஸனத்தின் ஷரத்துக்கு இது முற்றிலும் முரணானது.

இம்மாதிரி கட்டுப்பாடின்றி அமோக அதிகாரத்தைப் பார்லிமெண்டுக்கு அளிப்பது கூடாது. தனித்தோ, மற்றக் கட்சிகளுடன் கூட்டாகவோ தாற்காலிக மெஜாரிட்டி பலத்தை உடைய அரசியல் ஆளுங் கட்சி, இவ்வதிகாரத்தைத் தனக்கு அநுகூலமாக உபயோகிப்பதில் கட்டுப்பாடோ, நிதானமோ காட்டும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. மாறாக, இவ்வதிகாரம் எதேச்சாதிகாரத்தை ஏற்படுத்தவும், நிலைக்கச் செய்யவும்தான் வழிகோலும். இப்போதுள்ள பார்லிமெண்டிலேயே ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாதவர்களும் ஓரளவுக்கு எதேச்சாதிகாரமே நல்லது என்று நம்புவோரும் உள்ளனர். இத்தகைய மனப்பான்மை கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் அதன் விளைவு என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், இத்தகைய அதிகாரம் ஜனநாயகத்துக்கு எவ்வளவு அபாயமானது என்பது தெளிவாகும். ஜனநாயக முறையைக் கொண்டே ஜனநாயகத்தைக் கொலை செய்வதாகும்.

இந்த அபாயத்தை நீக்க ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஒரு வழியையும் காட்டி யிருக்கிறார். உயர்நீதிமன்றம் வழங்கிய இந்த மாபெரும் அதிகாரத்தைப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் தாங்களாகவே வாபஸ் செய்துவிட வேண்டும்; இவ்வாறு அவர்கள் அதிகாரத்தைத் துறப்பதை அரசியல் சாஸனத்திலேயே புகுத்தி இடம் பெறச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

அரசியல் சாசனத்தில் இப்படி ஒரு திருத்தம் செய்து, எதிர்காலப் பார்லிமெண்டுகளால்கூட மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஆபத்து நேராமல் காக்க வேண்டும் என்கிறார் ஜெயப்பிரகாசர்.

நீதிபதிகளின் சுதந்திரத் தன்மையை நிலைநாட்டி அவர்கள் ஓய்வு பெற்றபின் உயர்ந்த சம்பளங்களில் வேறு பதவிகளுக்கு நியமனம் செய்யப்படும் துர்ப்பழக்கத்தை ஒழிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிற்காலத்தில் கிடைக்கக் கூடிய பதவிகளின் மோகத்தால் தங்களது நடுநிலைமைத் தன்மையைச் சுலபமாகவே நீதிபதிகள் இழந்து விடுகிறார்கள். நீதிபதிப் பதவி, பிற்காலத்தில் ஏற்படக்கூடிய நலன்களுக்கு ஊன்றுகோலோ, தாவுப்படியோ அல்ல.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறியுள்ள இரண்டாவது முக்கிய விஷயம் அரசியல், நிர்வாக ஒழுங்கீனங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது. இவ்

விஷயமாக ஆராய்ந்த சந்தானம் கமிட்டி தன் சிபாரிசுகளைச் செய்து பத்தாண்டுகள் சென்றுவிட்டன. அமைச்சர்கள் மீது விசாரணை நடத்தத் தனிக் கமிட்டி அமைக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனை இன்னமும் செயலில் கொண்டு வரப்படவில்லை. லோக்பால், லோக் அயுக்தா சிபாரிசுகளும் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரும் ''சட்டம் வருகிறது, வருகிறது'' என்ற நிலையிலேயே தான் இருக்கின்றன. வந்தபாடில்லை.

இவை பற்றிச் சொல்லும் திரு ஜெயப்பிரகாசர் சில சிபாரிசுகளும் கூட ஓரளவுக்குத்தான் பயனளிக்குமே தவிர, ஒழுங்கீனங்களை முற்றிலும் தவிர்க்காது என்கிறார். அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் நிதி வசூலிக்கும் விதமும், அத்தொகை கோடிக்கணக்கில் போவதும், அரசியல் ஒழுங்கீனத்தின் ஆரம்ப ஸ்தானமாகும். இம்மாதிரி நிதி வசூல்கள் எந்தக் கணக்கிலும் வருவதில்லை. எந்த அமைச்சர் எவ்வளவு சாப்பிட்டார் என்று ஒருவருக்கும் தெரியாது. செலவுகளுக்கும் கணக்குக் கிடையாது. கட்சியின் ஆட்சி பீடத்தில் உற்பத்தியாகும் ஒழுங்கீனம் படிப்படியாகத் தொழில் வர்க்கத்துக்கும் பரவி, நேர்மையுள்ள சில தொழிலதிபர்களையும் நாணயமற்றவர்களாக மாற்றிவிடுகிறது. அத்துடன் நில்லாது, ஜனநாயகத்தையே சிதைக்கும் வகையில் வாக்காளர்களை லஞ்சம் என்ற பேய்க்கு அடிமைகளாக்கி விடுகிறது. இதன் விளைவாக, பண வசதி இல்லாத எதிர்க் கட்சிகள் நியாயமான முறையில் ஆளும் கட்சியை எதிர்க்க முடியாமல் ஆர்ப்பாட்டம், ஹர்த்தால், ஊர்வலம், வெறியாட்டம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

இவ்விஷயத்திலும் சீரான ஆலோசனைகளை திரு ஜெயப்பிரகாஷ் சொல்லுகிறார்: தேர்தல் செலவுகள் கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும்: கட்சி மாறுதல் அடியோடு தவிர்க்கப்பட வேண்டும். இதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவில் திருப்தி அளிக்காத அம்சங்கள் பல உள்ளன. இவை திருத்தப்பட வேண்டும்.

ஜெயப்பிரகாசர் எடுத்துக் காட்டிய குறைகள் நீக்கப்பட வேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பு முக்கியமாகப் பிரதமரையும், ஆளும் கட்சியையும் சார்ந்தது. இதற்கு உருவகம் கொடுக்க வேண்டியது மக்கட் பிரதிநிதிகள்தாம். எனவே ஜெயப்பிரகாசர் தமது கடிதத்தைப் பிரதமருக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ளார். மனச்சாட்சி என்பது லவலேசமேனும் இருக்குமேயானால் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெயப்பிரகாசரின் யோசனைகளை ஏற்று அவை ஜெயமடைந்து பிரகாசிக்கச் செய்வர்.

# தமிழ் நாட்டிலே...

தீரன்

## ஆலயங்களுக்குப் பிர்லா உதவி

தமிழ்நாட்டில் உள்ள புகழ் பெற்ற ஆலயங்களாகிய ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவானைக்காவல் ஜம்புகேசுவர சுவாமி திருக்கோயில், திருச்சியிலுள்ள மலைக்கோட்டை தாயுமானவ சுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் திருப்பணிகள் செய்வதற்காக என்று கல்கத்தாவிலுள்ள 'பிர்லா ஜின்ஹித் டிரஸ்ட்' நிதி உதவி செய்திருக்கிறது. இந்த நிதி உதவியின் மூலம் மேலே குறிப்பிட்ட மூன்று கோயில்களிலும் மின்சார இணைப்புக்கள், மின்சாரக் கருவிகள் ஆகியவற்றை அமைக்கவும், புதுப்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்த மூன்று ஆலயங்களிலுமாக நிறைவேற இருக்கும் திருப்பணிகளுக்கு மொத்தம் பத்து லட்சம் ஆகலாம் என்று கணக்கிட்டுள்ளார்கள். கங்கை நதிக்கரையிலிருந்து காவிரி நதிக் கரைக் கோவில்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ள பிர்லா அறக்கட்டளை நிறுவனத்தைத் தமிழ் மக்கள் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## இணையற்ற பணி


''ஹிந்து சமய மன்றம்'' என்ற பெயரில் தனித் தனியே மகளிர், மாணவர், இளைஞர், குழந்தைகள் ஆகியோருக்குச் சமூக சேவையோடு இணைந்த சமய உணர்வை ஊட்டுவதற்காக ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்கள் தொடங்கி வைத்த அமைப்புக்கு இன்று தமிழகமெங்கும் 295 கிளைகள் ஆற்றலுடன்

### ராஜாஜி சிந்தனை

பணக்காரனிடம் ஏழை தனக்கு உதவும்படி கேட்கும்போது எவ்வாறு அடக்கமும் பயமும் கொண்டு நிற்கிறானோ அவ்வாறு சீடன் நிற்க வேண்டும். பணத்தை விரும்பும் ஏழை போல் மாணவன் அறிவை விரும்ப வேண்டும். கொடுப்பானோ இல்லையோ, கொடுக்க மறுத்தால் என்ன செய்வேன் என்ற பயமும், பிச்சை கேட்பவனுடைய அடக்கமும் இருக்க வேண்டும். இந்த அடக்கத்துக்கு இசையாதவன் கல்வி இல்லாமல்தான் இருக்க நேரிடும். கற்றவர்கள் எல்லாம் இந்த ஆசையும் அடக்கமும் கொண்டு கற்றார்கள்.



# ஸ்ரீகாசி காமகோடீசுவர பஞ்சாயதன ஆலயம் மஹா கும்பாபிஷேக மஹோத்ஸவம் 28-1-1974



காசி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்களின் அநுக்கிரஹத்துடன் ஈசுவரன், அம்பிகை, விநாயகர், திருமால், சூரியனுக்கான பஞ்சாயதன ஆலயம் ஒன்று தமிழகக் கோயிற் பாணியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. தை மாதம் வஸந்த பஞ்சமியன்று **ஜகத்குரு ஸ்ரீ புதுப் பெரியவர்கள்** இவ்வாலயத்துக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடத்தி வைக்கின்றார்கள்.

28—1—1974 திங்கள்கிழமை காலை 7 மணி முதல் யாகசாலா பூஜை ஹோமங்கள் மஹாபூர்ணாஹுதி. காலை 9 மணிக்குமேல் 10-30 க்குள் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் நடத்திவைக்கிறார்கள். காலை 11 மணிக்கு மஹாபிஷேகம். மாலை 4 மணிக்கு சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் இன்னிசை. மாலை 7 மணிக்கு திருக்கல்யாணம். இரவு 9 மணிக்கு திருவீதியுலா.

ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

---

பணி புரிந்து வருகின்றன. சென்னை ராயப்பேட்டை புதுப்பாக்கத்தைச் சேர்ந்த ''ஹிந்து சமய இளைஞர் மன்றம்'' வெகு அருமையாக இயங்கி வருகிறது. 'ஹலோ'வுக்குப் பதில் 'ராம் ராம்' சொல்வதே ஓர் இதமான மாறுபாடாகும். உறுப்பினருக்கு அனுமதிக் கட்டணம் என்ன தெரியுமா? 1008 முறை இறைவன் நாமத்தை எழுதியளிப்பதாகும். கூட்டங்களுக்கு உறுப்பினர் வெறுமே வந்தால் ஆஜரானதாக அர்த்தமாகாது; 108 முறை இறை நாமம் எழுதிக் கொண்டு வந்தாலே அதிகாரபூர்வ ஆஜராகும்! மாதத்தில் முதல் வெள்ளியன்று ஆலய பஜனை, இரண்டாம் ஞாயிறில் ஓர் ஆலயத்தைச் சுத்தம் செய்து வழிபடுவது, மூன்றும் ஞாயிறில் உபந்நியாசம், எல்லாவற்றுக்கும் மேலாக அமாவாசையை அடுத்து வரும் ஞாயிறில் பிடி அரிசித் திட்டத்தின் கீழ் சுமார் பதினைந்து படி அரிசி வடித்து இருநூறு ஏழைகளுக்கு வழங்குவது, ஏழை இந்துக் குழந்தைகளுக்கு உறுப்பினரைக் கொண்டு இலவச 'டியூஷன்' அளிப்பது — ஆகிய சேவைகளைச் செவ்வனே செய்து வருகிறார்கள்.

## தேவருக்குச் சிலை

சிறந்த தேசபக்தராகவும் தலைசிறந்த ஆன்மிகவாதியாகவும் விளங்கி அமரரான பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவரின் சிலையை மதுரை மாநகரத்தில் பாரத ராஷ்டிரபதி திறந்து வைத்திருக்கிறார்.

இந்தச் சிலை காலஞ்சென்ற முத்துராமலிங்கத் தேவரின் நெடிதுயர்ந்த தோற்றத்தையும், கம்பீரமான ஆகிருதியையும் எடுத்துக் காட்டும் அளவுக்குப் பெரியதாகவும், உயரமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மதுரை வைகை நதிப் பாலத்தின் வடபுறத்து இறக்கமும் கோரிப்பாளையம் அழகர், கோவில் சாலைகளும் சந்திக்கிற இடத்தின் மையத்தில் இந்தச் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. தேவருக்கு மிகவும் பிரியமான—அவர் சதா காலமும் தொழும் இஷ்ட தெய்வங்களான மதுரை மீனாட்சி, அழகர் கோயில் கள்ளழகர், திருப்பரங்குன்றம் முருகன் ஆகிய தெய்வங்களின் கோவில்கள் பார்வையில் படும்படியான இடத்தில் அவர் சிலை அமைந்திருப்பது மிகவும் பொருத்தமான அம்சமாகும். சிலைத் திறப்பு விழாவின்போது மதுரை மாநகரமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.


தேசப் போராட்ட காலத்தில் தேவரோடு சிறையில் சகாவாக இருந்த ராஷ்டிரபதி கிரி அவர்களே தேவரின் சிலையைத் திறந்து வைத்தது மிகவும் பொருத்தம் என்று தமிழக முதல்வர் தம்முடைய தலைமையுரையில் குறிப்பிட்டார்.


ஒரு லட்ச ரூபாய்ச் செலவில் இச் சிலையை உருவாக்கப் பாடுபட்ட குழுவின் தலைவராயிருந்து பணியாற்றிய பார்வர்டு பிளாக் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு மூக்கையாத் தேவர் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவர் ஆகிறார்.

## 320 ரூபாய் டாக்ஸி கட்டணம்

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மௌண்ட்ரோடு ஹோட்டல் ஒன்றுக்குப் போக வேண்டிய ஆஸ்திரேலிய நாட்டுப் பயணியிடம் அந்த இடம் 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாகச் சொல்லி ரூ. 320 வசூல் செய்த டாக்ஸி டிரைவரைப் பற்றிப் பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்தி பிரசுரித்திருக்கின்றன.

ஓர் அந்நியப் பயணிக்கு இப்படிப்பட்ட அநுபவத்தைத்தான் சென்னையோ வேறு இந்திய நகரமோ தரும் என்றால் நாம் பெருமைப்பட என்ன இருக்கிறது?



... கப்பல் படை காண்கின்றனர்...!
கூவம் கடந்து மெரினா, பார்க் டவுன், மவுண்ட் ரோடு, எழும்பூர், சேத்துப்பட்டு ஆகிய நாடுகளிலெல்லாம் வெற்றிக் கொடி நாட்டுவோம்
பட்டி தொட்டிகளிலெல்லாம் பெரியார் சிலை! மூலை முடுக்குகளிலெல்லாம் அண்ணா சிலை! இன்றே தொடங்கி, நடக்கட்டும் வேலை!
...சிற்பக்கலையைச் சிறப்பிக்கின்றனர்!...
... பட்டப் பெயர்கள் பல சூடுகின்றனர்..!
எல்லாப் பட்டமும் எனக்குத்தான், வேற யாரும் தொடக் கூடாது!
கணக்குக் கேட்டா என்ன? ஒண்ணும் கண்டுக்க முடியாது! ஊடு பெண்சாதி பேரிலே; கார் மகன் பேரிலே; நிலம் அக்கா பேரிலே;
தோப்பு அத்தை பேரிலே; தியேட்டர் மாமா பேரிலே; தொழிலகம் பாட்டி பேரிலே; பலே! பலே
நிலையான பொருளாதாரச் சூழலை உருவாக்குகின்றனர்!



இக்காலச் சோழர் கலைக்கூடம் — காண்வென்ட் திறந்து வைக்கிறார்!
எங்கே வெச்சே? இங்கேதான் வெச்சேன்! வாங்கித்தா! கேட்டுப்பார்!
நாம்
சரித்திர நாயகர்களான முற்காலப் பிற்காலச் சோழர்களைப் போலவே இக்காலச் சோழரும் நாட்டியக் கலையை வளர்க்கின்றனர்...
...நாடகக் கலையைப் போற்றுகின்றனர்...
பருப்பில்லாமல் கல்யாணமா? நாயகி இல்லாமல் நாடகமா? அயாட்சி சுந்தரி டில்லியிலிருக்கிறாள்; தமிழகம் நோக்கிப் புறப்படுகிறாள்! புறப்படுகிறாள்! புறப்பட்டுக் கொண்டே இருக்கிறாள்!
அயாட்சி சுந்தரி, வாய்ச்சொல் வீரர் நடிக்கும் ஏமாற்றும் நாடகம் நடைபெறும்
...ஓவியக் கலையை ஊக்குவிக்கின்றனர்...
ஒன்று அல்லது இரண்டு போதுமே!
...அடிக்கடி திக்விஜயம் புறப்படுகின்றனர்!...
உங்கள் கட்சிக்கு விஜயம் செய்கிறோம்... மாலைகள் தயாராகட்டும்!
அ.தி.மு.க
தி.மு.க. எம்.எல்.ஏக்கள், பிரமுகர்கள்


காட்பரிஸ்

# போர்ன்விடா விசேஷச் சலுகை!




OBM/2364 TM

**50 பைசா மதிப்புள்ள கூப்பன் (லேபல் ஒட்டப் பட்டுள்ள) ஒவ்வொரு 450 கிராம் போர்ன்விடா டின்னிலும்!**




இப்போது உங்களுக்காக ஒரு விசேஷச் சலுகை! லேபல் ஒட்டப்பட்டுள்ள ஒவ்வொரு 450 கிராம் போர்ன்விடா டின்னிலும் ஒரு விசேஷச் சலுகைக் கூப்பன் உள்ளது. டின்னிலுள்ள அலுமினியம் தகட்டுடன் அந்த கூப்பனை அடுத்த முறை போர்ன்விடா (450 கிராம் அல்லது எகானமி டின்) வாங்கும்போது உங்கள் கடைக்காரரிடம் தந்தால், 50 பைசா தள்ளுபடி கிடைக்கும். எனவே முந்துங்கள்—சரக்கு தீரும் முன்!

**சலுகை ஜனவரி 31, 1974 வரையே**

இந்த சலுகை தென்னிந்தியாவுக்கு மட்டுமே.

**காட்பரிஸ் போர்ன்விடா — சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் தேஜஸுக்கும்!**

# அனந்தமாகிய ஆனந்த மலை

இவ்வுலகில் நாம் ஆனந்தம் என்று நினைத்து அநுபவிக்கும் சுகங்கள் யாவும் விரைவில் அழிபவையே ஆகும். அந்தமில்லாத ஆனந்தம் என்பது பரம்பொருளைத் தன்னில் தானாக உணருகிற ஞானம் ஒன்றுதான். இந்த ஞான அநுபவம் எக்காலமும் மலையென நிலைத்து நிற்பதாகும். தன்னையறிந்த பேரின்பத்தில் மலையாக நிலைத்து நிற்கும் யோகமே, ஞானநந்தகிரி என்ற திருநாமம் தரித்து இத்தரணியில் பலப் பல ஆண்டுகள் (ஒன்றரை நூற்றாண்டுக்கும் அதிகமாக என்று கூறப்படுகிறது) உலவி வந்தது. அந்தமில்லா ஆனந்த வஸ்து இன்று அழிந்ததாக எண்ணுவது பொருந்தாது. சரீரத்தின் மூலம் அருள் பரப்பிய ஞானநந்தம், இப்போது அந்தமுடைய சரீரத்தை நீத்து அனந்தமாகி, சூக்ஷ்மமாக அநுக்கிரகிக்கத் தொடங்கிவிட்டது என்பதே உண்மை.



எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் முருகனுக்குகந்த தைக் கிருத்திகையன்று கன்னட தேசத்தில் தோன்றிய சுப்பிரமணியம் மகாராஷ்டிரத்தில் நல்லாசானைச் சென்றடைந்து, பிறகு இமயக் கொடுமுடிகளிலும் திபேத், சீனம், பர்மா முதலிய தேசங்களிலும் பரிவிராஜராக சஞ்சாரம் செய்துவிட்டு, கடைசி ஐம்பதாண்டுகளில் நமது தமிழகத்தில் வந்து ஸ்ரீமத் ஞானநந்த கிரி ஸ்வாமிகளாக அருளாட்சி செய்தது நமது மகா பாக்கியம். அவரது ஞான நிலையும், பக்தி சாதனையும், யோக சித்திகளும் நம் அறிவெல்லைக்கு அப்பாற்பட்டவை. ஆயினும், அவர் அனைவருடனும் அன்பினால் நெருங்கி, ஒட்டி வாழ்ந்த அருளாளர். அவருக்கு வயது கணிக்கவே முடியாது என்று சொல்லப்பட்ட போதிலும், கவடு இன்றி உள்ளம் திறந்து வெள்ளையாகப் பழகுவதில் பச்சைக் குழந்தையாகவே இருந்தார். நாம் உலக வாழ்வை அடியோடு துறக்கப் பக்குவப்படவில்லை என்பதால், இக வாழ்வுக்கும் பர வாழ்வுக்கும் அதிக வித்தியாசமில்லை என்றும் ஒவ்வோர் அம்சத்திலும் இன்னும் ஒவ்வோர் இழை நாம் முதிர்ச்சி பெற்றாலும்கூட தெய்விகத்தைத் தொட்டுவிடலாம் என்றும் எளிமையாக உபதேசித்து வந்தார். உதாரணமாக, ''சுறுசுறுப்பாயிரு. ஆனால் படபடப்பாயிராதே; பொறுமையாயிரு. ஆனால் சோம்பலாயிராதே; சிக்கனமாயிரு. ஆனால் கருமியாய் இராதே; நல்லோரை நாடு. ஆனால் அல்லோரை வெறுக்காதே'' என்று உபதேசித்து, மனிதத் தன்மைக்குள்ளேயே தெய்விகத்தின் எல்லைக் கோடுகளை வகுத்துத் தந்தார்.

முதலாழ்வார்கள் மூவரும் கூடிய நாட்களிலிருந்து சமீப காலம் வரை தபோதனர் பலரை ஈர்த்து வந்த திருக்கோவிலூர் தபோவனத்தில், தாயின் நேயத்தோடு குடி கொண்டிருந்த மகான் இன்று இல்லையே என்று எண்ணற்ற அடியார்கள் வருந்துவது இயற்கை. ஆனால், சாமானிய மக்கள் விஷயத்திலேயே 'அழிவது உடல்தான்; ஆன்மா அல்ல' என்று சொல்கிற ஆறுதல் மொழி மகாத்மாக்கள் விஷயத்தில் மேலும் பொருள் படைத்ததாகும். ஏனெனில், சாதாரண மக்களின் உடல் அழிந்தபின் அந்த ஆன்மா அழியாமலிருந்தாலும், அதனுடன் நமக்குத் தொடர்பே இருப்பதில்லை. இந்தத் தொடர்பு போய்விட்டதே என்றுதான் நாம் துக்கிக்கிறோம். ஆனால் மகாபுருஷர்களின் ஆன்மாவோ உடல் என்கிற சட்டையை உதறிய பின்னும் அடியார்களுக்கு அருள் கூர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இன்றளவும் சங்கரர், இயேசுநாதர், ராமகிருஷ்ணர் போன்ற மகான்களின் ஆன்மா அடியாருலகுக்கு அருள் புரிந்து வருவதுபோல், ஸ்ரீமத் ஞானநந்தகிரி ஸ்வாமிகளும் எந்நாளும் தோன்றாத் துணையாகப் பக்த ஜனங்களைப் பரிபாலித்து வருவார்.

# காமாக்ஷியின் சரிதை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

மன்மதன் கரும்பு வில்லை வைத்துக்கொண்டிருக்கிறான். அதற்கு நாண் தேன் வண்டுகள். வளைந்த கரும்பு வில்லின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரையில் குறுக்காக வண்டுகள் நாண் மாதிரி வரிசையாக இருக்கின்றன. இந்தக் கரும்பு வில்லில் ஐந்து மலர் அம்புகளைத் தொடுத்துத்தான் சமஸ்த ஜீவப் பிரபஞ்சத்தையும் மன்மதன் ஆட்டி வைக்கிறான். உலகத்தில் உள்ள தித்திப்பு வஸ்துக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சர்க்கரையில் செய்ததுதான். அந்தச் சர்க்கரைக்கு ஆதாரம் கரும்பு. தித்திப்புச் சுவை மன்மதனுக்கு வில். சுகந்தத்துக்கும் மென்மைக்கும் புஷ்பங்கள் பெயர் போனவை. இப்படிப்பட்ட புஷ்பங்களில் ஐந்து அவனுக்குப் பாணங்களாக இருக்கின்றன. பலவிதமான அழகுகளைக் காட்டி லோகத்தைக் காமத்தில் கட்டிப் போடுகிறான் என்று அர்த்தம். அம்பாள்தான் அவனுக்கு இப்படி இரும்பு வில்லுக்கும் பாணத்துக்கும் பதிலாகக் கரும்பு வில்லையும், மலர்ப் பாணங்களையும் தந்து, எல்லா உயிரினங்களையும் கவர்ந்து இழுத்து ஆட்டி வைக்கிற சக்தியை அநுக்கிரகித்திருக்கிறாள். சிருஷ்டி லீலை நடக்க வேண்டும் என்பதற்காகக் காமனுக்குச் சக்தி தந்திருக்கிறாள்.

ஆனால் ஜீவப் பிரபஞ்சம் முழுவதும் எப்போதும் இந்திரிய சுகங்கள் என்கிற துக்கத்திலேயே சிக்கியிருக்க அம்பாள் விரும்பவில்லை. லோக ரீதியாக இருக்கிறவர்களும் காமத்தினால் தர்மத்தை விட்டு விடக் கூடாது; அர்த்த காமங்களையும் (பொருள் ஈட்டுதலையும், ஆசைகளை அநுபவிப்பதையும்) கூட தர்மத்துடனேயே இணைத்து ஒழுங்கோடு வாழ வேண்டும். மனசும் இந்திரியமும் போன போக்கில் விட்டு விடாமல் அவற்றைத் தர்மத்தில் ஈடுபடுத்த வேண்டும். லோக விவகாரத்தை விடாமலே இப்படி இருப்பது முதல் நிலை. அப்புறம் மனசு, இந்திரியம் இவை கொஞ்சம்கூடச் சலனமே இல்லாமல் இருக்கிற ஞான நிலை சித்திக்கும். அந்த நிலை வந்து விட்டால் அப்புறம் ஜன்மமே இல்லை. சிருஷ்டி லீலைக்குச் சகாயம் செய்கிற மன்மதனுக்கு இங்கு வேலையே இல்லை. மன்மதனுக்குக் காமத்தை உண்டாக்குகிற சக்தி தந்த அம்பாளேதான், காம விகாரத்தைக் கட்டுப்படுத்த தர்மத்தையும், அவனுடைய சிருஷ்டி லீலையிலிருந்து விடுபடுகிற ஞானநிலையான மோக்ஷத்தையும் ஏற்படுத்தியிருக்கிறாள்.

காமத்துக்காகவே ஏற்பட்ட மன்மதனுக்கு அவள் தந்த கரும்பு வில்லையும், மலர் அம்பையும் ஒரு சமயம் அவளே அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளும்படியாகி விட்டது. பரம காருண்யத்தால் அவள் அப்படிச் செய்தாள். வெளி நினைப்பே இல்லாத பிரம்ம ஸ்வரூபம் லோகத்திடம் கருணை கொண்டு கடாட்சிக்க வேண்டும்; லோகத்தில் தர்மத்தையும், ஞானத்தையும் அநுக்கிரகிக்க வேண்டும் என்றே, அம்பாள் காமனுக்குத் தந்த தனுசையும் பாணங்களையும் தானே எடுத்துக் கொண்டு காமாக்ஷியானாள்.

அது பரமேசுவரன் தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்து விட்ட சந்தர்ப்பம். ஒரே ஞானமயமான மூர்த்தியாக பரம சாந்த ஸ்வரூபமாக, நிச்சலனமாக உட்கார்ந்து விட்டார் தக்ஷிணாமூர்த்தி. எல்லாம் ஒன்றாகியிருக்கிற அத்வைத வடிவமாக அவர் இருக்கிறார். ஆனால் அவர் இப்படி ஞான ஸ்வரூபியாய், பரதத்துவமாய் இருந்தால் ஜீவராசிகள் என்ன ஆவது? மன்மதாவஸ்தைக்கு ஆளாகி ஆசைவாய்ப் பட்டு, பாவம் செய்து கொண்டே இருக்கிற ஜீவராசிகளைக் கை தூக்கி விடுவது யார்? இந்த ஞானஸ்வரூபி கருணைக் கடலாகி, எல்லாரையும் கடாக்ஷிக்க வேண்டும் என்று ஜகன்மாதா திருவுள்ளம் கொண்டாள். அவள் வேறு அவர் வேறு அல்ல. ஒன்றேதான். தன்னுடைய ஞானத்திலேயே காருண்யமும் பொங்கியிருக்க வேண்டும் என்று எண்ணினாள். அப்போது சந்தர்ப்பமும் அவள் கரும்பு வில்லையும் மலர்ப் பாணத்தையும் எடுத்துக் கொண்டு காமேசுவரியாவதற்கு அநுகூலமாக ஆயிற்று.

கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளாகப் பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் ஸ்ரீ காமாக்ஷியன்னையைப்பற்றி அருளிய நன்மொழிகளைத் தொகுத்து இங்கு அளித்து வருகிறோம். ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் புகழ்கொண்ட திருக்கோயில் திருப்பணியும் இப்போது நடக்கிறது. இதற்குப் பொருள் தந்து, வாழ்க்கைப் பொருளைப் பெற்றுவிட்டீர்களா? கிடைத்தற்கரிய இந்த வாய்ப்பை நழுவவிடாமல் இப்பணிக்குத் திரவியம் அனுப்ப வேண்டிய முகவரி: செயலர், திருப்பணிக் கமிட்டி, ஸ்ரீ காமாக்ஷியம்பாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம்.





# எதிர் கால டாக்ஸி!

நகரங்களில் சாலைப் போக்குவரத்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றி யமைக்க ஜப்பானிய மோட்டார் கார் நிறுவனம் டோயோடா திட்டமிட்டிருக்கிறது.

டவுன் ஸ்பைடர் என்ற இந்தத் திட்டத்தின்படி நீர்ச் சிலந்திகள் எப்படிக் குளத்தில் இங்குமங்கும் பாய்ந்து செல்கின்றனவோ, அதுபோல் இருவர் அமரக் கூடிய சின்னஞ்சிறு கார்களைப் பயன்படுத்தி நகரில் துரிதப் பிரயாணம் செய்யலாம். சொந்தக் கார் போல் நீங்களே ஓட்டலாம்.

நகரச் சாலைகளில் இருநூறு மீட்டர்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ஸ்பைடர் ஸ்டாண்டுகள் இருக்கும். உங்கள் ஆபீஸ் அருகிலும் வீட்டினருகிலும் கடைத் தெரு பக்கத்திலும் இன்னும் பல்வேறு இடங்களிலும் இருக்கும். இந்த ஸ்டாண்டுகளில் எப்போதுமே மினி கார்கள் சில தயாராய் நின்று கொண்டிருக்கும். அருகேயுள்ள ஸ்பைடர் ஸ்டாண்டை அடைய நீங்கள் அதிக தூரம் நடக்க வேண்டியிராது.

டிரைவிங் லைசென்ஸைக் காட்டி டவுன் ஸ்பைடர் நிறுவனத்தின் அங்கத்தினராகும் உங்களுக்கு ஓர் அட்டை தரப்படுகிறது. இதில் உங்கள் பெயர், விலாசம், அங்கத்தினர் எண் தவிர இன்னும் சில சங்கேதக் குறிகளும் இருக்கும். இந்தக் கார்டை ஸ்டாண்டிலுள்ள ஸ்பைடர் கார் ஒன்றில் குறிப்பிட்ட துவாரத்தில் நுழைத்ததும் காரின் கதவு தானாகவே திறந்துகொள்கிறது. நீங்கள் உங்கள் மனைவியுடனோ காதலியுடனோ அல்லது நண்பனுடனோ காரில் ஏறிக் கொண்டு காரியாலயத்துக்கோ சினிமாவுக்கோ அல்லது கடைத் தெருவுக்கோ போகலாம். உரிய இடத்தை அடைந்ததும் அங்கே அருகில் உள்ள ஸ்பைடர் ஸ்டாண்டில் காரை விட்டு விட்டுக் கதவைச் சாத்தி முதலில் செருகிய கார்டைத் திரும்ப உருவிக் கொண்டு விடவேண்டும். அந்த ஸ்பைடர் கார் இனி வேறு ஒரு நபருக்குப் பயன்படும். உங்கள் வேலை முடிந்ததும் நீங்கள் வீடு திரும்ப வேறு ஒரு ஸ்பைடர் காரைப் பயன்படுத்தலாம்.

ஸ்பைடர் ஸ்டாண்டில் பணியாட்கள் இருப்பார்கள். அவர்கள் காரில் போதிய அளவு பெட்ரோல் இருக்கிறதா, சுத்தமாய் இருக்கிறதா என்பன போன்ற விஷயங்களைக் கவனித்துக் கொள்வார்கள்.

ஸ்பைடர் காரைப் பயன்படுத்த யாரும் அவ்வப்போதே காசு கொடுக்க வேண்டிய இல்லை. நீங்கள் கார்டைச் செருகியவுடன் தானியங்கு முறையில் ஸ்பைடர் தலைமைச் செயலகத்துக்கு ரேடியோச் செய்தி போகிறது, இன்ன எண்ணுள்ள கார்டுக்காரர் ஸ்பைடர் காரைப் பயன்படுத்துகிறார் என்று. காரை நிறுத்திவிட்டுக் கார்டைத் திரும்ப உருவும் போது மீண்டும் நீங்கள் பயணப்பட்ட தூரம் எவ்வளவு என்பது தானியங்கு முறையில் தலைமையகத்தில் பதிவாகிறது. எல்லாம் கம்ப்யூட்டர்கள் கவனித்துக்கொள்கின்றன. நீங்கள் பயணம் செய்த தூரத்துக்கான கட்டணம் மாதாந்தர பில்லாகத் தயாரிக்கப்படுகிறது. பில் நேரடியாக உங்களுடைய பாங்குக்குப் போகும். பாங்கு பணத்தைக் கொடுத்துவிட்டு உங்கள் கணக்கில் செலவுப் பத்தியில் எழுதிவிடும்.

ஆக உங்களுக்குச் சொந்தக் காரைப் பயன்படுத்துவது போன்ற எண்ணமே ஏற்படும். அத்தனை வசதிகள் இதில் உண்டு. பாங்கிக் கணக்கில் மட்டும் போதிய அளவு பணம் இருக்க வேண்டும். டவுன் ஸ்பைடர் அனுப்பும் பில் பாங்கினால் நிராகரிக்கப்பட்டால் அடுத்தாற்போல் நீங்கள் ஒரு கார்க் கதவைத் திறக்க அட்டையைச் செருகும்போது கதவு திறந்து கொள்ளாது! இதையும் தானியங்கு முறையில் கம்ப்யூட்டரே கவனித்துக் கொள்கிறது!

எந்த ஸ்டாண்டிலாவது தயாராய்க் காத்திருக்க வேண்டிய கார்களின் எண்ணிக்கை

குறைந்தால் உடனே அங்கே சில கார்கள் வேறு ஸ்டாண்டிலிருந்தோ, தலைமையகத்தி லிருந்தோ அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஸ்பைடர் கார்கள் மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை என்று பல வர்ணங்களில் இருக்கும். உங்கள் காதலி அணிந்திருக்கும் கிளிப் பச்சை நிறப் புடவைக்கு ஏற்ற நிறமுள்ள காரில் நீங்கள் இருவரும் ஏறிக் கொள்ளலாம்!

இப்போதெல்லாம் சொந்தமாகக் கார் வைத்திருப்பவர்கள் ஆபீஸ் அருகே காரை நிறுத்தினால் ஆறு மணி நேரத்துக்கு மேல்




அந்தக் கார் சும்மா இருந்து கொண்டிருக்கிறது. இப்படி எத்தனை எத்தனை கார்களின் இயக்கத் திறன் பயன்படுத்துவாரின்றி வீண் விரயமாகிக் கொண்டிருக்கிறது என்று கணக்குப் பார்க்கின்றனர் ஜப்பானியர். தேசிய நோக்கில் பார்க்கும்போது இது பெரிய நஷ்டமே என்கின்றனர். டவுன் ஸ்பைடர் முறையில் இந்த நஷ்டம் தவிர்க்கப் படுகிறது. கார்கள் அதிக நேரம் சும்மா நிற்ப தில்லை. அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகின் றன. அவரவர் உபயோகத்துக்கு அவரவரும் பணம் கொடுத்து விடுகின்றனர்.


மேலும் இந்த முறையினால் சாலைகளில் நெரிசல் குறையும் என்றும் காரை நிறுத்து வதற்கு இடமில்லாமல் தவிப்பது தவிர்க்கப் படுகிறது என்றும் டோயோடா நிறுவனம் கூறுகிறது. இருவர் பயணப்படக் கூடிய சிறிய கார்களாதலால் சிக்கனமும் இதில் உண்டு. காரை ஆங்காங்கே நிறுத்த இடம் கண்டு பிடிப்பதும் சுலபம். எதிர்காலத்தில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும்போது சொந்தக் கார் வைத்துக் கொள்பவர்களின் எண்ணிக் கையே மிகவும் குறைந்து விடும். சொந்தக் கார் வைத்துக் கொள்வதை விட இது வசதி. பெட்ரோல் போடுவது, பழுது பார்ப்பது, கழுவித் துடைப்பது, 'ஸர்வீஸ்' செய்வது போன்ற வேலைகள் மிச்சம்.

டவுன் ஸ்பைடர்களில் இன்னொரு சௌகரி யமும் உண்டு. உங்கள் வேலை சீக்கிரம் முடிந்து விடும் என்றால் காரை மாற்றாமல் முதலில் எடுத்த காரையே மீண்டும் பயன்படுத்த லாம். டிரைவர் ஆசனத்துக்கு எதிரே இருக் கும் 'டிரான்ஸிட்' என்று எழுதப்பட்டுள்ள ஒரு பட்டனை அழுத்தி விட்டால் பிறகு அந்தக் காரை வேறு யாரும் பயன்படுத்த முடியாது. சாலை ஓரமாக நிறுத்திவிட்டு உங்கள் கைப் பை முதலானவற்றை உள் ளேயே வைத்துக் கதவைச் சாத்திக் கொண்டு போய் விடலாம். வேலை முடிந்து திரும்பும் போது முன்போலவே உங்களிடமுள்ள அட்டையைத் துவாரத்தில் செருகினால் உங்களுக்கு மட்டுமே கதவு திறக்கும்.

டவுன் ஸ்பைடர் திட்டம் ஜப்பானில் நடந்த எக்ஸ்போவில் உலக நாடுகள் அனைத் தின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. பெரிய நகரங்களில் சாலைப் போக்குவரத்து நெரிசல் என்பது ஜப்பானுக்கு மட்டும் உள்ள பிரச்னை அல்லவே.



எதிர்காலத்தில் இந்தத் திட்டம் அமு லாகும்போது பெட்ரோலுக்குப் பதில் சேகரித்து வைக்கப்படும் மின் சக்தியாலோ அல்லது வேறு ஏதாவது எரிபொருளைப் பயன் படுத்தியோ இந்தக் கார் இயங்கக் கூடுமானால் அது அரபு நாடுகளுக்குப் பாடம் கற்பித்த தாகவும் முடியும். யார் கண்டார்கள், இவ் வளவு தூரம் சிந்தித்துத் திட்டமிட்டு அமுல் படுத்தத் தயாராயுள்ள ஜப்பானியர் அதை யும் சாதித்துக் காட்டினால் அதிசயப்படுவதற் கில்லை.



மேலட்டையில் வண்ணப் புகைப்படம்:
**பரணிநாதன்**

செய்தித் தொகுப்பு : **குட்டிகிருஷ்ணன்**



## இன்பமயமான கனவுக் காட்சி...
## மபத்லால் துணிமணிகளின் ஆட்சி!

இன்பமயமான ஒரு கனவு...
அழகு ஆட்சி நடத்தும் உங்கள்
துணிமணிகளைப் பார்க்கும்
விழிகளெல்லாம் உங்களை விட்டு
அகல மறுக்கின்றன. திடுமென
விழிப்பு...கனவல்ல கனவே என்பதை
உணர்கிறீர்கள். பாலியெஸ்டர்
இழைகலந்த கவின்மிகு ஷர்ட்டிங்,
ஸூட்டிங் அல்லது ரெடிமேட்
ஆடைகள் அணிந்த நீங்கள்
உண்மையிலேயே கவர்ச்சியின்
நடுநாயகமாக விளங்குகிறீர்கள்!

**மபத்லால் க்ரூப்**
அளிக்கும்
கீர்த்திவாய்ந்த துணிமணிகள்

டெரோஸெல்
பாலியெஸ்டர் இழைகலந்த
ஷர்ட்டிங்குகள்

டெரோ:ஃபில்
பாலியெஸ்டர் :ஃபிலமெண்ட்
யார்ன் துணிகள்

எஸ்டர்காட்
பாலியெஸ்டர்
இழைகலந்த
ஸூட்டிங்குகள்

மபத்லால் அப்பேரல்
அளிக்கும்
கவர்ச்சிமிக்க
ரெடிமேட்
ஆடைகள்

AIYARS-M.339 TM

## படித்துப் பாருங்கள்

# வட இந்தியருக்குத் தியாகையர்

நெளிவு சுளிவுகளும் அசைவுகளும் மிருதுள்ள கர்நாடக சங்கீதத்தை ஸ்வரக் குறிப்புகளின் மூலம் பூரணமாகப் பயில்வது கடினம் தான். பாடிக் கேட்டாலே அதன் நுணுக்கங்கள் புரியும். எனினும் குருமுகமாகக் கற்பதை விரிவுபடுத்திக் கொள்ள ஸ்வரக் குறிப்பு (நொடேஷன்) வெகுவாக உதவி புரியும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் வாரணாசி ஹிந்து சர்வகலாசாலை விரிவுரையாளராகிய ஸ்ரீரங்கம் ஆர். கண்ணன் அவர்களின் 'தியாகராஜ கிருதி சங்க்ரஹம்' ஒரு வரவேற்கத் தக்க பிரசுரமாகும். ஹிந்துஸ்தானி இசையில் வழங்கும் பாத்கண்டே நொடேஷனின்படி இந்நூலில் அவர் ஐம்பது தியாகராஜ கிருதிகளைத் தேவநாகரி லிபியில் அளித்திருக்கிறார். கிருதிகளின் பொருளையும் ஹிந்தியில் சுருக்கமாகத் தந்திருக்கிறார். தென்னிந்தியாவின் முடிமணியான சாகித்தியகர்த்தரின் அமர கீர்த்தனங்களை வட இந்தியர்களும் பயில வசதி தரும் இந்த நூல் இசைக்கு மட்டுமின்றி, வடக்கு தெற்கு இசைவுக்கும் உதவி புரிவதாகும். சமீபத்தில் நடந்த மியூஸிக் அகாடெமி விழாவின்போது இவ்வருடத் தலைவர் ஸ்ரீமதி பாலசரஸ்வதியால் இந்நூல் வெளியிடப்பட்டபோது காசி ஹிந்து சர்வகலாசாலையைச் சேர்ந்த வட இந்தியர்களான ஸ்ரீ தீக்ஷித் தம்பதியர் இந்த ஸ்வரக் குறிப்புக்களின்படியே நமது தியாகையரின் கீதங்களைப் பாடி அவையோரை மகிழ்வித்தனர். கலை மூலம் தேச ஒற்றுமை உண்டாக்கும் நூல் என்னும் வகையில் இதனைப் புது தில்லியிலுள்ள மத்திய சங்கீத நாடக அகாதெமியினர் வெளியிட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும்.

Thyagaraja Kriti Sangrat, Published by Central Sangeet Natak Academy, New Delhi.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# கம்பன் காவிய சாரம்

சொல்லப்பட்டது, புத்தக வெளியீட்டு விழா என்று. நடந்ததோ கம்பர் விழாவாக!

சமீபத்தில் சென்னை ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் திரு எஸ். நல்லபெருமாள் எழுதிய கம்பன் காவிய சாரம் என்ற நூலின் வெளியீட்டு விழா நடைபெற்றது. பேச்சாளர் அனைவரும் கம்பனிடம் காதல் கொண்டவர்கள். எனவே விழா கம்பர் விழாவாகவே மாறிவிட்டது. நீதிபதி இஸ்மெயில் அவர்கள் தலைமை வகித்தார்.

திரு எல். நாராயணன் செட்டியார் அவர்கள் ரூ. 100 கொடுத்து முதல் பிரதியை வாங்கி அரிய சொற்பொழிவும் நிகழ்த்தினார்.

திரு எஸ். நல்லபெருமாள் அவர்கள் தமது இப்புத்தகத்தில் உமறுப் புலவர் பாடிய சீறாப்புராணத்தையும் மேற்கோள் காட்டியிருப்பதைப் பாராட்டிப் பேசினார் நீதிபதி இஸ்மெயில்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், பக்திக்காக இல்லாவிட்டாலும் தாம் கம்பருடைய கவி நயத்துக்குக் கட்டுப்பட்டவர் என்பதைக் குறிப்பிட்டார்.


பொள்ளாச்சி தொழிலதிபர் திரு என். மகாலிங்கம் அவர்கள் திரு எஸ். நல்லபெருமாள் அவர்கள் எத்தகைய சிறந்த பொறி இயல் வல்லுனர், எத்தனை பொறியியல் கூடங்களைத் தொடங்க உதவியிருக்கிறார். அவரைப் பூரணமாக அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டால் இன்னும் எத்தனை தொழிற்கூடங்கள் உருவாகத் தமிழ்நாட்டில் இடமுண்டு என்று கூறினார். இப்படிப்பட்ட தொழிலதிபரா நூல் எழுதும் அளவுக்குக் கம்ப ரஸிகராக இருக்கிறார் என்று சபையோர் வியந்தனர்.

திரு எஸ். நல்லபெருமாள் அவர்கள் ஆங்கில இலக்கியங்கள், வடமொழி இலக்கியங்கள் தமிழ் இலக்கியங்கள் எல்லாம் ஆழமாகப் படித்திருக்கிறார். ஆகவே, கம்பரைப் படிக்கும் போது மேற்கண்ட இலக்கியங்களிலிருந்தெல்லாம் கம்பன் கற்பனைக்கு ஒத்துப்போகக்கூடிய வரிகள், பகுதிகள் அவருக்கு நினைவுக்கு வருகின்றன. அவற்றை யெல்லாம் ஆங்காங்கே நினைவுபடுத்திக் கொண்டே போகிறார். தமது புலமையைக் காட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் கம்பரை மறந்து போகாமல் கம்பர் கவி நயத்தைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டும் வகையில் அவ்விலக்கியத்தின் அழகுகளைத் தொட்டுத் தொட்டுக் காட்டிக் கொண்டே செல்வது இந்த நூலின் மிகச் சிறந்த அம்சம். கம்ப ராமாயண ரஸிகர்களுக்கு ஓர் அரிய பொக்கிஷம் இந்நூல்.

பிரசுரம்: வானதி பதிப்பகம், பாண்டி பஜார், சென்னை-17. விலை: ரூ. 7-00



'கம்பன் காவிய சாரம்' வெளியீட்டு விழா. நாவலர் பேசுகிறார். அமர்ந்திருப்போர்: திரு மகாலிங்கம், திரு நல்லபெருமாள், திரு இஸ்மெயில்.


விஜயா & சுரேஷ்
கம்பைன்ஸ்
திருமாங்கல்யம்
D.ராமாநாயுடு
வின்சென்ட்
ஆனந்த் · பிராட்வே · மேகலா
(70MM) A/C

இந்தியர் என்ற இயல்பை மறந்து பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் சண்டை, பூசல்களில் இறங்குவதும், அதை யொட்டி பந்த் என்றும் ஹர்த்தால் என்றும் நடத்துவதும் எவ்வளவு அபத்தம் என்பதை பாபு ராவ் பட்டேல் இந்தக் கடிதத்தில் அங்கத பாணியில் அழுத்தமாக வெளியிடுகிறார் :

**பிளிட்ஸ் ஆசிரியருக்கு,**

என் மனைவி சுசீலா ராணியின் பெற்றோர் கர்நாடக மாநிலத்தில் உள்ள கூண்டாபூர் என்ற ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். என் மனைவி பிறந்ததோ தமிழ்நாட்டைச் சேர்ந்த சென்னையில்.

சென்ற 31 ஆண்டுகளாக அவள் தமிழ், கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்தவள் என்ற பிரக்ஞையே இல்லாமல் மனமொத்து வாழ்ந்து வருகிறோம். அவள் கொங்கிணி மொழியில் பேசுவாள். அம்மொழி சமையலறையிலும், படுக்கை அறையிலும் பேசப்படும்போதுதான் இனிமையாக இருக்கும். அதுவும் என் மனைவி பேசினால்தான் இனிக்கும் — என் மாமியார் பேசினால் அல்ல!

நம் தலைவிதியை ஆளப் பிறந்தவர்கள் டிசம்பர் 13ம் தேதி ''பாம்பே பந்த்'' என்று அறிவித்தார்கள். என் வயிற்றுப் பிழைப்புக்காக என் காரியாலயத்துக்கு நான் போவதைத் தடுத்தார்கள். வீட்டில் வேலை இல்லாமல் உட்கார்ந்திருந்த நான் திடீர் என்று மகாராஷ்டிரக்காரன் ஆனேன். அவளுடைய சமையல் அறையை மூட முயன்றேன் — ஏனெனில் அது உடுப்பி சமையல் அறையல்லவா?

பொதுவாக என் மனைவி இனிமையும் அமைதியும் பொருந்தியவள்தான். இப்போது அவள் கோபத்துடன் கையில் அப்பளாக் குழவியைக் காட்டிக் கொண்டு, என் மண்டையைப் பிளக்கப் போவதாகப் பயமுறுத்திய படி நின்றாள். அவள் தன் சமையல் கட்டில் வேலை செய்யும் ஒரு முஸ்லிம், ஒரு தமிழன், ஒரு மராட்டி ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கப் போவதாக மிரட்டினாள்.

இவளுடைய தமிழ் — கர்நாடகக் குண்டாயிஸத்திலிருந்து இந்த ஏழை எளிய மகாராஷ்டிர எலியாகிய என்னைக் காப்பாற்றும்படி பம்பாய் சிங்கம் பால் தாக்கரேக்கு டெலிபோன் செய்தேன். அவர் டெலிபோன் பேசும் குழலை எடுத்துக் கீழே வைத்து விட்டார் போலும்! நான் எவ்வளவு முயன்றும் அவர் கிடைக்க வில்லை.




# தேடுங்கள், ஒரு மனைவியை!

அடுத்து ஆளும் மகாராஷ்டிர முன்னூறு ஆகிய முதன் மந்திரி வஸந்த ராவ் நாயக்குக்கும் டெலிபோன் செய்து பார்த்தேன். அவரது டெலிபோனும் செத்துக் கிடந்தது! என் இந்தத் தமிழ் — கர்நாடக மனைவியுடன் இனியும் தொடர்ந்து வாழ்ந்தால் என் உயிருக்கே ஆபத்து வரும் போலிருக்கிறது.

ஆகவே, பால் தாக்கரேயும், வஸந்த ராவ் நாயக்கும், என் மனைவியினிடமிருந்து நான் விடுபட என்ன யோசனை சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அது மட்டுமல்ல; இவளைப் போலவே அழகும் பண்பும் வாய்ந்த ஒரு மகாராஷ்டிர மனைவியை இந்த எழுபது வயதுக்காரனாகிய எனக்கு அவர்கள் தேடித் தருவார்களா?

இப்படிக்கு,

**பாபு ராவ் பட்டேல்**



## ஹர்த்தால் பிறந்த விதம்

இப்போது நமது நாட்டில் எதற்கெடுத்தாலும் ''ஹர்த்தால்'', ''பந்த்'' என்று நடத்துகிறார்களே இந்தச் சொற்கள் எப்படித் தோன்றின என்று பார்க்கலாம்.

''ரௌலட்'' என்னும் அடக்குமுறைச் சட்டத்தை எதிர்த்துத்தான் நம் நாட்டில் முதன் முதலாக 'ஹர்த்தால்' அநுஷ்டிக்கப் பட்டது.

முன்பெல்லாம் எல்லாக் கடைகளையும் அடைக்கச் செய்ய, ஒவ்வொரு கடைகளின் பூட்டுக்களிலும் ஓர் எலும்புத் துண்டைச் செருகி வைத்துவிடுவது வழக்கமாம். அப்படி எலும்புத் துண்டைப் பார்க்கும் கடைக்காரர்கள் அன்று கடையைத் திறக்க மாட்டார்களாம்.

''ஹட்'' என்ற ஹிந்தி வார்த்தை எலும்பையும், ''தால்'' என்ற வார்த்தை பூட்டையும் குறிப்பிடுவன. அதனால்தான் கடையடைப்புக்கு ''ஹர்த்தால்'' என்று பெயர் வந்தது.

இந்த எலும்பு சம்பந்தப் பட்ட அநாசார வார்த்தையை உபயோகிக்க அன்றைய தேசியவாதி பகவன்தாஸ் (ஸ்ரீபிரகாசாவின் தந்தை) விரும்பவில்லை. ''அந்தந்தக் காரியத்தை அப்படி அப்படியே போடு'' என்று பொருள்படும் ''கார்-பார்-பந்த்'' என்னும் ஹிந்தி வார்த்தைகளை 'ஹர்த்தா'லுக்குப் பதில் உபயோகித்தார். பின்பு அது சுருங்கி ''பந்த்'' என்று ஆகிவிட்டது.

மு. பொன்னராஜ்



# சிவகாமியின் சபதம்

### மூன்றும் அத்தியாயம்

## சிநேகப் பிரதிக்ஞை

ஒரு பக்கம் மாமல்லருடன் சல்லாபம் செய்துகொண்டு வந்தபோதே, மற்றொரு பக்கத்தில் காஞ்சிமா நகரின் விசாலமான இராஜ வீதிகளையும், வீதியின் இருபுறமும் காணப்பட்ட மாட மாளிகைகளையும், ஈ மொய்ப்பது போல் ஜனக் கூட்டம் நிறைந்த கடை வீதிகளையும், இடையிடையே தீபாலங்காரங்களுடன் விளங்கிய சிவாலயம் விஷ்ணு ஆலயங்களையும், தெய்வத் தமிழை வளர்த்த சைவ, வைஷ்ணவமடங்களையும், பௌத்தர் சமணர்களின் கோயில்களையும், வேத கோஷம் எழுந்த ஸம்ஸ்கிருத கடிகைஸ்தானங்களையும் சிற்ப சித்திர கலா மண்டபங்களையும் பரஞ்சோதி கண்கொட்டா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு வந்தார்.

எட்டு மாதங்களுக்கு முன்பு அவர் தெற்குக் கோட்டை வாசல் வழியாகப் பிரவேசித்த அன்றிரவு இருந்ததைக் காட்டிலும் இன்று நகரில் கலகலப்பும் களையும் அதிகமாக இருந்தன. அன்றைக்கு யுத்தச் செய்தி திடீரென்று வந்திருந்தபடியாலும், கோட்டை வாசல்கள் சாத்தப்பட்டு நகரெல்லாம் ஒற்றர் வேட்டை நடந்து கொண்டிருந்த படியாலும், காஞ்சிநகரம் அப்படிப் பொலிவிழந்து காணப்பட்டது போலும்! அந்த ஆரம்ப பீதிக்குப் பிறகு ஜனங்கள் மறுபடியும் ஒருவாறு மனோதைரியம் அடையவே, எல்லாக் காரியங்களும் வழக்கம் போல் நடந்து வருகின்றன போலும்! ஆனால் இதெல்லாம் எத்தனை நாளைக்கு? அதி சீக்கிரத்தில் மீண்டும் இந்தச் சௌந்தரிய நகரம் அழகும் பொலிவும் இழந்து இருளடைந்து ஜன சூன்யமாகத் தோன்றப் போகிறதல்லவா? — இந்த எண்ணங்கள் எல்லாம் மாமல்லரின் ரதத்தில் வந்து கொண்டிருந்தபோது பரஞ்சோதியின் உள்ளத்தில் இடையிடையே எழுந்து கொண்டிருந்தன.

ஏகாம்பரநாதர் கோயில் சந்நிதிக்கு வந்ததும், அந்தத் திவ்விய சந்நிதியின் மகோந்நதமான தோற்றத்திலிருந்தே அதுதான் ஏகாம்பரர்

அமரர்
கல்கி

கோயிலாயிருக்க வேண்டுமென்று பரஞ்சோதி ஊகித்து, தம்முடைய ஊகம் சரிதானா என்று மாமல்லரை வினவினார்.

''ஆம்; தளபதி! இந்தச் சந்நிதிக்கு இதற்கு முன்னால் நீர் வந்ததே இல்லையல்லவா?'' என்று மாமல்லர் கேட்டார்.

''இல்லை; வந்ததில்லை. முன் தடவை இந்த நகரத்துக்குள் நான் பிரவேசித்த போது ஏகாம்பரர் சந்நிதியைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். ஆனால் இந்த இடம் வரையில் அன்றைக்கு வந்து சேரவில்லை. கொஞ்சம் ரதத்தை நிறுத்தச் சொல்லுங்கள். காஞ்சியின் இருதய ஸ்தானத்தை நன்றாகப் பார்க்கிறேன்'' என்றார் பரஞ்சோதி.

கோயிலுக்குள்ளே ஒரு தீப வரிசைக்குப் பின் இன்னொரு தீப வரிசையாக முடிவின்றி ஜொலித்துக் கொண்டிருந்த அலங்கார தீபங்களையும், கோயிலுக்கெதிரே கம்பீரமான தேர் நின்ற நாற்சந்தியையும், தேரடியிலிருந்து நாற் பக்கத்திலும் பிரிந்து சென்ற தேரோடும் வீதிகளையும், குன்றுகளைப் போலப் பல வகைப் புஷ்பங்கள் குவிந்து கிடந்த கடைகளையும், தேங்காயும் கதலியும் மலைமலையாகக் குவிந்து கிடந்த கடைகளையும், அற்புதமான சிற்பத் திறனுடைய தூண்களின் மேலே அமைந்த நூற்றுக்கால் மண்டபங்களையும் பரஞ்சோதி பார்த்துவிட்டு, ''ஆஹா! புலிகேசியின் காதலுக்குக் காரணம் இல்லாமற் போகவில்லை!'' என்றார்.



''புலிகேசியின் காதலா? என்ன சொல்கிறீர் தளபதி?'' என்று மாமல்லர் கேட்டார்.

''புலிகேசி இந்தக் காஞ்சி சுந்தரியின் மேல் கொண்டிருக்கும் காதலைப் பற்றி வீரர் வஜ்ரபாஹு எனக்குச் சொன்னார். காஞ்சி என்னும் பெயரைக் கேட்டதும் காதலியின் பெயரைக் கேட்டால் காதலனுடைய முகத்திலே என்ன மாறுதல் உண்டாகுமோ, அம்மாதிரி மாறுதல் புலிகேசியின் முகத்தில் உண்டாயிற்றாம்!''

''தளபதி! வீரர் வஜ்ரபாஹு எவ்வளவுதான் சாமர்த்தியசாலியானாலும் அப்படித் துணிந்து புலிகேசியிடம் போயிருக்கக்கூடாதல்லவா? உம் கருத்து என்ன?'' என்று மாமல்லர் கேட்டார்.

அதற்கு மறுமொழி சொல்லாமல், பரஞ்சோதி, ''பிரபு! இங்கே திருநாவுக்கரசர் மடம் எது?'' என்றார்.

''அதோ வெறுமையாய்க் கிடக்கிறதே, அந்தக் கட்டிடம்தான்...''

''ஆஹா! இந்த மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காகத்தான் வந்தேன். நான் கல்வி கற்பதற்காக வந்த முகூர்த்தம் மடத்தையே மூடும்படியாகி விட்டது!'' என்றார் பரஞ்சோதி.

நரசிம்மவர்மர் மீண்டும் இளநகை புரிந்து விட்டு, ''பல்லவ குலத்துக்கு நீர் எவ்வளவோ மகத்தான சேவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும்போது நாவுக்கரசரின் சீடராக நீர் எப்படிப் போயிருக்க முடியும்? அதோடு, என்னிடம் நீர் தமிழ் பயில வேண்டும் என்பதும் தெய்வத் தமிழ் மொழியை அளித்த இறைவனுடைய சித்தமாக ஏற்பட்டிருக்கிறதே!'' என்றார்.

''இதைத் தெரிந்து கொண்டுதான் அன்றிரவு அந்த யானை மதங் கொண்டு ஓடி வந்ததோ, என்னவோ? அதன் காரணமாகத்தானே இப்படியெல்லாம் நேரிட்டது?'' என்றார் பரஞ்சோதி. உடனே சட்டென்று நினைத்துக் கொண்டு, ''ஐயா! ஆயனரும் சிவகாமியும் சுகமாக இருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

''சிவகாமி'' என்ற பெயரைக் கேட்டதும் மாமல்லரின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பரஞ்சோதி கவனியாமல் போகவில்லை. 'ஆஹா! காதலைப் பற்றிய வஜ்ரபாஹுவின் கூற்றுக்கு



மாமல்லரே உதாரணமாக இருக்கிறார்' என்று மனத்தில் எண்ணிக் கொண்டார்.

மாமல்லர் மறுமொழி கூறியபோது அவருடைய குரலிலே கூட மாறுதல் இருந்தது. ''சுகமாக இருக்கிறார்கள் என்றுதான் அறிகிறேன், தளபதி! ஆனால், அவர்களை நான் பார்த்துப் பல மாதங்கள் ஆயின. ஆயனரின் பழைய அரண்ய வீட்டிலேயேதான் அவர்கள் இருக்கிறார்கள். சக்கரவர்த்தியின் கட்டளைப்படி துறைமுகத்தில் திருப்பணி செய்த கல் தச்சர்களையெல்லாம் பாரத மண்டபம் கட்டுவதற்கு அனுப்பிய பிறகு ஆயனரும் மாமல்லபுரத்திலிருந்து தமது அரண்ய வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டார்'' என்று மாமல்லர் கூறியபோது, அவருடைய



வார்த்தைகளில் முன்னே காணப்படாத உணர்ச்சி தொனித்தது.

மறுபடியும் மாமல்லர் பரஞ்சோதியின் கரங்களை அழுத்திப் பிடித்துக் கொண்டவராய் உணர்ச்சி ததும்பிய குரலில் கூறினார். ''தளபதி! பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எவ்வளவோ சேவை சென்ற எட்டு மாதங்களில் செய்திருக்கிறீர்; இன்னும் செய்யப் போகிறீர். ஆனால், அன்றிரவு நீர் செய்த வீரச் செயலைப் போன்ற மகத்தான சேவை வேறொன்றும் இருக்க முடியாது. ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்றினீர் அல்லவா? அந்தச் செயலை நான் எவ்வளவு தூரம் பாராட்டுகிறேன் என்பதற்கு இதோ அடையாளத்தைப் பாரும்!'' என்று கூறி, அன்று மதயானை மீது பரஞ்சோதி எறிந்த வேலை எடுத்து நீட்டினார்.

மாமல்லரின் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளினால் பரஞ்சோதியின் மனமும் கனிந்திருந்தது. எனவே, அவர் மறுமொழி கூற முடியாதவராய், மாமல்லர் நீட்டிய வேலை வாங்கிக் கொள்வதற்காக ஒரு கையினால் அதன் அடிப் பகுதியைப் பிடித்தார்.

நரசிம்மவர்மர் வேலைக் கொடுக்காமல் தாமும் அதை ஒரு கையினால் பிடித்துக்கொண்ட வண்ணம் சொன்னார்: ''இந்த ஏகாம்பரர் சந்நிதியில் நான் எத்தனையோ தடவை எனக்கு ஓர் உற்ற நண்பனை அளிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்திருக்கிறேன். அந்தப் பிரார்த்தனையின் பயனாகவே நீர் இந்தக் காஞ்சிக்கு வந்ததாக நம்புகிறேன். தளபதி! இந்தச் சந்நிதியிலேயே நீரும் நானும் இன்று சிநேகப் பிரதிக்ஞை செய்து கொள்வோம். ஆயனரையும் சிவகாமியையும் காத்த இந்த வீர வேலின் மீது ஆணை வைத்து நம்முடைய நட்பை நிலைப்படுத்திக்கொள்வோம்.''

ஏகாம்பரநாதரின் திருச் சந்நிதியில் அப்போது தீபாராதனைக்குரிய ஆலாட்சி மணி ''ஓம் ஓம்'' என்று ஒலித்தது.

அன்றிரவு கண்ணபிரான் கமலியிடம் சொன்னான்: ''என் கண்ணே! உன்னுடைய சிநேகிதி சிவகாமியின் சக்களத்தியை இன்று ரதத்தில் வைத்து ஓட்டிக்கொண்டு வந்தேன். அதை நினைத்தால் எனக்குத் துக்கம் துக்கமாய் வருகிறது!''

''இது என்ன பிதற்றல்? நீ சொல்வது உண்மையானால் அவன் யார் என்று இப்பொழுதே சொல்லு! உடனே போய் விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு வருகிறேன்'' என்றாள் கமலி.

''அவள் இல்லை, அவன்! மதயானை மேல் வேல் எறிந்து உன் சிநேகிதியைக் காப்பாற்றிய வாலிபன் போர்க் களத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறான். அவன் இப்போது காஞ்சிக் கோட்டையின் தளபதியாம். அவனோடு குமார சக்கரவர்த்தி குலாவியதைப் பார்த்தால் சிவகாமியைக் கூட மறந்து விடுவார் போலத் தோன்றியது.''

''உனக்குத் தெரிந்த இலட்சணம் அவ்வளவுதான். அந்தப் பிள்ளையின் மேல் மாமல்லருக்கு ஏன் அவ்வளவு பிரியம் என்று நான் சொல்லட்டுமா? என் தோழியைக் காப்பாற்றிக்கொடுத்ததற்காகத்தான், கண்ணா! இதிலிருந்தே மாமல்லரின் மனம் எவ்வளவு உறுதியாயிருக்கிறதென்று தெரிகிறது!'' என்றாள் கமலி.

''உன் புத்திக் கூர்மையே கூர்மை! கேவலம் ஒரு ரத சாரதியைப் போய் நீ கல்யாணம் செய்து கொண்டாயே! இராஜ்யம் ஆளும் மதி மந்திரியை அல்லவா நீ மணந்து கொண்டிருக்க வேண்டும்!'' என்று கண்ணன் சொன்னான்.

''அதனாலேதான் காதலுக்குக் கண்ணில்லை என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது; உனக்குத் தெரியாதா?'' என்றாள் கமலி.

## நான்காம் அத்தியாயம்

# சிவகாமியின் பிறந்தநாள்

ஆகா! சிவகாமியை நாம் பார்த்து எத்தனை காலம் ஆகிவிட்டது! காஞ்சியை விட்டு வெளியே போகக் கூடாது என்று மாமல்லருக்குத்தான் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறாரே தவிர, நாம் போவதற்கு எவ்விதத் தடையும் இல்லையல்லவா? எனவே, அரண்யம் மத்தியில் உள்ள ஆயனரின் சிற்ப மாளிகைக்கு உடனே செல்வோம்.

ஆயனரின் வீட்டை நெருங்கும்போது எட்டு மாதங்களுக்கு முன்பு அங்கே நாம் கண்ட காட்சிக்கும் இப்போது நாம் காணும் காட்சிக்கும் உள்ள வித்தியாசம் நம்மைத் தூக்கிவாரிப் போடுகிறது. அப்போது நாம் கண்ட கலகலப்பு இப்போது அங்கே இல்லை. 'கல் கல்' என்ற கல்லுளியின் சத்தம் கேட்கவில்லை. ஆயனரின் சீடர்கள் ஆங்காங்கு மரங்களின் அடியில் உட்கார்ந்து சிற்ப வேலை பயின்று கொண்டிருக்கவில்லை.

காட்டு மரங்களின் தோற்றத்திலே கூட வித்தியாசம் இருக்கிறது. முன்னே நாம் வந்திருந்தபோது வஸந்த காலம். விருட்சங்கள் புதிய தளிர்கள் விட்டிருந்தன. மாமரங்களில் இளம் தளிர்களுடனே பூங்கொத்துக்கள் குலுங்கின. அரச மரங்களும் ஆல மரங்களும் தங்க நிற இலைகளால் மூடப்பட்டிருந்தன.

இப்போதோ, மரங்களில் முற்றிய, கரும் பசுமை பொருந்திய இலைகளும் பாதி காய்ந்த சருகுகளும் காணப்படுகின்றன. பூமியெல்லாம் இலைச் சருகுகள் பரவிக் கிடக்கின்றன. சில இடங்களில் குட்டை குட்டையாக மழைத் தண்ணீர் தேங்கியிருக்கிறது.

முதல் நாள் இரவு பெய்த மழை நீர் மரங்களின் இலைகளில் தங்கியிருந்து, குளிர்ந்த வாடைக் காற்று அடிக்கும்போது 'சலசல'வென்று பூமியில் உதிர்கிறது. அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலை நினைத்து மரங்களும் துயரப்பட்டுக் கண்ணீர் உதிர்ப்பது போலத் தோன்றுகிறது.

வன விருட்சங்களில் வாழ்ந்த பட்சிகளின் அமுத கானத்துக்கு மட்டும் எவ்விதக் குறைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. விதம் விதமான மதுரக் குரல்களில் எத்தனை எத்தனையோ கீதங்கள் கேட்கின்றன. ஆனால் அந்தக் குரல்களிலும் ஒரு வேற்றுமை தெரிகிறது. முன்னே அக்குரல்களில் தொனித்த குதூகலக் களிப்பை இப்போது காணவில்லை. சென்று போன ஆனந்தமான காலத்தை நினைத்து மனங் கசிந்து பாடும் சோக கீதமாகத் தொனிக்கிறது!

வீட்டை நெருங்கிச் சென்றோமானால் ஒரே ஒரு விருட்சத்தினடியில் மட்டும்



யாரோ இரண்டு பேர் உட்கார்ந்து, வேலை செய்து கொண்டிருப்பது கண்ணுக்குப் புலனாகிறது.

ஆம்! அவர்களில் ஒருவர் ஆயனச் சிற்பிதான்! ஆனால், அந்த மேதையின் முகத்தில் முன்னம் நாம் பார்த்த சாந்தம் இப்போது எங்கே? அந்தக் கண்களிலே இந்த ஆவல் வெறி எப்போது குடிகொண்டது? அவரும் அவருடன் இருக்கும் இன்னொருவனும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ஏதேதோ பச்சிலைகளைச் சேர்த்து அவர்கள் கல்லில் வைத்து இடித்தும் அரைத்தும் சாறு இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அருகில் அடுப்பு ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. அதில்

ஒரு சட்டியில் பச்சிலைச் சாறு கொதித்துக்கொண்டிருக்கிறது. சுற்றுப்புறத்தில் பற்பல சட்டிகளில் வர்ணக் குழம்புகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, ஆயனச் சிற்பியார் சித்திரம் எழுதுவதற்குரிய வர்ணச் சேர்க்கை முறைகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார் என்று ஊகிக்கலாம்.

* * *

போர்க்களத்திலிருந்து சக்கரவர்த்தி மாமல்லபுரத்திலும் மற்ற இடங்களிலும் நடந்து கொண்டிருந்த சிற்பப் பணிகளையெல்லாம் நிறுத்தி விடும்படி கட்டளை அனுப்பிய பிறகு, ஆயனர் தமது அருமை மகளை அழைத்துக்கொண்டு பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்தார். தம்முடைய சீடர்களைத் தொண்டை மண்டலத்தில் உள்ள எல்லாக் கோயில்களிலும் பாரத மண்டபங்களைக் கட்டுவதற்காக அனுப்பி விட்டார். ஒரே ஒரு சிற்றுளை மட்டும் தம்முடைய உதவிக்கு வைத்துக் கொண்டிருந்தார்.

சில காலமாகவே ஆயனருடைய உள்ளமானது சிற்பக் கலையிலும் நாட்டியக் கலையிலும் ஈடுபட வில்லை. நாகார்ஜுனப் பர்வதத்துக்கு அனுப்பிய பரஞ்சோதி திரும்பி வருவதை அவர் வெகு ஆவலுடன் எதிர்பார்க்கலானார். சில நாளைக்கெல்லாம் அவருக்குப் பரஞ்சோதியைப் பற்றிய வெகு விசித்திரமான செய்திகள் கிடைத்தன. அவன் பல்லவ சைன்யத்தில் சேர்ந்து, பல்லவக் குதிரைப் படையின் தளபதியாகிவிட்டான் என்றும், அதிசயமான வீரச் செயல்களைப் புரிந்து வருகிறான் என்றும் வதந்திகள் உலவின.

அதற்குப் பிறகு நாகநந்தியடிகளும் அங்கு வரவில்லை. ஆயனருக்கு என்றும் அழியாத வர்ண இரகசியத்தை அறிந்து கொள்ளும் ஆவல் ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருகியது. எனவே அவர் சிற்பக் கலை முதலியவற்றை யெல்லாம் ஒரு பக்கத்தில் கட்டி வைத்துவிட்டு, வர்ணச் சேர்க்கை சம்பந்தமான பரிசோதனைகளை ஆரம்பித்தார். சிவகாமியின் நாட்டியக் கலை வளர்ச்சியிலே கூட அவருக்குச் சிரத்தை குறைந்துவிட்டது. இது சிவகாமிக்கும் சௌகரியமாகவே இருந்தது. ஏனெனில், அவளுடைய வாழ்க்கையாகிய வானத்திலே ஜகஜ்ஜோதியாக உதயமாகி அவளுடைய இதயத் தாமரையை மலரச் செய்திருந்த பிரேம சூரியனைப் பாடிப் பரவி வாழ்த்தி வணங்குவதற்கே அவளுக்குக் காலம் போதாமலிருந்தது. உலகத்தில் இதுகாறும் யாரும் கண்டும் கேட்டுமறியாத அதிசயக் காதற் செல்வம் தனக்குக் கிட்டியிருப்பதாக எண்ணிய சிவகாமி அந்தக் காதலையும் காதலனையும் பற்றிச் சிந்திப்பதிலும், மனோராஜ்யம் செய்வதிலும், வருங்காலத்தைப் பற்றிய ஆகாசக் கோட்டைகள் கட்டுவதிலும் எல்லையற்ற இன்பத்தை அடைந்து வந்தாள். அந்த மனோராஜ்ய வாழ்க்கையிலேதான் எத்தனை ஆனந்தம்! எத்தனை ஏமாற்றம்! கூடிக் குலாவும் நேரம் எவ்வளவு! சொல்லம்புகளினால் துன்புறுத்தல் எவ்வளவு? — அந்த எட்டு மாதத்து மனோராஜ்ய வாழ்வில் எத்தனையோ யுக யுகாந்தரங்களில் அநுபவிக்க வேண்டிய சோகச் சாயை படர்ந்த ஆனந்தங்களையும், இன்ப ரேகை கலந்த வேதனைகளையும் சிவகாமி அநுபவித்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும்.

இருக்கட்டும்; இப்போது சிவகாமியைப் போய்ப் பார்ப்போம். அவள் அநேகமாக வீட்டுக்குள்ளே தன்னந்தனியாக இருக்கலாம். உள்ளே போய் நேரிலேயே சிவகாமியைப் பார்த்து அவளுடைய நிலையைத் தெரிந்து கொள்வோம்.

வீட்டை அணுகும்போது, உள்ளே பேச்சுக் குரலைக் கேட்டுச் சற்றுத் திகைத்து நிற்கிறோம். சிவகாமி ஏகாந்தமாயிருப்பாள், அவளிடம் மனம் விட்டுப் பேசி அவளுடைய மன நிலையை அறியலாம் என்றல்லவா நினைத்தோம்? அவளுடன் பேசிக் கொண்டிருப்பது யார்? ஒருவேளை அவளுடைய செவிட்டு அத்தையா யிருக்குமோ? — இல்லை; ஆடவரின் குரல்—அதிலும் இரண்டு மூன்று ஆடவர் குரல்கள் அல்லவா கேட்கின்றன?

உள்ளே நுழைவதற்கு முன்னால் வாசற்படிக்கு அருகில் நின்று சம்பாஷணையைச் சற்று ஒட்டுக் கேட்டுவிட்டு உள்ளே போகக் கூடிய சந்தர்ப்பந்தானா என்பதைத் தெரிந்து கொள்வோம்.

"அம்மணி! எங்களிடம் கோபித்துக் கொண்டு என்ன பயன்? பல்லவ குமாரரின் கட்டளையைத்தானே நிறைவேற்றுகிறோம்?" என்று ஓர் ஆண் குரல் சொல்லிற்று.

"பல்லவ குமாரரும் ஆயிற்று, கட்டளையும் ஆயிற்று! மாமல்லருக்கு இன்றைக்கு வேறு வேலை இல்லை போலிருக்கிறது! திடீரென்று சிற்பியின் மகளை நினைத்துக் கொண்டாராக்கும். இருக்கட்டும்; அந்தத் தந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது? திறந்து காட்டுங்கள்!" என்று கோபங்கொண்ட கோமகளின் அதிகாரக் குரலில் சிவகாமி ஆக்ஞாபித்தாள்.

**உங்கள் நகங்களில்**
**முகம் பார்க்கும் பளபளப்பு ஏற்றுவீர்—**
**உயரிய முறையில் உருவான**
**ஸ்டெப் நெய்ல் பாலிஷ் மூலம்!**




அழகிய சாயல்களிலிருந்து உங்களுக்குப்
பிடித்தவற்றைத் தேர்ந்தெடுப்பீர்!



national 344

''தென் பாண்டி நாட்டிலே கொற்கைத் துறைமுகத்தில் குளித்து எடுத்த அற்புதமான முத்து மாலைகள் இந்தத் தந்தப் பெட்டியில் இருக்கின்றன, அம்மணி! இதோ பாருங்கள்! கன்யா குப்ஜத்து ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியின் பட்டமகிஷி கழுத்திலே கூட இம்மாதிரி முத்து மாலை கிடையாது! எப்படிஜொலிக்கிறது, பார்த்தீர்களா!'' என்று ஏவலாளன் கூறினன்.

''போதும், போதும்! இந்த முத்து மாலைகள் யாருக்கு வேண்டும்? உங்கள் குமாரச் சக்கரவர்த்தியிடம் நான் சொன்னதாகச் சொல்லு: ஆயனச் சிற்பியின் வீட்டுக்கு அருகே தாமரைக் குளக்கரையில் புன்னை மரம் ஒன்று புஷ்பித்திருக்கிறது. காலை நேரத்தில் அம்மரத்தடிக்குச் சென்றல் தரையிலே ஆயிரமாயிரம் முத்துக்கள் சொரிந்து கிடக்கும். அந்தப் புன்னை மலர் முத்துக்களின் அழகுக்கு உறை போடக் காணுது இந்தக் கொற்கை முத்து என்று சொல்லு. வேண்டுமாஞல், ஒரு நாள் காலையில் வந்து பார்த்து விட்டுப் போகட்டும். அதோ! அந்தத் தங்கப் பேழையிலே என்ன இருக்கிறது?'' என்று சிவகாமி கேட்டாள்.

''அம்மணி! அலைகடலின் ஆழத்திலே சௌந்தரிய தேவதை ஒளித்து வைத்திருந்த பவளங்கள், — சமுத்திர ராஜனின் கடுங் காவலை மீறி அபகரித்துக்கொண்டு வரப்பட்டவை,— மன்னுதி மன்னர்களெல்லாம் தங்கள் மணி மகுடத்தில் புனைவதற்கு ஆசைப் படக் கூடியவை,—ஒப்பற்ற பவளங்கள்- இந்தத் தங்கப் பேழையில் இருக்கின்றன. பாரத நாடெங்கும் புகழ் பெற்ற பரத சாஸ்திர ராணியின் மேனியை அலங்கரிப்பதற்கு உகந்தவை என்று இந்தப் பவள மாலைகளைப் பல்லவ குமாரர் அனுப்பியிருக்கிருர்...''

'' அழகுதான் ! இந்தப் பவள மாலைகள் உங்கள் பல்லவ குமாரருக்கு அதிசயமாய்த் தோன்றலாம். ஆனல் அவரிடம் நீ போய்ச் சொல்லு: ஆயனச் சிற்பி வீட்டின் இரண்டாம் கட்டிலே அந்தச் சிற்பியின் மகள் வளர்க்கும் கிளிகள் இருக்கின்றன. அந்தக் கிளிகளின் வாயில் உள்ள செம்பவளத்துக்கு எப்பேர்ப்பட்ட கடல் பவளமும் இணையாகாது. வேண்டுமானல் நேரிலே வந்து பார்த்து விட்டுப் போகும்படி சொல்லு. இருக்கட்டும். அதோ அந்தக் கூடைகளிலே என்ன?''

'' அரண்மனை உத்தியாவனத்திலே மலர்ந்த சண்பகப் பூக்கள், குண்டு மல்லிகைகள், பிச்சி மலர்கள்...''

''வேண்டாம், வேண்டாம்! உடனே எல்லாவற்றையும் வெளியே கொண்டு போங்கள். உங்கள் பல்லவ குமாரரிடம், 'சிவகாமி ஒரு காலத்தில் பூ என்றல் பிராணனு யிருந்ததுண்டு. ஆனல், ஏதோ ஒரு காரணத்தினல் இப்போது பூவைக் கண்டால் பிடிப்பதே யில்லையாம்!' என்று தெரியப்படுத்துங்கள். ஆமாம்; இதை யெல்லாம் எதற்காக இப்போது பல்லவ குமாரர் அனுப்பினராம்?''

''இன்றைக்குத் தங்களுடைய பிறந்த தினம் என்பதற்காக அனுப்பியுள்ளார், அம்மணி!''

''அப்படியா? மிகவும் சந்தோஷம். இந்த ஏழைச் சிற்பி மகளின் பிறந்த தினத்தைக் குமாரச் சக்கரவர்த்தி நினைவு வைத்துக்கொண்டிருப்பது பற்றி நிரம்பச் சந்தோஷம். ஆனல், அவருடைய ஞாபகசக்தியில் ஏதோ



கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். நீங்கள் இந்தப் பொருள்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு போய், 'இன்றைக்குச் சிவகாமியின் பிறந்த நாள் இல்லை' என்று சொல்லி விடுங்கள், 'சிவகாமி என்ற பெண் பூமியில் பிறக்கவே இல்லை' என்று பல்லவ குமாரரிடம் சொல்லி விடுங்கள்!''

இதென்ன விந்தை? சற்று முன் ஆயனச் சிற்பியை வீட்டுக்கு வெளியே மரத்தடியில் பார்த்தோ மல்லவா? இப்போது வீட்டுக்குள்ளே யிருந்து அவருடைய கனிந்த குரலைக் கேட்கிருேம்:

''குழந்தாய்! சிவகாமி! உனக்கு என்ன வந்து விட்டது? ஏன் இப்படி இவர்களை விரட்டி யடிக்கிருய்? குமார சக்கரவர்த்தியே உன்னுடைய பிறந்த தினத்தை ஞாபகம் வைத்துக் கொண

டிருந்து வரிசைகள் அனுப்பி யிருக்கும் போது....''

''சும்மா இருங்கள் அப்பா! குமார சக்கரவர்த்தியை இலேசுப்பட்டவர் என்று நினைக்காதீர்கள். முத்து மாலையையும், இரத்தின ஹாரத்தையும், புஷ்பக் கூடைகளையும் அனுப்பி நம்மை ஏமாற்றி விடப் பார்ப்பார். யாரை நம்பினாலும் மாமல்லரை நம்பக்கூடாது. ஏவலாளர்களே! ஏன் நிற்கிறீர்கள்? எடுங்கள் இவற்றை எல்லாம் உடனே! நடையைக் கட்டுங்கள். எடுக்கிறீர்களா இல்லையா?''

''இதோ எடுத்துக் கொண்டு போகிறோம், அம்மா! இதோ எடுத்துக் கொண்டு போகிறோம்.''

இவ்வாறு பயந்து நடுங்கிக் கொண்டு கூறிய ஏவலாளர்கள் வரிசைப் பொருள்



களை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே வருவார்களென்று நாம் எதிர் பார்க்கிறோம். ஆனால், யாரும் வெளியே வருகிற வழியைக் காணோம்!

நல்ல மர்மம் இது! வீட்டுக்குள் பேச்சுக் குரல் மட்டும் கேட்கிறதே தவிர வேறு நடமாடும் சந்தடியைக் காணோமே? வியப்பாக அல்லவா இருக்கிறது! உள்ளே போய்ப் பார்த்து விடலாம்.

உள்ளே போனால், நமது வியப்பு ஒன்றுக்குப் பதின் மடங்காகிறது. ஏனெனில், உள்ளே சக்கரவர்த்திக்காக ஆயனர் அமைத்திருந்த சிற்ப சிம்மாசனத்திலே சிவகாமி மட்டும்தான் தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கிறாள்! இத்தனை நேரமும் அவள் சம்பாஷணை நடத்தியதெல்லாம் யாருடன்?

இதோ மர்மம் வெளியாகிறது. சிவகாமி பேசுகிறாள்: தனக்குத் தானே பேசிக் கொள்கிறாள்.

''ஏவலாளர்களே! இங்கே வாருங்கள்!'' என்கிறாள்.

ஒருவரும் வரவில்லை. ஆனாலும், எதிரில் யாரோ இருப்பதாக எண்ணிக் கொண்டு பேசுகிறாள்.

''உங்கள் பல்லவ குமாரரிடம் இதையும் சொல்லுங்கள்: 'மாமல்லர் என்றைக்கு மனம் கனிந்து சிற்பி மகள் சிவகாமியைப் பார்ப்பதற்கு வருகிறாரோ, அன்றைக்குத்தான் அவளுக்குப் பிறந்த தினம்' என்று சொல்லுங்கள், தெரிகிறதா?''

இவ்விதம் சொல்லிவிட்டுச் சிவகாமி சற்றுச் சும்மா இருந்தாள். பிறகு மறுபடியும் பேசினாள். ஆனால், இந்தத் தடவை குரல் மாறுபட்டிருந்தது. இப்போது நாம் கேட்பது ஆண்பிள்ளை குரல்; ஏற்கனவே கேட்ட ஏவலாளனின் குரல்தான்.

''அம்மணி! மன்னிக்க வேண்டும். தங்களுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த வரிசைப் பொருள்களை அனுப்பிய பல்லவ குமாரர் சற்று நேரத்துக்கெல்லாம் தாமே தங்க ரதத்தில் வருவதாகவும் தெரியப்படுத்தச் சொன்னார்.''

மறுபடியும், சிவகாமியின் மகிழ்ச்சி ததும்பிய உண்மைக் குரல்: ''ஆஹா! மாமல்லரே வருவதாகச் சொன்னாரா! அப்படியானால் இன்றைக்கு என்னுடைய பிறந்த நாள்தான்!... அப்பா! இன்றைக்கு உங்கள் மகளின் பிறந்த நாள், தெரிகிறதா? என்ன பேசாமல் இருக்கிறீர்கள்! இன்றைக்கு ஒரு நாளாவது பச்சிலை அரைப்பதை நிறுத்துங்கள், அதோ ரதம் வரும் சத்தம் கேட்கிறதே!''

சிவகாமி, சிம்மாசனத்திலிருந்து துள்ளி எழுந்தாள். அப்பொழுது உண்மையாகவே வீட்டுக்கு வெளியில் ரதம் வரும் சத்தம் கேட்டது. முகத்தில் சொல்ல முடியாத ஆவல் ததும்பப் பரபரப்புடன் வாசற்புறம் ஓடி வந்து பார்த்தாள்.

வீட்டை நெருங்கி ரதம் வந்துகொண்டிருந்தது. அது குமார சக்கரவர்த்தியின் தங்க ரதம்தான். ரதசாரதியும் கண்ணபிரான்தான். ஆனால், ரதத்தில் இருப்பது யார்? வேறு யாரோ போல் இருக்கிறதே!

ஆஹா! என்ன ஏமாற்றம்! வருகிறவர் யாரா யிருந்தாலும், நிச்சயமாக மாமல்லர் அல்ல! — சிவகாமி, அந்தச் சிற்ப வீட்டின் வாசல் தூணைப் பிடித்துக் கொண்டு கற்சிலையைப் போல் நின்றாள். (தொடரும்)

போற்றத்தக்க
பெருமை உடையது
உங்கள் அழகு...
அணியத்தக்க
பெருமை உடையது
**சாரதாஸின்**
பட்டுப் புடவைகள்.



சாரதாஸின்
பட்டுப் புடவைகளை
அணிந்து
லட்சுமிகரமாக
விளங்குங்கள்.

# சாரதா'ஸ்

பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான பெயர் *

**தன் பில்டிங், 175/1, மவுண்ட்ரோடு,**
**சென்னை-2.** போன்: **87177**

**32, N.S.B. ரோடு, திருச்சி-2.**
போன்: **7077**

# சிக்கன வாழ்வில் மகிழ்ந்து..

புஷ்பா

## காட்சி 1

[துரைசாமியின் வீடு. துரைசாமி வாசல் வராந்தாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். அப்போது உட்புறமிருந்து ஏகக் கூச்சல் கிளம்புகிறது.]

துரைசாமி (ஹாலுக்கு ஓடி வந்து): ஏய் என்ன இது ரகளே!... இது என்ன வீடா அல்லது ஜூவா?... இப்படிக் காட்டுக் கத்தல் போடுகிறீர்களே!

[துரைசாமியின் பின்னே கோபியும் பெண் சுபத்திராவும் சண்டையை நிறுத்துகிறார்கள்]

கோபி (ஆத்திரமாக): பாருப்பா இந்தப் பத்ராவை!

சுபத்திரா: ஏய்! இன்னொரு தடவை 'பத்ரா'ன்னு சொன்னே, உன் முதுகுத் தோலே உரிச்சுடுவேன்!

கோபி : அப்படித்தான் சொல்லுவேன்! பத்ரா! பத்ரா! பத்ரகாளி!

சுப: போடா கோபி!... வெள்ளே!... டிஸ்டெம்பர்!...

துரை: உஸ்! சண்டையை நிறுத்தப் போகிறீர்களா — இல்லே இந்தப் பேப்பராலேயே ஆளுக்கு இரண்டு முதுகிலே போடட்டுமா?... ஏய் கோபி! அவகிட்டப் போய் என்னடா தகராறு?

கோபி: ஒண்ணுமில்லேப்பா! பவுடர் டப்பாவை நான் எடுக்கக் கூடாதாம்... சண்டைக்கு வரா இந்தப் பத்ரகாளி!... இவ கையெரியக் காசு கொடுத்து வாங்கின டப்பாவா அது?

சுப: நான் அப்படித்தான் சண்டைக்கு வருவேன்!... பவுடர் எனக்குத்தான்! உனக்குக் கொடுக்க முடியாது!

கோபி: கொடுக்காட்டி உன் பிராக்டிகல் நோட்புக்கிலே சிவப்பு இங்கியைக் கொட்டி மெழுகி வைச்சுடறேன்!

சுப: பாருப்பா இந்தத் தடிக் கோபியை!

[சிணுங்குகிறாள்]

துரை: ஏண்டா இப்படி அடிச்சுக்கிறீங்க! பவுடர் டப்பாவை ரெண்டு பேரும்தான் யூஸ் பண்ணுங்களேன்!

சுப: இதிலே இன்னும் துளியூண்டுதாம்பா பவுடர் இருக்கு!

கோபி: அத்தனையும் இந்தக் குண்டுச்சட்டி மூஞ்சிக்கு வேணுமாம்!

சுப: ஏய், பல் எகிறிடும் ஜாக்கிரதை!... அப்பா, நீங்களே சொல்லுங்க! இவனைப் போல நான் தினமும் நாலு தரமா பவுடர் போட்டுக்கறேன்? மூணே மூணு தரம்தான்... இவன் போட்டுப் போட்டே என் டப்பாவைக் காலி பண்ணிட்டாம்பா!

துரை: என்னது! போன வாரம்தானே புதுசா பவுடர் டப்பா வாங்கினோம்? அதுக்குள்ளேயா அத்தனை பவுடரும் தீர்ந்து போச்சு?

கோபி, சுப: ஆமாம்பா!

துரை (சற்று யோசித்துவிட்டு): சரி! இனி மேல் இப்படித்தான் செய்யணும்! பவுடர் பற்றாக்குறையை முன்னிட்டு, வாரத்திலே ஒரு நாள் யாரும் பவுடர் டப்பாகிட்டேயே போகக் கூடாது!... எப்படி என் ஐடியா?... இனி, ஞாயிற்றுக் கிழமைகள் 'பவுடர்-லெஸ் ஸண்டேஸ்!'.

கோபி, சுப: ஐயையோ! ஞாயிற்றுக் கிழமைகளிலேதான் சினிமா, நாடகம், பிக்னிக்குன்னு போவோம்! அன்னிக்குப் போய்ப் பவுடர் கிடையாதா?

துரை: சரி, உங்களுக்காகச் சனிக்கிழமையைப் 'பவுடர்-லெஸ் டே'யாக வைச்சுக்குவோம்! இப்போ சண்டை போடாமல் போங்க!

[கோபியும் சுபத்திராவும் போகிறார்கள். துரைசாமியின் மனைவி பார்வதம் வருகிறாள்.]

பார்வதம்: நீங்க சொன்னதை யெல்லாம் சமையலறையில் இருந்தபடியே கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்! இதென்ன குரங்கு மத்தியஸ்தம் போலப் பண்ணி வைத்திருக்கிறீர்கள்?

துரை: என்னது! குரங்கு மத்தியஸ்தமா! அப்போ நான் என்ன குரங்கா? உன் சொந்த



ஊர்தான் திருப்பதி... என் சொந்த ஊர் திருவெறும்பூரடி! ஞாபகம் இருக்கட்டும்! பாய்லர் பினாண்ட் பெற்றுப் புகழ் பெற்ற ஊராக்கும்!

பர்: போறும் உங்க ஊர்ப் பாய்லர் பெருமை! நம்ம வீட்டுப் பாய்லருக்கு வழி சொல்லுங்கோ முதல்லே!

துரை: என்ன ஆச்சு? பாய்லர் தட்டு ஓட்டை ஆயிடுத்தா மறுபடியும்?

பர்: அதெல்லாம் ஒண்ணுமில்லே!...கரி ஸ்டாக் தீர்ந்து போச்சு!

துரை: நம்ம பரமசிவம் கடையிலே போய் இன்னொரு மூட்டை வாங்கிண்டு வர வேண்டியதுதானே?

பர்: அவர்கிட்டேயும் கரி மூட்டையே இல்லையாம்!

துரை: நேற்றுச் சாயந்திரம் கூடப் பார்த்தேனே — மேஜைக்கு நேரே ஒரு மூட்டை இருந்ததே?

பர்: நீங்க பரமசிவத்தை அரை இருட்டிலே பார்த்துட்டுக் கரி மூட்டைன்னு நினைச்சுண்டிருப்பேள்!... கரிக்கு இப்போ ஏகப்பட்ட தட்டுப்பாடாம்... கரி இல்லாததனாலே இன்னிக்கு நம்ம வீட்டிலே வெந்நீர் கிடையாது!

துரை: ஓகோ! இன்னிக்கு 'ஹாட்வாட்டர்-லெஸ் டே'யா?... வெரி குட்! வாரா வாரம் இப்படிப் புதன்கிழமையை வெந்நீர் இல்லாத நாளா வச்சுண்டுடுவோம்! நீ என்ன சொல்லறே?

பர்: எனக்கு என்ன ஆட்சேபணை?... நான் மட்டும்....

துரை: நீ மட்டும்?...

பர் (பேச்சை மாற்றியவளாக): அது ஒண்ணும் இல்லே... ஆமாம், இதென்ன புதுசா என்னவோ ஆரம்பிக்கிறேள்?



துரை: நீ ஒரு கிணற்றுத் தவளை. உனக்கு எதுவுமே விவரமாச் சொன்னாத்தான் புரியும். அதாவது நம்ம வீட்டுச் செலவுகள் நாளுக்கு நாள் தலைக்கு மேலே ஏறிண்டே போறது. அதைக் குறைக்கத்தான் ஒவ்வோர் அயிட்டத்திலேயும் சிக்கனத்தைப் புகுத்தறேன்... சிலதைக் 'கட்' பண்ணறேன்!

பர்: நான் ஓர் அயிட்டம் சொல்றேன். அதைக் 'கட்' பண்ணுங்கோ! மாசத்துக்கு ஐம்பது ரூபா மிச்சம் பிடிக்கலாம்!

துரை: எதைச் சொல்றே நீ?

பர்: உங்க அம்மாவுக்கு மாசா மாசம் பணம் அனுப்பறேளே, அதைத்தான்!

(துரைசாமி முறைத்துப் பார்க்க, பர்வதம் உள்ளே போகிறாள்.)

## காட்சி 2

[ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள். வழக்கப்படி வராந்தாவில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருக்கிறார் துரைசாமி. நண்பர் ஒருவர் வருகிறார்.]

நண்பர்: ஓய் துரைசாமி! ஒரு நிமிஷம் பேப்பர் கொடுமய்யா!

துரை: பேப்பர் இல்லே, போம்!

நண்: அதான் கையிலே வச்சண்டிருக்கிறீரே! வச்சண்டே இல்லேன்னு சொல்றீரே!



துரை: இது நேத்துப் பேப்பர் ஐயா! இன்னிக்குப் பேப்பர் வாங்கல்லே!

நண்: ஏன்?

துரை: பேப்பர் விலைதான் ஏகத்தாறு ஏறிக் கிடக்கே! தினமும் வாங்கிக் கட்டுப்படியாகல்லே! அதனாலே வாரத்திலே ஒரு நாள் பேப்பர் வாங்காம இருந்துடறதுன்னு முடிவு பண்ணிட்டேன். செவ்வாய்க் கிழமை 'பேப்பர்-லெஸ் டே!'

*நண்:* பரவாயில்லையே! உமக்குப் புதுசு புதுசா ஐடியாவெல்லாம் தோணறதய்யா!

*துரை:* எல்லாம் நம்ம அரசாங்கம் காட்டுற வழி ஐயா!... பெட்ரோல் பஞ்சத்தைச் சமாளிக்கறதுக்காக, வாரத்திலே ஒரு நாள் கார், பீர் எதுவும் ஓட்டக் கூடாதுன்னு சொல்லலாமான்னு சர்க்கார்லே யோசிச் சுண்டிருக்கறதாப் பேப்பரிலே படிச்சேன்... அதை நான் உடனடியா வீட்டிலே அமல் நடத்திட்டேன்! செலவைக் குறைக்கறதுக்காக, சில சில அம்சங்களிலே மிச்சம் பிடிக்க ஆரம்பிச்சிருக்கேன்!

*நண்:* அப்படீன்னு மத்த கிழமைகளிலே என்னென்ன கிடையாது?

*துரை:* புதன்கிழமை வெந்நீர் கிடையாது! வியாழக் கிழமை: டிபன் கிடையாது! வெள்ளிக்கிழமை கரெண்ட் செலவை முன்னிட்டு ரேடியோ கிடையாது! சனிக்கிழமை பவுடர் கிடையாது! ஞாயிற்றுக்கிழமை: எண்ணெய் கிடையாது — சமையலிலே. அதாவது வெறும் பழையதும் ஊறுகாயும் மட்டும்! திங்கட்கிழமை: குழாய்த் தண்ணீரை மிச்சம் பிடிக்கறதுக்காக நோ குளியல்!

*நண்:* அட பாவி மனுஷா! இங்கட்கிழமைகளிலே நீர் குளிக்கறதே கிடையாதா!... அப்படீன்னு அன்னிக்கு ஒரு பயல் கூட உம்ம பக்கத்திலே வர முடியாதே!

*துரை:* அதுவும் நல்லதுதானே? எவனும் வந்தால் அஞ்சு, பத்துக்கு அடிபோடுவான்! அதை 'அவாய்ட்' பண்ணிட்டேனே!

[நண்பர் திகைக்க, துரைசாமி பெருமிதத்துடன் உள்ளே எழுந்து போகிறார்.]

## காட்சி 3

[இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள். துரைசாமி ஹாலில் உட்கார்ந்து ஆபீஸ் பைல் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். கோபியும், சுபத்திராவும் வருகிறார்கள்.]

*கோபி:* அப்பா! இவன் என்ன திருட்டுத் தனம் பண்ணினான் என்று கேளுங்கப்பா!

*சுப:* டேய்! கோள் மூட்டறியா? இரு இரு. உன்னைப் பற்றியும் சொல்லித் தரேன்!

*துரை:* என்னடா பண்ணினான் சுபத்திரா?

*கோபி:* ஸ்கூல்லே ஜவான்கள் நிதிக்காகப் பணம் கேக்கறாங்கன்னு சொல்லி அம்மாகிட்டேயிருந்து பணம் வாங்கிண்டு போய்த் திருட்டுத்தனமா புதுசா பவுடர் டப்பா வாங்கிண்டு வந்து, தன் பீரோவிலே ஒளிச்சு வைச்சிருக்காப்பா! உண்மையா இல்லையான்னு கேளுங்க!

*துரை:* ஏம்மா சுபத்திரா! கோபி சொல்றது நிஜம்தானா?

*சுப:* நான் உண்மையிலேயே ஜவான்கள் நிதிக்காகத்தாம்பா பணம் வாங்கிண்டு போனேன்... அம்மா பத்து ரூபா கொடுத்தா. அஞ்சு ரூபா நிதிக்குக் கொடுத்தேன். அஞ்சு ரூபா மிச்சம்தானே? அதுக்குத்தான் பவுடர் டப்பா வாங்கினேன்!... இவன் மட்டும் ரொம்ப யோக்கியனோ?

*துரை:* என்ன அயோக்கியத்தனம் பண்ணினான் இவன்?

*சுப:* இவன் முந்தாநாள் தலையை வலிக்கிறதுன்னு பொய் சொல்லி, பழையது சாப்பிடாமத் தப்பிச்சுக்கிட்டுப் போய்க் கிருஷ்ணா லஞ்ச் ஹோமிலே மொக்கினானா இல்லையான்னு கேளுங்க!

*துரை:* ஏண்டா! அப்படியா செய்தே? ஏதுடா உனக்குப் பணம்?

*கோபி:* எங்க ஸ்கூல்லே 'டிஃபன்ஸ் ஃபண்ட்'டுக்காக கலெக்ஷன் பண்ணறாங்க. அதுக்காக அம்மாகிட்டேயிருந்து பத்து ரூபா வாங்கிண்டு போனேன்... ஃபண்டுக்கு அஞ்சு ரூபா கொடுத்தாப் போதும்னு சொன்னாங்க. மீதியை என் இஷ்டப்படி நான் செலவு பண்ணறதிலே என்ன தப்பு?

*துரை:* நாசமாப் போச்சு போ! செலவைக் குறைக்க நான் ஒவ்வொண்ணா 'கட்' பண்ணா, நீங்க என் பிளானையே 'கட்' பண்றீங்களா? என் புத்தியைச் சொல்லணும். வீட்டு நிர்வாகத்தை உங்க அம்மாகிட்டே விட்டேன் பாரு — அதனாலே வந்த கோளாறுதான் இதெல்லாம்!...ஏய் பார்வதம்! இங்கே வா!

(பார்வதம் வருகிறாள்.)

*பார்:* என்ன இரைச்சல் இங்கே?

*துரை:* ஏய்! உங்கிட்டே நான் அன்னிக்கு என்ன சொன்னேன்? 'செலவைக் குறைக்கணும், சிக்கனமா இருக்கணும்'னு சொன்னேனா இல்லையா? வாரத்திலே ஒவ்வொரு நாளும் என்னென்ன கிடையாதுன்னு லிஸ்ட் போட்டுக் கொடுத்தேனா இல்லையா?

*பார்:* கொடுத்தீர்கள்... வாஸ்தவம்தான்! அதுக்கு என்ன இப்போ?

*துரை:* இவங்க ரெண்டு பேரும் என் திட்டத்திலேருந்து தப்பிக்கறதுக்காக உன்கிட்டே 'டொனேஷன்'னு கேட்டு வாங்கிண்டுபோய், இஷ்டப்படி ஊட்டி அடிக்கிறாங்க! நீயும் பார்த்துண்டு சும்மா இருக்கியே?

*பார்:* இவா ரெண்டு பேர் மட்டும்தானா?

*துரை:* பின்னே வேறே யாராம்?

*பார்:* ஏன்? நீங்க மட்டும் என்ன ஒழுங்காம்?

*துரை (திடுக்கிட்டு):* என்ன? நானு' என்ன சொல்லறே நீ?

*பார்:* வியாழக் கிழமை டிபன் கிடையாதுன்னு பேரு... வீட்டிலே டிபன் பண்ணி எடுத்துண்டு போறதில்லையே தவிர, ஆபீசுக்கு எதிரிலே இருக்கிற ஹோட்டல்லே ஸ்வீட்டும், காரமுமா சாப்பிடறதில்லையா நீங்க?... போன வியாழக் கிழமையன்னிக்குப் போளியும்,காஞ்சிபுரம் இட்டிலியும் சாப்பிட்டேளே! மறந்து போச்சா?

*துரை (திகைத்து):* உனக்கு எப்படித் தெரிஞ்சது இது?

*பார்:* உங்களோட வேலை பார்க்கிறாரே சந்துரு — அவரோடதானே நீங்க தினமும் டிபன் சாப்பிடுவேளாம்... அவர் சம்சாரம் தான் வந்து எங்கிட்டச் சொன்னா!... நீங்க பண்ணறது ரொம்ப நியாயமான காரியம், இதிலே மத்தவங்களைக் கண்டிக்கிறேளாக்கும்.


*துரை (சமாளித்துக் கொண்டு):* நீமட்டும் ரொம்ப யோக்கியமோ? புதன்கிழமை



சென்னை காஸ்மாபாலிடன் கிளப்பின் நூற்றாண்டு விழாவில் ராஷ்டிரபதி வி. வி. கிரி கலந்து கொண்டு சிறப்பித்தார். 1915ம் ஆண்டிலிருந்து 1937ம் ஆண்டு வரை அவரே காஸ்மாபாலிடன் கிளப்பின் அங்கத்தினர்களில் ஒருவரா யிருந்தார். இந்த நூற்றாண்டு விழா வைபவத்தின் போது ராஷ்டிரபதி அருகே காஸ்மாபாலிடன் கிளப்பின் தலைவரும் தமிழகப் பிரதம நீதிபதியுமான திரு வீராசாமி அமர்ந்திருக்கிறார். கிளப்பின் மிக முதிய அங்கத்தினர் என்ற முறையில் திரு டி. எஸ். ராமசாமி அய்யருக்கு ஸ்ரீ கிரி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

சென்னை தாம்பரத்திலுள்ள கிறிஸ்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர் என்றாலே மதிப்பும் மரியாதையும் செலுத்தும்படி அக்கல்லூரியின் பெருமையை இருபத்தைந்தாண்டுகளுக்கு மேல் சேவை செய்து உயர்த்தியவர், பிரின்ஸிபால் டாக்டர் சந்திரன் தேவநேசன். இவர் ஷில்லாங்கிலுள்ள வடகிழக்கு மலைப் பிரதேச சர்வகலாசாலை துணைவேந்தராக நியமனமாகி யிருப்பதைப் பாராட்டிக் கிறிஸ்துவக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் ஒரு தேநீர் விருந்துபசாரம் தமிழகக் கவர்னரின் தலைமையில் நிகழ்த்தியது. அத்தருணத்தில் அருங் குணங்களின் இருப்பிடமான திரு சந்திரன்தேவநேசனின் முறுவல் தவழும் உருவப் படத்தை அமைச்சர் ஸாதிக் பாட்சா திறந்து வைத்தார்.

'சேவா சக்ரா', ஏழை எளியவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் உதவ முன்வந்துள்ள சமூக சேவை நிலையம். வைத்தியசாலைகளில் இனிய இசைக்கு ஏற்பாடு செய்து நோயாளிகளுக்கு மனச் சாந்தி நல்குவதும், ஏழைச் சிறுவர்களுக்குப் புத்தகங்கள் வழங்கி உதவுவதும், தேசியப் பிரச்னைகளைக் கருத்தரங்கு வாயிலாக விவாதித்துப் பலன் தேடுவதும் இதன் தொண்டுகளில் முக்கியமானவை. ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் 'துக்ளக்' ஆசிரியர் 'சோ' வினைப் 'புது வருஷச் சிந்தனை'கள் பற்றி உரையாற்ற அழைத்திருந்தனர். 'அரசியல் பேச வேண்டாம்' என்று 'சோ'வுக்குச் சொன்னால் நடக்கிற காரியமா? அவர் எந்த வார்த்தையைச் சொன்னாலும் அதில் அரசியல் உட்பொருள் தொனிப்பதாகத் தோன்றுமே!





'ஹாட் வாட்டர்-லெஸ் டே'!... நீ திருட்டுத்தனமா காஸ் அடுப்பிலே வெந்நீர் வைச்சு விட்டுக்கறியே!... நீ நேர்மைப் பூஷணமாக்கும்!

கோபி: மொத்தத்திலே குடும்பம் முழுதுமே ஊழல்!

சுப: நம்ம பரம்பரையே ஊழல் பரம்பரை!

துரை: உதைச்சேன்னா பார்! பரம்பரையைச் சொல்லாதே! நாம்ப எல்லாரும்தான் ஒட்டு மொத்தமா ஊழல்!... சரி, எல்லாரும் கேட்டுக்குங்க: இன்னிலேருந்து என் சிக்கனத் திட்டம் கோவிந்தா! நாம்ப நேர்மையா இல்லாமல் என்னதான் திட்டம் போட்டாலும் அது கோவிந்தாதானே ஆகும்! நாம்ப எதுக்குமே லாயக்கு இல்லேன்னு இதிலேயிருந்து தெரிஞ்சு போயிடுத்து!

கோபி: அப்படிச் சொல்லாதீங்க அப்பா! இப்போதான் நாம்ப எதுக்கு லாயக்குன்னு நன்றாப் புரிஞ்சுண்டிருக்கோம்!

துரை, பார்வதம், சுப: என்னடா சொல்லறே நீ?

கோபி: நாம்ப இந்த அரசாங்கத்தை நடத்த ரொம்ப லாயக்குன்னு சொல்ல வந்தேன்! (எல்லோரும் சிரிக்கிறார்கள்)



MONSIEUR

டெரின்-காட்டன் ஷர்ட்டிங்

RAMSON

டெரின்-காட்டன் ஷர்ட்டிங்

DAVARIN

டெரின்-காட்டன் சூட்டிங்

DAVANJOY

டெரின்-காட்டன் சூட்டிங்

# தாவண்கெரே

துணிவகைகள்

தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்

...பல்லாண்டு மரபை இன்றைய வடிவாய்ப் படைக்குமிடம் !


Thomas/DCM/13 d Tam

## 3. அறிமுகம்

காட்டுக் கத்தலான பாட்டு, சண்டமாருதமான பின்னணி இசை, பேயாட்டம், வானவில்லுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென எண்ண வைக்கும் ஒளிச் சிதறல்கள்!


தி ஸெல்லர் என்ற பெயர் கொண்ட அந்த நைட் கிளப்புக்குள் ஸ்டீரியோ ஆம்ப்ளிஃபையரில் கிளம்பிய ஒலிகள் காதைத் துளைத்தன. ஸைகடெலிக் லைட்டிங் என்ற அமைப்பினால் பரவிய ஒளிக் கற்றைகள் கண்களை உறுத்தின.

நீலம், சிவப்பு, ஊதா, மஞ்சள், பச்சை என்று ஒரே சமயத்தில் பலவகை நிறங்களில் செயற்கை ஒளி அந்தக் கூடத்தை நிறைத்ததுடன் அந்த வண்ண ஒளிகள் நிறம் மாறிச் சுழன்றுகொண்டும் இருந்தன. கிடார், டிரம், ட்ராம்போன், டிம்பானி போன்ற பல ரக வாத்தியக்கருவிகளின்ஒலி, உயர்ந்த ஸ்தாயியில் எழுந்த பாட்டு சற்று ஓய்ந்த போதெல்லாம் அசுரக் கூச்சல்களாகக் கேட்டன. கூடத்தின் ஓரத்தில் சில மேஜை நாற்காலிகள். ஒரு பக்கம் பால்கனி போன்ற அமைப்புக்கு ஏறிச் செல்லப் படிக்கட்டு. மேல்தளத்திலும் மேஜை நாற்காலிகள். எல்லா மேஜைகளையும் இருவர், மூவர், நால்வர் எனக் குழுக் குழுவாகப் பலர் ஆக்கிரமித்திருந்தனர்.





# விண்ணும் மண்ணும்



தனியாக ஒரு மேஜையில் அமர்ந்திருந்தவன் தனஞ்செயன் மட்டுமே. சில மேஜைகளில் மதுவும் கோப்பைகளும் இருந்தன. வேறு சிலவற்றில் உணவு வகைகள் காணப்பட்டன. உணவு வகைகள் இருந்த மேஜைகளில் காலால் தாளம் போட்டு இசையை ரசித்தபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மதுவும் கோப்பைகளும் மட்டுமிருந்த மேஜைகளைச் சுற்றி யாரும் இல்லை. அனைவரும் கூத்தாடக் கூடத்தின் மையத்துக்குச்

**கி.ராஜேந்திரன்**

சென்று விட்டிருந்தனர். தனஞ்செயன் மட்டும் விதிவிலக்காக மார்ட்டினியை மெல்ல 'ஸிப்' செய்தவாறு அமர்ந்திருந்தான்.

புயல் வீசி ஓய்ந்தது போன்று 'இசை' சற்று நேரத்துக்குப் பின் நின்றது. மைக் டேவிஸ்ஸும் அனுபமாவும் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டே தங்கள் இருக்கைக்கு வந்து சேர்ந்தார்கள். நடனமாடி விட்டுத் திரும்பியதால் ரொம்ப உற்சாகம் அடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். மேஜையின் எதிரே வந்து அமர்ந்த பிறகும் அவர்கள் சிரிப்பு சிறிது நேரத்துக்கு ஓயவேயில்லை.

தனஞ்செயன் தனது கோட்டின் உள் பையிலிருந்து சிறிய டைரியை எடுத்தான். ஒரு மெமோ தாளைக் கிழித்து எழுதினான்: ''மே ஐ ஜாய்ன் யூ?''

அருகில் வந்த வெய்ட்டரிடம் ஐம்பது செண்ட் நாணயத்துடன் அதைக் கொடுத்து நாலு மேஜைகள் தள்ளி அமர்ந்திருந்த அனுபமாவைச் சுட்டிக் காட்டினான். வெய்ட்டர் காகிதத்தைஒரு தட்டில் வைத்து எடுத்துப் போனான். தனஞ்செயன் தான் உதடுகளால் ருசி பார்த்த மார்ட்டினி அடங்கிய கண்



ணாடிக் கோப்பையின் விளிம்புக்கு மேலாக அனுபமாவைக் கவனித்தான்.

'அவள் தன் கோரிக்கையைப் பார்த்துவிட்டு என்ன செய்வான்? தனது மகிழ்ச்சி நிறைந்த மாலைப் பொழுது அவனால் பாழாகுமெனக் கருதி மறுதளித்து விடுவானா? அவனை யும் மைக் டேவிஸ்ஸையும் அவர்களது காரியாலயக் கட்டடம் இருந்த வெஸ்ட் ஃபார்ட்டி ஸெகண்ட் ஸ்ட்ரீட்டி லிருந்து புறப்பட்டு அவர்கள் போன இடங்களுக்கெல்லாம் சென்று இது வரையில் மிகுந்த சிரமப்பட்டுப்பின் தொடர்ந்து வந்தது வியர்த்தமாகி விடுமா? இதோ வெய்ட்டர் தன்னைச் சுட்டிக்காட்டுகிறான். அனுபமா புதி ரான பார்வையைத் தன்பால் செலுத்துகிறாள்....' தனஞ்செயன் தன் கையிலிருந்த கோப்பையை வாழ்த்துக் கூறுகிற பாவனையில் உயர்த்திப் புன்னகை செய்தான். மைக்கேல் இப் போது தன் தோளுக்கு மேலாகத் தலை யைத் திருப்பிப் பார்த்தான். பின்னர் இருவரும் சில விநாடிகள் ஏதோ பேசிக் கொண்டார்கள். அனுபமா தன் ஹாண்ட் பாக்கைத் திறந்து ஐ புரோ பென்சிலை எடுத்து அதே தாளின் பின் புறம் ஏதோ எழுதினாள். சீட்டு தன் கைக்கு வந்து சேர்ந்ததும் அடக்க மாட்டாத ஆர்வத்தை மறைத்துக் கொண்டு தனஞ்செயன் அதைப் பார்த்தான். ''கோ டு ஹெல்'' என்று இருக்குமோ? இல்லை, இல்லை! ''வெல்கம்''தான்! பாக்கியிருந்த டிரிங்க்கைக் கையில் எடுத்துக்கொண்டு அவர்கள் இருந்த மேஜையை நோக்கி நகர்ந்தான் புன்சிரிப்புடன். ''அயல் நாட்டுக்கு வந்து தன்னந்தனியாகத் தவித்துக் கொண்டிருக்கும் ஓர் இந்திய னுக்குப் பேச்சுத் துணையாக விளங்க இன்னோர் இந்தியப் பெண் தயங்க மாட்டாள் என்று நம்பினேன். அது பொய்க்கவில்லை. ரொம்ப நன்றி'' என்றான்.

அவள் பதிலுக்கு ஏதோ கூறினாள். அவள் உதட்டு அசைவுதான் தெரிந்ததே ஒழிய அவள் பேசியது தனஞ்செயன் காதில் விழவில்லை. திடீரென்று நினை வுக்கு வந்தவன் போல் அவன், ''எக்ஸ் கியூஸ் மீ'' என்று சொல்லியபடியே இரு காதுகளிலிருந்தும் இரு சிறு பஞ்சுச் சுருள்களை எடுத்தான். இரு விநாடி களுக்கு இருவரும் வியப்புடன் அவனைப் பார்த்துவிட்டுப் பிறகு குபீரென்று அடக்கமாட்டாது சிரித்தார்கள்.

''நல்ல ஏற்பாடாக இருக்கிறதே!'' என்றான் மைக்கேல் டேவிஸ். உரை யாடல் ஆங்கிலத்திலேயே ஆரம்ப மாகித் தொடர்ந்தது.



''ராஜாஜி கற்றுத் தந்தது'' என்றான் தனஞ்செயன். ''உனக்குத் தெரிந்திருக்குமே அவரைப் பற்றி'' என்றான் அனுபமாவை நோக்கி.

அவள் புருவங்களை உயர்த்தி மேலும் கீழுமாக அழகாகத் தலையாட்டினாள்.

''அவர் பொதுக் கூட்டங்களுக்கு உரிய நேரத்தில் போய் விடுவார். ஆனால் கடைசிப் பேச்சாளர் இவர்தான். இடையில் அடுத்தடுத்து ரொம்பப் பேர் சொற்பெருக்காற்றுவார்கள். உண்மையாகவே வார்த்தை வெள்ளம்தான். விஷயம் மிகச் சொற்பமாகவே இருக்கும். இவர் என்ன பண்ணுவார் தெரியுமா ? தமது மந்தமான காதைப் பேச்சாளர் பக்கம் திருப்பி விடுவார். நன்றாகக் கேட்கிற காதை உள்ளங் கையில் பதித்து நாற்காலியில் பின்னுக்குச் சாய்வார். பேச்சாளருக்கு அவர் தம்மை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கேட்பது போல் தோன்றும். ஆனால் ராஜாஜியோ நிசப்தச் சூழலில் அடுத்த வாரம் பத்திரிகைக்கு என்ன எழுதலாம் என்று நிம்மதியாக யோசித்துக் கொண்டிருப்பார் !''

மைக்கும் அனுபமாவும் மீண்டும் மனம் விட்டுச் சிரித்தார்கள். ''இது நிஜமா, உங்கள் கற்பனையா?'' என்றாள் அனுபமா.

தனஞ்செயன் மைக் டேவிஸின் பக்கம் திரும்பிக் கேட்டான்: ''உன்னுடைய தேசத்தின் புகழ்பெற்ற ஜனாதிபதி லிங்கனைப் பற்றி எத்தனையோ கதைகள் வழங்குகின்றன. அவற்றில் எவ்வளவு நிஜம் என்று உன்னால் உறுதியாகச் சொல்ல முடியுமா ?''

''முடியாது, முடியாது'' என்று தலையசைத்து மாறாத புன்னகையுடன் தன் கரத்தை நீட்டினான் மைக். ''அறிமுகம் செய்து கொள்வோம். நான் மைக்கேல் டேவிஸ். இவள் அனுபமா. நாங்கள் இருவருமே விஞ்ஞானிகள். நாஸாவுடன் தொடர்புள்ளவர்கள். அனுபமா இந்தியப் பெண்தான் என்றாலும் அவளும் அவள் குடும்பத்தினர் அனைவரும் அமெரிக்கப் பிரஜைகள்தாம்.''

''நான் தனஞ்செயன். கமிஷன் ஏஜெண்ட். விசேஷ உலோகக் கலவைகள் கொண்ட எஃகுக்கு மார்க்கெட் பிடிக்க வந்தேன். ஆனால் இங்கு மார்க்கெட் என்னைப் பிடித்துக் கொண்டது !''

''ஒண்டர்ஃபுல் ! அப்படியானால் உங்கள் வெற்றியைக் கொண்டாட வேண்டியதுதான்'' என்ற மைக் டேவிஸ் வெய்ட்டர் இருந்த பக்கம் திரும்பி விரலை உயர்த்தி அவன் கவனத்தைக் கவர முயன்றான்.

''ஆட்சேபணையில்லை. ஆனால் செலவெல்லாம் என்னைச் சேர்ந்தது'' என்றான் தனஞ்செயன். ''என்ன சாப்பிடுகிறீர்கள் ?''

''நான் மாற்றிக் கொள்ளப் போவதில்லை. ரீஃபில்தான்.''

''நானும் மார்ட்டினியையே தொடர்கிறேன்'' என்றான் தனஞ்செயன்.

இருவரும் அனுபமாவை நோக்கினார்கள். ''நான் இன்னும் என் முதல் டிரிங்கையே முடிக்கவில்லையே ; பிறகு பார்க்கலாம்'' என்றாள் அவள்.

வெய்ட்டர் ஆர்டர்களைப் பெற்றுக் கொண்டு அப்பால் சென்றதும், ''மது மணக்கும் வாயால் ராஜாஜியின் பெயரைச் சொல்வதே அபசாரம் இல்லையா ?'' என்றாள்.

''உம்.... உங்களுக்கு அவரைப் பற்றி நிறையத் தெரிந்திருக்கிறதே!'' என்றான் தனஞ்செயன், தன் வியப்பை வெளிப்படுத்தி.

''இந்தியப் பத்திரிகைகள் பல தருவிக்கிறேன். தமிழ்நாட்டில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதால் மனமுடைந்து தான் அவர் சீக்கிரம் இறந்துவிட்டார் என்றும் இல்லாத போனால் காந்திஜி விரும்பிய நூற்றுஇருபத்தைந்து வயதை இவர் வாழ்ந்து காட்டியிருப்பார் என்றும்கூடப் படித்த ஞாபகம்.''

''நீங்கள் படித்தது ஓர் அபிப்பிராயம். அந்தக் கருத்தில் ஓரளவு தர்க்க ரீதியான நியாயமும் இருக்கலாம்.''

''உங்கள் டிரிங்க்ஸ் வரட்டும். அவர் நினைவாக மூவரும் ஒன்றாக ஒரே சமயத்தில் இந்தத் தொட்டியில் நமது கோப்பைகளைக் கவிழ்த்து விடுவோம்'' என்றாள் அனுபமா, பக்கத்தில் இருந்த ஒரு செடியைச் சுட்டிக்காட்டி.

''தாவரங்களுக்கு உயிருண்டல்லவா? அவற்றின் வேரில் மது பாய்வதைக் கூட ராஜாஜி விரும்பமாட்டார் என்று தான் நினைக்கிறேன்.''

''உங்களுக்கு வேண்டாம் என்றால் வீண் அடிக்காதீர்கள். என்னிடம் தள்ளி விடுங்கள். தாகத்தால் தவிக்கும் ஓர் அமெரிக்கனின் தொண்டை நனைவதற்கு ராஜாஜி ஆட்சேபிக்க மாட்டார்'' என்றான் மைக் டேவிஸ்.


''இந்தியனுக்குத் தீமையானது அமெரிக்கனுக்கு எப்படி நன்மையாகி விட முடியும் ?'' என்றாள் அனுபமா.

''நாம் மறுபடியும் அது பற்றிய தர்க்கத்தில் இறங்கப் போகிறோமா ?'' என்றான் மைக் சற்று அலுத்துக் கொள்ளும் குரலில். பிறகு தனஞ்செயனை நோக்கிக் கூறினான்: ''அனுபமாவுக்கு

## நேருஜியின் தந்திரம்!


★ பாரபங்கியில் தம் பதினுன்கு நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நேருஜி லக்னௌவுக்குத் திரும்பினுர். நேரே 'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகைக் காரியாலயத்துக்குச் சென்ருர். உதவி ஆசிரியரிடமிருந்து ஒரு காகித 'பாட்' வாங்கி அதில் தம் சொற்பொழிவுகளைச் செய்தியாக வடித்தார். அடுத்த நாள் பாரபங்கி நிருபராகிய நான் பத்திரிகையில் வெளியாகியிருந்த அருமையான செய்தி விளக்கத்தைக் கண்டு வியந்தேன். நான் அனுப்பிய செய்தியை ஆசிரியர்தான் செப்பனிட்டிருக்கிருர் என்றுகருதினேன். ஆசிரியருக்கோ நான் மிக நன்ருக எழுதியிருக்கிறேன் என்ற எண்ணம். எழுத்தாற்றலுக்கு மேற்பட்டுச் செய்தியின் கருத்தாழம் புது மெருகோடு சோபித்தது. பிறகு செய்தி விளக்கக் கையெழுத்துப் பிரதியைப் பார்த்தால் அது நேருஜியின் கையெழுத்தில் இருப்பது விளங்கியது. அதோடு தமது தந்திரம் பலித்தது கண்டு நேருஜி பூரித்ததையும் பார்த்து ரசித்தேன்.

-சலபதி ராவ்



## காமிரா வீழ்த்திய ஒன்பது விக்கெட்டுகள்

★ 1959-60ம் ஆண்டில் கான்பூரில் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் டெஸ்ட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. ஓர் அபூர்வக் காட்சியைப் படம் பிடித்தேன். இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர் கண்டிராக்டர் அடித்த பந்தை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஹார்வி 'காட்ச்' பிடித்த அற்புதம். கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் ஹார்வியின் கையிலிருந்து பந்து நழுவி விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனுல் ஹார்வியோ பந்தைத் தம் கால்களுக்கு இடையிலிருந்து எடுத்துப் போட்டார்! அவர் அந்தக் காட்சைப் பிடித்த அதிசயத்தைக் கண்டு மெச்சாதார் இல்லை. ஒரு புகைப்பட நிருபருக்கு இது கிடைத்தற்கரிய காட்சி அல்லவா?



★ இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் நடந்த பந்தயத்தில் இந்தியா 'பீல்டிங்' செய்து கொண்டிருந்தது. குலாம் முகம்மது வீசிய பந்தை அடிக்க வந்த காரி சோபர்ஸ் தம் கையிலுள்ள மட்டையின் பிடிப்பை இழந்துவிட, பந்தோடு மட்டையும் ஆகாயத்தில் பறந்தது. இந்த அபூர்வக் காட்சியை என் காமிரா, 'கிளிக்' செய்து கொண்டது.

★ கான்பூர் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் ஜேசு பட்டேல் ஒன்பது விக்கெட்களை வீழ்த்திக் கிடைத்தற்கரிய வெற்றியை இந்தியாவுக்குப் பெற்றுத் தந்தார். அவர் வீழ்த்திய ஒன்பது விக்கெட்களையும் என் காமிராவினுல் நான் வீழ்த்திய சாதனை என் நினைவை விட்டு அகலாது.


-'ஹிந்து' புகைப்பட நிபுணர் சாரி.

## மணி பார்க்கத் தெரியாது!

சென்னைக் கடற்கரையில் சுபாஷ் சந்திர போஸும், எஸ். சீனிவாச அய்யங்காரும் தங்கள் மடை திறந்தாற் போன்ற சொற்பொழிவை முடித்தபோது இரவு பத்தரை மணி. அந்தச் சொற்பொழிவு பற்றிய விரிவுரை எட்டுப் பத்திகள் பத்திரிகையில் இடம் பெறுமாறு நான் எழுதி முடித்தபோது விடியற்காலை நாலு மணி. அந்தக் காலத்தில் எங்கள் பணியை ரொம்பப் பெருமையோடும் திருப்தியோடும் செய்வோம். கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே வேலை செய்யும் வழக்கம் கிடையாது. சம்பளம் குறைவுதான். ஆனுல் கடினமாக உழைத்த திருப்தி பூரணமாக இருந்தது.

-ஆர். ராமச்சந்திரய்யர், முன்னுள் பிரதம நிருபர், இந்தியன் எக்ஸ்பிரஸ்.

(சென்னை நிருபர்கள் சங்கம் வெளியிட்டுள்ள 'நியூஸ்மேன்' 14வது ஆண்டு மலரிலிருந்து தொகுத்தவர்: பி.எஸ்.எம்.)



---

ஆல்கஹால் என்றுலே அலர்ஜி. ஏதோ சிறிது அருந்துவதுபோல் பாவனை பண்ணியே நேரத்தைக் கடத்திக் கொண்டு போய் விடுவாள். இவள் கேர்ல் ஃபிரெண்ட்டாகக் கிடைத்ததில் எனக்குச் செலவு ரொம்ப மிச்சம்.''

''மைக்கும் அதிகமாக அருந்துவதில்லை. அவருக்கு நிதானம் தெரியும்'' என்ருள் அனுபமா. ''ஆனுல் அந்தச் சிறிதளவையும் குடித்துத்தான் ஆக வேண்டுமா என்பது என் வாதம்.''

இந்தச் சமயத்தில் திடீரென்று காதைக் கிழிக்கும் ஓசையுடன் மீண்டும் சண்டமாருத சங்கீதம் ஆரம்பமாயிற்று. தனஞ்செயன் முகத்தைச் சுளித்து, ''நாம் வேறு எங்கேயாவது போனுல் என்ன?'' என்ருன்.

'' 'இடென்'னில் ஆல் ஹிர்ட் வாசிக்கிருர். அந்த ஃப்ளூட் இசை இவருக்குப் பிடிக்கும். மிருதுவான, இனிமையான, இலேசான சோகத்துடன்கூடிய ஜாஸ் '' என்ருள் அனுபமா.

''ஆர்டர் செய்த ட்ரிங்க்ஸ் என்ன ஆவது ?'' என்று கவலேயுடன் கேட்டான் மைக்.

ஆனல் அதற்கு முன்பாக அனுபமா எழுந்து விட்டாள்; வாசலே நோக்கி நகர்ந்தும் விட்டாள்.

அருகில் வந்த வெய்ட்டரிடம் தனஞ்செயன் கூறினன்: ''இதோ பார், நான் கடந்த மூன்று நாட்களில் நிறையப் பணம் பண்ணியிருக்கிறேன். அதனல் சந்தோஷமாயிருக்கிறேன். மற்றவர்களும் அதில் பங்கு பெற வேண்டும் என நினேக்கிறேன். அதனல் நீ இந்தக் கோப்பைகளில் உள்ள மதுவை அருந்த வேண்டும்! என்ன சரிதானு ?''

வெய்ட்டர் காது வரையில் உதடு அகலப் புன்னகை புரிந்தான். ''தாங்க் யூ. டியூட்டி முடிந்ததும் நீங்கள் இன்னும் நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டுமென வாழ்த்தியபடியே குடிக்கிறேன்.''

பில்லுக்காகவும் கணிசமான டிப்புக்காகவும் சேர்த்து ஐந்து டாலர் நோட்டை மேஜையின் மீது வைத்து விட்டுப் ''போவோமா ?'' என்ருன் தனஞ்செயன். மைக்கேல் மதுக் கோப்பைகளே ஒரு தடவை ஏக்கத்துடன் பார்த்துவிட்டு அவனேப் பின் தொடர்ந்தான்.

# 4. புகைப்படம் பொய்த்தது!

ஓவர்கோட்டை இழுத்து உடலே அணேத்தாற்போல் இதமாக வைத்துப் போட்டுக் கொண்டு ஒரு கரத்தைச் சகஜமாக அந்நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்பத் தனஞ்செயனின் கரத்தில் கொக்கி போட்டாற்போல் இணேத்துக் கொண்டாள் அனுபமா. ''தி டென் கிட்டத்தில் தானே இருக்கிறது; நடப்போமா?'' என்ருள் மைக்கேலே நோக்கி.

''ஓ.கே.'' என்ருன் அவன்.

நியூயார்க் நகரின் பிராட்வே பகுதி திரும்பிய பக்கமெல்லாம் வண்ண விளக்கு விளம்பரங்களால் ஜொலித்துக் கொண்டிருந்தது. விளம்பர வாசகங்கள் தோன்றி மறைந்தன; ஓடின; நிலேத்து நின்றன; நிறம் மாறின. வானத்து நட்சத்திரங்களெல்லாம் வான வில்லின் வர்ணங்களே அப்பிக் கொண்டு பிராட்வே பகுதிக்கு வந்து மகிழ்ச்சிக் கொந்தளிப்புடன் நர்த்தனமாடுகின்றனவோ எனத் தோன்றியது. தனஞ்செயன் அனுபமாவையும் டேவிஸ்ஸையும் பின்பற்றி அந்த நைட் கிளப்புக்குள் நுழைந்தபோது மாலே மயங்கும் நேரம். இப்போது மூவருமாக வெளியே வந்தபோது இருள் கவிந்து விளக்குகள் எரியத் தொடங்கி விட்டிருந்தன. திடும்மென்று இந்த மாறுதல்—அடுப்பங்கரை அழகி ஸிண்ட்ரல்லா அரச குமாரி ஸிண்ட்ரல்லா ஆனது போல்—தனஞ்செயனேத் திகைக்க வைப்பதாக இருந்தது. தான் மேற்கொண்டு வந்துள்ள மிக முக்கியமான பணியையும் மறந்து தன் வசமிழந்து சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். ''பகல் போதில் பார்ப்பதற்கும் இப்போது இது அளிக்கும் காட்சிக்கும் சம்பந்தமே இல்லேயே?'' என்று அதி ஆச்சரியத்துடன் கூறினன்.

அனுபமா வண்ண விளக்குகளின் ஒளியில் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த முக்கியமான கட்டிடங்களேயும் தியேட்டர்களேயும் அவனுக்குச் சுட்டிக் காட்டினள். ''எத்தனேயோ தடவைகள் இங்கு வந்துள்ள எனக்கே அலுக்காத காட்சிதான் இது. ஒவ்வொரு முறை இங்கே நடக்கும்போதும் ஏதேனுமொன்று புதிதாகக் கண்ணுக்குத் தட்டுப்பட்டு மகிழ்விக்குமளவுக்கு அத்தனே அலங்கார, விளம்பர விளக்கொளிகள் இருக்கின்றன'' என்ருள்.

சற்று நேரத்துக்குப் பிறகு மனத்தின் பரபரப்பு கொஞ்சம் அடங்கியதும் தனஞ்செயன் கேட்டான்: ''விஞ்ஞானி என்று இருவரும் சொல்லிக் கொள்கிறீர்களே! அந்த நைட் கிளப்புக்கு அடிக்கடி போவீர்களா? காட்டுமிராண்டித்தனமான அந்தக் கூச்சலே எப்படிச் சகித்துக் கொள்கிறீர்கள்?''

''பெரிய பிஸினஸ்மேன் என்று சொல்லிக் கொள்கிறீர்களே! அங்கே எதற்காக வந்து சேர்ந்தீர்கள்?''—திருப்பிக் கேட்டாள் அனுபமா.

ஒரு கணம், அவளேப் பின்தொடர்ந்து தான் வந்ததை உணர்ந்துதான் வினவுகிருளோ என்று துணுக்குற்ருன் தனஞ்செயன். அந்த மனக் கிலேசத்தைத் தன் கரத்தின் வழியாக அவள் மேனி உணர்ந்துவிடக் கூடாதென்று மிகுந்த பிரயாசைப்பட்டுத் தன் உடலில் சிறு பதற்றமும் ஏற்படாமல் கவனித்துக் கொண்டான்.

''நான் பிஸினஸ்மேன் என்ருலும் நியூயார்க் எனக்குப் புதுசு. வந்த இடத்தில் பலவிதமான புதுமைகளேயும் அனுபவித்துப் பார்த்துவிட வேண்டும் என்று நினேப்பது இயல்பு. தி ஸெல்லர் என்று பெயரைப் பார்த்ததும், நைட் கிளப்

என்று உணர்ந்ததும் உள்ளே நுழைந்து விட்டேன். உண்மையைச் சொல்லப் போனால் ஏதாவது ஸ்டிரிப் டீஸ் அல்லது ஸ்டேஜ் ஷோ இருக்குமென்று எதிர்பார்த்தேன்.''

''அவற்றில் புதுமையில்லையே? நீங்கள் அனுபவிக்க விரும்பிய புதுமை இந்தக் காட்டுக் கத்தலில்தானே இருக்கிறது?''

''மாலையில் வாங்கிய வைட்டமின் மாத்திரை பாட்டிலிலிருந்த பஞ்சு கைகொடுத்து உதவியது. இல்லாவிடில் எனக்குப் பைத்தியமே பிடித்திருக்கும்.''

''பைத்தியம் பிடிப்பதும் ஒரு புதுமையான அனுபவம்தானே?'' என்று கூறிச் சிரித்தான் மைக்.

''காட்டுக் கூச்சல், பேயாட்டம் என்றெல்லாம் வர்ணிக்கிறீர்களே ஒழிய, அவற்றில் உள்ள நன்மையை நீங்கள் உணரவில்லை'' என்றாள் அனுபமா.

''நன்மையா?''

''ஆமாம். மனசுக்கும் உடலுக்கும். குழந்தைகளுக்கென்று உருவாக்கப்பட்ட பூங்காவில் அவர்கள் விரும்பியபடியெல்லாம் கிறுக்கவோ, வர்ணம் பூசவோ பெரிய திரைச் சீலையையும் ஏராளமான வர்ணக் கலவைகளையும் வைத்திருப்பார்கள். பார்த்திருக்கிறீர்களா?''

''ஆமாம்; நேரு சமாதியைச் சுற்றியுள்ள பூங்காவில்கூடக் குழந்தைகளுக்காக அப்படி ஓர் ஏற்பாடு இருக்கிறது.''

''அது எதற்கு? ஓவியத் திறனை வளர்க்கவா? அதில் கிறுக்கும் குழந்தைகளில் ஆயிரத்தில் ஒன்றுகூட ஓர் ஓவிய மேதையாகாது அல்லவா?''

''அது மன விடுதலைக்கு ஒரு சாதனமாகப் பயன்படுகிறது'' என்றான் மைக்கேல் இடையில் புகுந்து.

அனுபமா தொடர்ந்தாள்: ''குழந்தைகளை வீட்டிலே பெற்றோர்கள் அடக்கி ஆள்கிறார்கள். பள்ளியில் ஆசிரியர்கள் கண்டிப்புச் செய்கிறார்கள். சதா அடங்கி ஒடுங்கிப் போகும் சிறுவன் கண்டபடி கிறுக்க அல்லது படம் போட அல்லது வர்ணங்களை வாரி இறைக்க ஒரு வாய்ப்புக் கிடைக்கும் போது கட்டுப்பாடற்ற முழு சுதந்திரத்தை உணர்கிறான். அது ஒரு டானிக்கைப் போல் அமைந்து மனத்தைச் செம்மைப்படுத்துகிறது.''

''எனக்குப் புரிகிறது'' என்றான் தனஞ்செயன். ''ஜப்பானியத் தொழிற்சாலையில் உத்தரத்திலிருந்து தொங்கும் மணல் மூட்டையில் மானேஜரின் முகத்தைப் படம் வரைந்திருப்பார்களாம். தொழிலாளி ஒவ்வொருவனும் வீடு திரும்பும்போது அதைக் குத்தி விட்டுப் போவானாம், ஆத்திரம் தீர!''



## கதை கதையாம்! வதை வதையாம்!

'ஐந்தாவது திட்ட அறிக்கை சென்ற ஆண்டின் தலைசிறந்த கற்பனை வளம் மிகுந்த புத்தகம்.
'டெக்கான் ஹெரால்ட்'
-பாலி

''ஆத்திரம் தீருகிறதல்லவா? அந்த மனோதத்துவத்தை இந்தக் காட்டுக் கத்தலுக்கும் பேயாட்டத்துக்கும் பொருத்திப் பாருங்கள். சுதந்திர நாட்டில் சுதந்திரமாக வாழ்வதாகச் சொல்லிக் கொள்கிறோமே தவிர நமக்கு எத்தனை விதமான சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள், எழுதப்படாத விதிமுறைகள்! நாகரிக முன்னேற்றம் அதிகமாக ஆக நம் மனத்தை அடக்கி ஆண்டு அடிமைப்படுத்தி விடுகிறோம். ஒருவரோடு ஒருவர் பேசும்போதும் பழகும்போதும் கூட நாசூக்காக நடந்து கொண்டு உதட்டளவில் பேசுகிறோம்...''

''அந்த அடக்குமுறையை எல்லாம் உடைத்தெறிந்து விட்டு மனம் போன போக்கில் ஆடுவதில் ஒரு திருப்தி ஏற்படுகிறதாக்கும்!''

''திருப்தி மட்டுமில்லை; படு வேகமான வாழ்க்கை முறையினால் முறுக்கேறிப்போன உடம்பும் உள்ளமும் தளர்ந்து சாந்தியும் நிம்மதியும் பிறந்து ஆரோக்கியத்துக்கு வழி வகுக்கிறது. அடுத்த முறை தி செல்லருக்குள் நுழையும்போது இந்தக் கண்ணோட்டத்துடன் போங்கள்.''

''நீ அழைத்துப் போவதானால் நான் அந்தச் சோதனைக்கு உட்படத் தயார்!'' என்ற தனஞ்செயன் சட்டென்று திரும்பி அவளைக் குனிந்து பார்த்தான். நெளிந்தும் நிமிர்ந்தும் சுழன்றும் வரும் விளம்பர விளக்கொளிகள் அவள் முகத்தில் மாற்றி மாற்றி வண்ண ஓவியங்களை வரைவதைக் கண்டான்.


'புகைப்படத்தில் காணப்பட்டதை விட இவள் சற்று வயதானவளாகவே தோன்றுகிறாள்' என்று எண்ணினான் தனஞ்செயன். கூடவே, 'புகைப்படங்களில் இருந்ததை விட அழகானவளாக விளங்குகிறாள்'' என்ற நினைப்பும் எழுந்தது.

அவன் இமைக்காது தன்னைப் பார்ப்பதைக் கண்டு அவளும் வியப்பும் விளையாட்டு விஷமமுமாக அவனை நோக்கிக் கண்கள் மின்னப் புன்னகை செய்தாள்.

''ஹேய்! நான் ஒருவன் இங்கிருப்பதையே மறந்து விட்டீர்களா என்ன?'' என்று இலேசாகப் பொறுமை எட்டிப் பார்க்கும் குரலில் கேட்டான் மைக்கேல் டேவிஸ். (தொடரும்)





CMGC 1 216 TM



ஆசைகள் மடிவதில்லை
கதை: கௌசிகன்
சித்திரம்: சூர்யா
2
நீதிமன்றத்திலிருந்து தன் அறைக்குத் திரும்பிய முரளி பிறகும் மல்லிகாவின் வழக்கை மறக்க முடியவில்லை.
என் நண்பன் சதீஷ் பப்ளிக் பிராசிகியூடரின் உதவியாளனாகப் பணி புரிகிறான். அவனைப் போய்ப் பார்க்கிறேன்.
என்னப்பா சதீஷ்! வெளியூரிலிருந்து எப்போ வந்தே? தர்மராஜன் கொலை வழக்கிலே நீ தான் உன் சீனியருக்காக வருவேன்னு நெனைச்சேன். ஏமாத்திட்டே.
சொந்தக் காரியமா வெளியூர் போயிருந்தேன். நேற்று தான் வந்தேன்.
அந்த வழக்கு சம்பந்தமான கட்டுத் தானே இது? படித்து விட்டாயா?
இன்னும் படிக்கவில்லை.
படிக்காதே. ஏனென்றால் வழக்கின் முக்கியமான பகுதி நீதிமன்றத்துக்கு வரவேயில்லை. விசாரணைக் குறிப்புக்களில் நீ அதைக் காணவும் முடியாது.
தர்மராஜனின் மனைவி மேனகா தன் கணவரோடு அந்தப் பெண் மல்லிகாவைத் தொடர்பு படுத்தி ஏதேதோ கூறி இருக்கிறாள். அவள் கூறியவைகளை விட அவள் கூறிய முறை தான் வழக்கின் போக்கையே மாற்றி விட்டது. அவளை மணக்க மறுத்ததால் ஆத்திரம் கொண்ட மல்லிகா தன் கணவனைக் கொன்று விட்டதாகப் பெண்களுக்கே உரிய சாகசத்துடன் விவரித்திருக்கிறாள்.
பிரதிவாதி வக்கீலான சோமு தான் எடுத்துக் கொண்ட எந்த வழக்கிலும் தன் கட்சிக்காரருக்கு விடுதலை வாங்கித் தரும் சோமு இதில் மட்டும் ஏனோ மாறாக நடந்து கொண்டிருப்பதை வழக்கின் போக்கைப் படித்தால் தெரிந்து கொள்ளுவாய்.


ஏய், முரளி! இன்னும் கொஞ்ச நேரமானால் சோமுவை தர்ம ராஜனைக் கொன்று விட்டு மேனகாவின் சாட்சியங்களால் தன்னைக் காத்துக் கொண்டதாகக் கூறுவாய் போலிருக்கிறதே.
அப்படியும் ஏன் இருக்கக் கூடாது? மேனகாவைப் பற்றி உனக்குத் தெரியுமா?
தெரியாது...
ரொம்பப் பேருக்கு அவளைப் பற்றித் தெரியாது. நாகரிகத்தின் கேடுகளையெல்லாம் ஒரு மொத்த உருவமாகக் காண வேண்டுமானால் அது அவள்தான். அடங்காப்பிடாரி. பல காலமாகத் தர்மராஜன் தம் மனைவியோடு பேசுவதில்லை.
கொலை நடந்த அன்று இரவு மேனகா எங்கே போயிருந்தாள் என்று விசாரணையின் போது அவளை யாருமே கேட்க வில்லையப்பா! டேய், சதீஷ்! நீயும் நானும் முயன்றால் இவ்வழக்கின் உண்மையை வெளிக் கொண்டு வந்து விடலாம்.
முரளி, நான் முன்னுக்கு வர வேண்டிய ஒரு லாயர். நந்த கோபால் பெரிய கை. நீதிபதியாகப் போகிறவர். சோமு வாதாடுவதில் கோட்டை விட்டால் அதற்கு நந்த கோபால் என்ன செய்வார்? இதில் போய் அவருக்கு எதிராக எப்படி?
போடா முட்டாள், நீ ஒரு கோழை...
முரளி என்னையா கோழை என்கிறாய்?
சாரி, சதீஷ்! இதோ பார், தர்மராஜனை யார் கொன்றார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் செய்யாத ஒரு கொலைக்காக ஒரு பெண் உயிரிழக்கப் போகிறாள். எனக்காக ஒரு காரியம் செய். சிறைச் சாலையில் மல்லிகாவைப் போய் ஒரு முறை பார். அவளிடமிருந்து உனக்குப் புதிதாக ஏதாவது கிடைக்கும். என்னால் அது முடியாது. நான் பிறகு சந்திக்கிறேன்—குட்பை.
முரளியின் வாதத்திலும் நியாயமிருக்கும் தான் போலிருக்கிறது.... ம்....



ஆரோக்கியம்
அழைக்கிறது!

# கண்ணான கண்ணல்லவோ?

"ஏழு கடலைக் கடந்த தீவு. அதிலே ஒரு மரப் பொந்து. அதற்குள்ளே ஒரு கிளி. அதன் கழுத்திலே இருக்குமாம் அவன் உயிர்'' என்ற குழந்தைக் கதை வர்ணனையைக் கேட்டிருக்கிறோம்.

கண் என்னும் அற்புத உறுப்பும் இப்படித்தான். ஏழு எலும்புகளால் ஆன ஒரு பத்திரமான குழியுள் பொருத்தப் பட்டிருக்கிறது. அதன் நுட்பமான உட்பகுதிகளை அடைவதற்குள் எத்தனை மதில்கள், எத்தனை அகழிகள்! ஸ்கிளிரா என்ற கடினமான, வெண்மையான விழிப்புறப் படலத்தில் கருவிழிப் படலம் என்னும் கார்னியா வழியாக மட்டுமே ஒளி புக முடியும். அதையடுத்த கோராய்டு என்னும் விழி அடிக் கரும் படலத்தையும் கடந்தால்தான் மூன்றும் சல்லான ரெடினாவை அடைய முடியும். இந்த ரெடினா நுண்ணிய நரம்புகளாலான பார்வைப் படலமாகும்.

இவையெல்லாம் மதில் என்றால் நுண்ணிய சுரப்பிகள் அகழிகளாக நின்று கண்ணைக் காக்கின்றன. இமையோ கண் உறங்கும்போது அதற்குப் போர்வை; விழித்திருக்கும்போது நிழற்குடை. கண்ணீர், கண்ணைக் கழுவ இயற்கை தந்த லோஷன்.

கண்ணில் மிக வியப்பான பாகம் பார்வைப் படலமே. ஓர் அங்குலத்தில் நூற்றில் ஒரு பங்கே பருமன் உள்ள இதிலே பத்து அடுக்குகள் உள்ளன! அதில் ஓர் அடுக்கு கோலும் கூம்பும் போன்ற வடிவமுள்ள அணுக்களால் ஆனது. பத்துக் கோடி கோல் அணுக்கள் வெண்ணிற ஒளி காண உதவுகின்றன; சுமார் அறுபது லட்சம் கூம்பு அணுக்கள் பிற நிறம் காண உதவுகின்றன.

சாதாரணமாகக் கண்ணைக் காமிராவுடன் ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. கண் சாதா காமிரா வன்று. அது ஒரு 'மூவி' காமிரா; அதிலும் வண்ணப் படக் காமிரா. அதோடு எதிர்ப்படும் பொருள்களை அதே அளவு பிம்பமாகக் காட்டும் அபூர்வக் காமிரா. ஒளியின் வித்தியாசத்துக்கும் தூரத்தின் வித்தியாசத்துக்கும் ஏற்பத் தன்னைத்தானே 'அட்ஜஸ்ட்' செய்துகொள்ளும் காமிராவாகும் கண்.

பாயும் ஒளியை ஏற்பது லென்ஸ். காணும் பொருள் இருக்கும் தொலைவுக்கு ஏற்பக் கண்ணின் லென்ஸ் பருத்தோ, மெலிந்தோ மாறி, 'ஃபோகஸ்' செய்து கொள்கிறது. இதைச் சாதிப்பது அற்புதமான சிலியாத் தசை.

குழந்தையைக் 'கண் போல'ப் பார்த்துக் கொள்வது இருக்கட்டும். குழந்தையின் கண்ணை நன்றாகப் பார்த்துக் கொள்வது அவசியம். குழந்தையின் விளையாட்டுப் பொருள்களில் கூரானது எதுவும் இல்லாவிட்டால் கண் விபத்துக்களைத் தவிர்க்கலாம். கில்லித் தட்டாலும் வில் அம்பு விளையாட்டாலும் பல இளம் கண்கள் சேதமடைந்துள்ளன.

சில குழந்தைகள் பிறக்கும்போதே கண்ணில் குறையுடன் பிறக்கின்றன. இப்படிச் சில குறைகளுக்கு, குழந்தையின் பெற்றோர் கிட்டிய உறவுக்குள் மணந்து கொண்டதும் ஒரு காரணமாக இருக்கலாம். பார்வைப் படல அழற்சி (மாலைக் கண்) மாறு கண், கிட்டப் பார்வை, க்ளாக்கோமா போன்றவை இவ்வாறு நேரலாம்.

கர்ப்பிணியின் நோயும் குழந்தையின் கண் ஊனத்துக்குக் காரணமாகலாம்.

கண்ணைப் பாதுகாக்க நல்ல பழக்கங்கள் என்ன? பல நிபுணர்களின் அனுபவ சாரம் இவை:

கைகளையும் முகத்தையும் சுத்தமாக வைத்திருங்கள்; அழுக்கு நீரில் நீராடக் கூடாது; பிறரது தலையணை, டவல், கண் மை தீட்டுக் கோல் போன்றவற்றைப் பயன்படுத்தலாகாது: (இதனால் 'மெட்ராஸ் ஐ' போன்ற தொற்றுநோய்கள் பரவும்); கூசும் ஒளியையும் தூசு நிறைந்த இடத்தையும் தவிர்க்க வேண்டும்; சூரியனையும், சூரிய கிரகணத்தையும் உற்றுப் பார்க்கலாகாது; சீனிக்காரம், நாமக் கட்டி, வெங்காயச் சாறு, மிளகாய்த்தூள் என்ற 'மருந்து'களைக் கண்ணிலே இட்டு விடக் கூடாது. சொந்த வைத்தியம் வேண்டவே வேண்டாம்.

செய்ய வேண்டியன: பாலும், கீரை காய் கறிகளும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ, ஆரஞ்சுச் சாறு போன்றவை கொடுக்க வேண்டும். வெல்டிங் கருவிகளைக் கொண்டு பணி புரியும் தொழிலாளிகள் பாதுகாப்புக்குக் கண் கவசம் அணிய வேண்டும். எந்த சந்தேகம் வந்தாலும், காயமுற்றாலும் உடனே கண் வைத்தியரை அணுக வேண்டும்.

கண்ணுக்குச் சம்பந்தமில்லாத ஏதாவது இடர் கண்ணைப் பாதிப்பதும் உண்டு. சிறு குழந்தையின் வயிற்றுப் போக்கோ, குடற் புண்ணோ, சீதபேதியோ மிகையாகிக் கண் பார்வை ஊனமாகி விடலாம்; கண்ணைப் பாதிக்கும் நரம்பு நோய்களும் உண்டு; அம்மையும் உண்டு.

தலைவலி எத்தனையோ காரணங்களால் வரும். கண் நோயாலும் வரும்.

கிட்டப் பார்வையும் தூரப் பார்வையும் கண்ணாடி போட்டுக் குணப்படுத்தக்கூடிய குறைகள். கிட்டப் பார்வை பெரும்பாலும் பரம்பரைக் குறை. அச்சு நூல்களும் படிப்பது சம்பந்தமான தொழில்களும் பரவிவிட்டதன்



விளைவாக மூக்குக் கண்ணாடிப் பழக்கமும் அதிகமாகி விட்டது.

பதின்மூன்றும் நூற்றாண்டிலேயே சீனர்கள் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்ததாக மார்க்கோ போலோ எழுதியிருக்கிறார். இன்று தொழில் நுட்பம், நிறைந்த மூக்குக் கண்ணாடி லென்ஸ் தயாரிப்பு இந்தியாவில் செழித்து வருகிறது.

ஒளிக்கோட்டப் பிழை (Refractive error) சாதாரணமாகப் பிறவியிலிருந்தே பாதிப்பது. குழந்தைக்குப் போய் 'கண்ணாடியா?' என்று தயங்காமல், குழந்தையைப் பள்ளிக்கூடம் சேர்க்கும்போதே கண் பரிசோதனை செய்தால் இந்தப் பிழையின் பாதிப்பைத் தவிர்க்கலாம். ராஜாஜி இவ்வாறு தாம் இளமையில் துன்புற்றதை உருக்கமாகச் சொல்லி யிருக்கிறார்.

ரயிலில் போகும்போது கண்ணிலே கரித் தூள் விழுந்து விடுகிறது. அப்போது என்ன செய்வீர்கள்? முதலில் கண்ணைக் கசக்காமலிருந்தால் போதும். உள்ளே அரிக்கும். அதைப் பொறுத்துக் கொண்டு, மேல் இமையை வெளிப்புறம் மடக்கினால் தூசை ஒரு தூய துணியால் ஒத்தி எடுத்துவிடலாம். சுண்ணாம்பு, நவசாரம் போன்ற ரசாயனப் பொருள்கள் கண்ணிலே பட்டுவிட்டால் உடனே கண் வைத்தியரிடம் விரைய வேண்டும். அஜாக்கிரதை ஆபத்து. சில விநாடிகளில் பார்வையைப் பாதிக்கக் கூடும். பாலிலோ, நீரிலோ கண்ணைக் கழுவுவது ஒரு முதல் உதவி.

சல்பா, டெட்ராஸைக் - ளின் ஆயின்ட்மெண்டுகள் முதலுதவிக்கு ஏற்றவை. பெனிசிலின் ஆயின்ட்மெண்ட் கூடாது. அது அலர்ஜியாகி விடலாம்.

சில கண் குறைபாடுகள் உணவுப் போஷாக்குக் குறையின் அடையாளங்களே. வைட்டமின் ஏ குறைவால் கண்ணின் கரு விழிப் பகுதி உருகிப் போய்ப் பார்வை இழக்க நேரலாம்; பார்வைப் படலம் (ரெடினு) பாதிக்கப்படலாம். என்னதான் போஷாக்குப் பொருள்களை உண்டாலும் குடலில் புழுக்கள் இருந்தால் ஒரு பயனும் இராது!

நமது நாட்டு மக்களிடையே அதிகமாக உள்ள கண் குறைபாடுகளில் ஒன்று 'கிளாகோமா'. கண்ணின் உள்ளே இருக்கும் திரவத்தின் அழுத்தம் மிகுவதால் நேரும் இந்தக் குறை இரண்டு கண்களையும் பாதித்துவிடும்.



படங்கள்: இடது பக்கம் - இயற்கைக் கண்ணிலும் சிறிய செயற்கைக் கண். லாசர் ஒளிக் கதிர்களைக் கண்டுபிடிக்கக் கடவுள் படைத்த கண்ணின் தத்துவத்தைப் பயன்படுத்தியே விஞ்ஞானி உருவாக்கியது.

இந்தப் பக்கம் - 1. கண் பரிசோதனை 2. இந்தியாவில் பல ஏழைகள் மூக்குக் கண்ணாடி அணிய வசதியற்றவர்களாய் இருக்கிறார்கள் என அறிந்ததும் மேற்கு ஜெர்மானிய மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பழைய மூக்குக் கண்ணாடிகளைச் சேகரித்து அனுப்பினர்.

## எதிரியல்ல, நண்பனே!



''டான்ஸில்ஸ்'' என்ற அடிநாச் சதையும், 'அடினாய்டு' என்ற மூக்கடிச் சதையும்தான் மூச்சு உறுப்பு நோய்களுக்கும் தொண்டைப் புண்ணுக்கும், வாதக் காய்ச்சலுக்கும் இன்னும் பிற நோய்களுக்கும் காரணம் என்று கருதி வந்ததால் அவற்றை அறுவைச் சிகிச்சை வழியாக அகற்றி வந்தனர். இதுவே அண்மை ஆண்டுகள் வரை வழக்கமான மருத்துவ முறையாக இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது இந்தக் கருத்து தவறு என்றும் ஆதாரமற்றது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டாக்டர் சைமன் பால், டான்ஸில் ஆகட்டும், அடினாய்ட் ஆகட்டும் இரண்டுமே நோய் வராமல் தடுப்பதில் முக்கிய பணியாற்றுகின்றன என்றும் நோய் எதிர்ப்புப் பொருள்களை உற்பத்தி செய்ய உதவி, தடுப்புக் கவசம் போல் இருக்கின்றன என்றும் கூறுகிறார். எனவே இந்தக் கவசத்தை அகற்றிவிட்டால், அதாவது குழந்தையின் டான்ஸிலை அறுவை மூலம் அகற்றிவிட்டால், குழந்தைக்கு இறுதியில் தீமைதான் விளையும் என்கிறார் டாக்டர் பால்.

இவற்றை அகற்ற வேண்டிய அத்தியாவசிய நிலைமையும் ஏற்படுவதுண்டு. ஒரே ஆண்டில் மூன்று தடவைக்கு மேல் டான்ஸில் புடைப்பு ஏற்பட்டால் அதனை அகற்றிவிட வேண்டியதுதான்; டான்ஸிலும் அடினாய்டும் மிகப் பெரிதாக வளர்ந்து, சகிக்க முடியாத குறட்டையோ, மூச்சு விடுவதிலும் விழுங்குவதிலும் சங்கடமோ, ஏற்படுமானால் அப்பொழுதும் அவற்றை நீக்கிவிட வேண்டியதுதான் என்கிறார் அவர்.

---

ஏன் இப்படி நேர்கிறதென்று தெரியவில்லை. ஆராய்ச்சிகள் நடக்கின்றன. ஆரம்ப நிலையில் இதை மருந்தினாலும் ரண சிகிச்சையிலும் நிச்சயமாகக் குணப்படுத்த முடியும்.

கிளாகோமா கண்டால் கண் வலிக்கும். தலையை வலிக்கும். ஒளி கூசும். பார்வையில் வானவில் வண்ணங்கள் தோன்றும். கண்ணின் முன்னே மெல்லிய மேகப் படலம் படர்ந்தது போல் இருக்கும். கண்ணாடி மாற்ற வேண்டிய அளவு கண் பார்வைச் சக்தி அடிக்கடி மாறும். இருட்டில் பார்வை தடுமாறும். பார்வைப் பரப்பு முழுதும் தெரியாது.

''காடராக்ட் சதை வளருது போலிருக்கிறது. பழுக்கட்டும், சிகிச்சை செய்துகொள்ளலாம்'' என்று தவறாக எண்ணித் தள்ளிப் போட்டால் கிளாகோமா முற்றிவிடும். சிகிச்சைக்கு அடங்காது போய்விடும்.

நாற்பது வயதுக்கு மேல் நமது மக்கள் சிலருக்கு நேரக் கூடிய மற்றொரு கண் குறை பார்வைப் படலம் பிரிதல் (detachment of retina). பார்வைப் படலம் கிழிவதால் நேரும் இக்குறை நுட்பமான ரண சிகிச்சையில் செப்பனிடப் படுகிறது. மதுரை, சென்னை அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பல ஆயிரம் கண்கள் இச்சிகிச்சை பெற்றுள்ளன.

வெள்ளெழுத்து குறையை (சாலேசுவரம்)க் கண்டுபிடித்துச் சிகிச்சை பெற முப்பத்தைந்து நாற்பது வயதில் கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

தெளிவான பார்வைக்கு உதவும் கண்ணின் நிறமற்ற லென்ஸ் பால் போல் வெளுத்துத் தடித்துப் போய் விடுவதுண்டு. அப்போது ஒளி கண்ணின் உள் நரம்பை எட்டாது; பார்வை மங்கும். இதுவே காடராக்ட். ரண சிகிச்சையில் இது எளிதாக அகற்றப்படுகிறது. ஆனால் பல கிராமங்களில் கண்ணிலே 'ஊசி போட்டு'ச் சதை எடுக்கிறேன் என்று வரும் பல போலி வைத்தியர்களிடம் எத்தனையோ பேர் கண்ணைக் கெடுத்துக் கொள்கின்றனர். இந்தக் குரூர ஊசி குத்தலால் பிறை விழுந்த படலம் சற்றே விலகியதுபோல் ஒரு பிரமை ஒரு நாள் தோன்றுகிறது. வெகு விரைவிலேயே கண் சீழ் பிடித்துப் புண்ணாகிச் சிகிச்சைக்கு அடங்காமல் போய்விடுகிறது. இந்தப் போலி வைத்தியம் சட்டப்படி குற்றம். இவர்கள் பிடிபட்டால் தண்டனை உண்டு.

மாறு கண் அல்லது ஒன்றரைக் கண் ஒரு வகை அதிர்ஷ்டக் குறி என்று கருதுவோர் இருக்கிறார்கள். அது ஒரு கண் குறையே. சிறு வயதிலேயே கவனித்தால் சிகிச்சை செய்யலாம். இல்லாவிட்டால் ஒரு கண் பார்வை முற்றிலும் போய்விடும்.

வைத்தியர்களுக்குக் கண் ஒரு கண்ணாடி. வேறு நோய்கள், உதாரணமாக நீரிழிவு, ரத்தக் கொதிப்பு, மூளைக் கட்டி இவை இருந்தால் அவற்றின் அடையாளம் ஆரம்பத்திலேயே கண்ணில் தெரியும். சிறு நீரில் சர்க்கரை தெரிவதற்கு முன் கண்ணில் குறிப்பான மாறுதல் வைத்திய நிபுணர்களுக்குப் புலனாகும்.

மூக்குக்கண்ணாடி அணியச் சிலர் வெட்கப் படுவார்கள். இதற்கென ஒட்டுக் கண்ணாடி என்னும் கான்டாக்ட் லென்ஸ் இப்போது பரவலாகப் பழக்கத்துக்கு வந்துள்ளது. சாதாரணக் கண்ணாடியைப் போல் ஏழெட்டு மடங்கு செலவாகும்.

ஒருவர் கண்ணை மற்றவருக்குப் பொருத்துவதும் இன்று சகஜமாகி விட்ட சிகிச்சை. அப்படியென்றால் முழுக் கண்ணையும் அப்படியே தோண்டி எடுத்துப் பொருத்துவதல்ல. கைக்கடிகாரத்தின் மேல் கண்ணாடியில் கீறல் விழுந்து விட்டால் மணி பார்க்க முடியாது; அதை மட்டும் மாற்றுகிறோமே, அப்படித்தான் கருவிழிப் படலத்தை (Cornea) மாற்றுவதும். கண் நரம்பு அறுந்து விட்டால் மறுபடியும் இயங்க வைக்க முடியாது.

இறக்கும்போது 'கார்னியா' தானம் செய்ய முன்வரும் பழக்கம் நம்மிடையே தோன்றினால் பல ஆயிரமாயிரம் பேர் விழி பெற்று வாழ்த்துவர்.

கண்ணிலே முதல் ரண சிகிச்சை செய்ததாகக் கருதப்படும் ஸ்ருதா என்பவர் வாழ்ந்த பாரதத்தில் இன்று கண் வைத்தியர்கள் இன்னும் நிறையத் தேவை.

கட்டுரை: **தம்பி சீனிவாசன்**

**ஆலோசனை:**
**டாக்டர் எஸ். ராம்மோகன்**

# இந்தியாவில் இந்தியனே அந்நியனா?

மகாராஷ்டிர காங்கிரஸ் சர்க்கார், சமீபத்தில் ஓர் அறிக்கை மூலம், இங்குள்ள தனிப்பட்ட முதலாளிகளின் ஸ்தாபனங்களில் எண்பது சதவிகிதம் மராத்தி பேசுபவர்களுக்கே வேலை அளிக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது. அதுமட்டுமல்ல; ஒவ்வொரு கம்பெனியிலும் ஆட்களை வேலைக்கு அமர்த்தும் பொறுப்பிலுள்ள அதிகாரி மராத்தியராகவே இருக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனை விதித்திருக்கிறது. சில ஆங்கில நாளிதழ்களில் to reverse 80% of the jobs in their Concerns for local people என்று எழுதியிருந்தாலும், மகாராஷ்டிர அரசு தன் சுற்றறிக்கையில் தெளிவாக மராத்தி மொழி பேசுபவர்களுக்கு என்று தெரிவித்திருக்கிறது.

மராத்தியர்களுக்குத் தனி மாகாணம் ஏற்படுவதற்கு முன், பம்பாய் மாகாணமும் குஜராத் மாகாணமும் இணைந்திருந்தன. பிரிவதற்கு முன் மராத்தியத் தலைவர்கள் பல பொதுக்கூட்டங்களில், பம்பாய் வாசிகளுக்கு, 'மகாராஷ்டிர மாநிலம் ஏற்பட்ட பிறகு எல்லோரும் சமமாகப் பாவிக்கப்படுவார்கள்; மராத்தி பேசுவோருக்கும் மற்றவர்களுக்கும் இடையே வேலை வாய்ப்புப் போன்ற அம்சங்களில் வேற்றுமை பாராட்டப்படமாட்டாது' என்று உறுதிமொழி அளித்தார்கள். தனி மாகாணமும் நிறுவனம்செய்யப்பட்டது. பிறகு ''சிவசேனை'' மெதுவாக ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தது. மராத்தி பேசுபவர்களுக்கே எண்பது சதவீத வேலைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கிளர்ச்சி செய்தது.

பல மேடைகளில் முதல்வர் வி. பி. நாயக் மகாராஷ்டிரத்தில் வசிப்பவர்கள் எல்லோரும் மகாராஷ்டிரரே என்று சொல்லி வந்தார். இந்த உறுதிமொழிகளெல்லாம் காற்றில் பறந்து போயின.

இதில் சில முக்கிய விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் தேசம் முழுவதும் உள்ளது. மகாராஷ்டிரத்தில் மட்டுமல்ல. 'இந்தியப் பிரஜை இந்தியாவின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வாழலாம்; அவன் முன்னேற்ற மடைவதற்கு வாய்ப்புகள் இதனால் பாதிக்கப்பட மாட்டாது' என்ற அரசியல் சாஸன உரிமை தூள் தூளாகப் பறக்க விடப்பட்டுள்ளது. பம்பாயில் மகாராஷ்டிர அலுவலகங்கள் மட்டுமல்ல, மத்திய அரசின் நூற்றுக் கணக்கான ஸ்தாபனங்கள் உள்ளன. பாரதப் பிரஜைகள் எல்லாருமே மத்திய அரசுக்கு வரி செலுத்துபவர்தாம். ஆனால் தற்சமயம் மத்திய அரசின் ஸ்தாபனங்களுக்கும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமே ஆள் எடுக்கிறார்கள். பம்பாயில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகம் மகாராஷ்டிர அரசின் ஆளுகைக்கு உட்பட்டது. வேறு என்ன சொல்ல வேண்டும்?

தனியார் நிறுவனங்கள் பம்பாயில் ஆயிரக் கணக்கில் உள்ளன. நெசவாலையை எடுத்துக் கொள்வோம். இங்கே தயாரிக்கப்படுகிற துணி மகாராஷ்டிரத்தில் மட்டிலுமே விற்பனையாகிறதா என்ன? இந்தியா முழுவதிலும் வியாபாரம் செய்யப்படுகிறது. அவர்களுக்கு வருவாய் பாரத நாடு முழுவதிலிருந்தும் வருகிறது. ஆகையால் அவர்கள் பாகுபாடு இன்றி இந்தியர் யாரானாலும் சரி என்று தகுதி உள்ளவரைக் கொண்டு வேலை வாய்ப்புக்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். தகுதியைத்தான் பார்க்க வேண்டுமே ஒழியத் தாய்மொழி என்ன என்றல்ல.

மகாராஷ்டிரக் காங்கிரஸ் மந்திரிகளுக்கு வோட்டுப் போட்டது யார்? மராத்தியர் மட்டும் அல்ல; எல்லாருமேதான்.

பம்பாயில் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஸ்டெனோ வேலைக்காக நேர்முகத் தேர்தல் நடத்தியது. இதற்கு வந்த தென் இந்தியர் தாக்கி விரட்டி அடிக்கப்பட்டனர். பரீட்சை இதனால் ரத்து செய்யப்பட்டது. இது மூன்று மாதங்களுக்கு முன் நடந்தது. ஆயுள் இன்ஷூரன்ஸ் நிறுவனம் மத்திய அரசின் மேற்பார்வையில் இருப்பது. அதில் தென்னிந்தியர் வேலை தேடுவது தவறா? இந்தியாவில் வசிக்கும் ஓர் இந்தியன் இந்தியாவிலேயே அந்நியனாகப் பாவிக்கப்படுவது எவ்வளவு அசிங்கம்!

பம்பாய்-19
24—12—73

எஸ். எல். குமார்

---

## நாத ஜோதியின் நினைவாலயம்



கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராக விளங்கி, நமது இசைப் பாடலுக்கு ராஜ கோபுரமும், விசாலமான பிராகாரமும் கொண்ட மகோன்னதமான ஆலய வடிவினை அமைத்துத் தந்தவர் நாத ஜோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள். இந்த மகான் அமரத்துவம் எய்திய எட்டையபுரத்தில் அவரது மகிமைக்கு உகந்த முறையில் சமாதி ஆலயமும் மண்டபமும் எழுப்பி, திருவையாற்றில் ஸ்ரீ தியாகையர் ஆராதனை நடத்துவதுபோல், ஸ்ரீ தீக்ஷிதருக்கும் வழிபாடு செலுத்தப் பேராசிரியர் திரு அ. சீ. ரா. அவர்களின் தலைமையில் பெருமக்கள் ஒன்றுகூடி முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். இசையிலும், இறைப் பற்றிலும் ஈடுபாடு கொண்ட நல்லுலகம் முழுதும் இப்புண்ணியப் பணிக்குப் பேராதரவு நல்கி, செஞ்சொற் கோயில் எழுப்பித் தந்த வள்ளலுக்குக் கற்கோயில் ஆக்கித் தரவேண்டுகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: திரு எம். சோமசுந்தரம் பிள்ளை, பொருளாளர், நாதஜோதி முத்துஸ்வாமி தீக்ஷிதர் நினைவுச் சின்னக் குழு, லயன் ஆட்டோ மோபைல்ஸ், திருநெல்வேலி-627001.

# கோபுரங்கள் உயரமானவை!



உச்சிப் பிள்ளையாரை உளமார ஒரு முறை வணங்கிவிட்டுப் பிராகாரத்தை வலம் வரப் புறப்பட்டேன்.

பிராகாரத்திலிருந்து கீழே சுற்றுமுற்றும் பார்த்தேன். தீப்பெட்டிகளை வரிசை வரிசையாக அடுக்கி வைத்தாற்போன்ற வீடுகள், நவராத்திரிக் கொலுவிலே இருப்பதைப்போன்ற சிறு தென்னை மரங்கள், பச்சைச் செடி கொடிகள். காவேரிகூடச் சின்னதாகி விட்டதைப் போல் தெரிகிறதே? உலகை விட்டு விலகி உயர்ந்த நிலையை அடைந்து நின்று பார்க்கும்போது நாம் வாழ்க்கையிலே பெரிதாக மதிக்கும் இன்ப துன்பங்களும் ஆசாபாசங்களும் இதைப் போலத்தான் சிறியவையாகத் தெரியுமோ? உண்மையில் மனித வாழ்க்கையே இவ்வளவுதானே!

கொஞ்ச நாட்களாகவே எனக்கு ஓர் ஆசை; மலைப் பிள்ளையாரைச் சாகுமுன் எப்படியாவது ஒரு முறை தரிசித்துவிட வேண்டுமென்று. எத்தனை நாட்கள் இன்னும் வாழப்போகிறேனோ? வயது எழுபதைத் தாண்டிவிட்ட பின் மனித வாழ்க்கை இப்போதோ அப்போதோதானே? நாகர்கோவிலிலே இருக்கும் வரை இந்த ஆசை நிறைவேறுமென்ற நம்பிக்கையே மனத்தில் இல்லை. அதிர்ஷ்டவசமாக இவருடைய மருமான் சந்துரு தன் பெண்ணுக்கு இங்கு கல்யாணத்தை ஏற்பாடு பண்ணினானே, வர முடிந்ததோ! முதலில் இந்த வயசுக் காலத்தில் எப்படி வருவது, வேண்டாம் என்றுதான் அவர் சொன்னார். சந்துருதான் காலில் விழாத குறையாக, ''மாமா! நீங்களும் மாமியும் தம்பதி சமேதராக வந்து வாழ்த்தினால் தெய்வமே வந்த மாதிரி எனக்கு. உங்க ஆசீர்வாதத்திலே என் பொண்ணு தாலியும் கழுத்துமா இருக்கணும்'' என்று கெஞ்சினான். உடனே இவரும் சம்மதித்தார். இங்கு வந்த பிறகு,

''மலை ஏற என்னால் முடியாது; நீ போயிட்டு வா'' என்று சொல்லி என்னை மட்டும் அனுப்பி விட்டு அவர் கல்யாண மண்டபத்திலேயே தங்கி விட்டார்.

''உட்காரலாமா பாட்டி? கால் வலிக்கிறது.''

என் எட்டு வயதுப் பேத்தி லதா உட்கார்ந்தாள். அவள் பக்கத்திலே மலைப் படிக்கட்டில் நானும் உட்கார்ந்து கொண்டேன்.

ஆணும், பெண்ணும், குழந்தைகளும் குட்டிகளுமாக ஒரே கூட்டம் ஏறுவதிலும் இறங்குவதிலும் ஈடுபட்டிருந்தது.

''யாரடியம்மா பக்கத்திலே? தலையைச் சுற்றுகிறது. என்னமோ ஆசை. ஏறிவிட்டேன். கையைக் கொஞ்சம் பிடித்துக் கொள்ளேன்.''

திரும்பிப் பார்த்தேன். எழுபது, எழுபத்தைந்து வயதான கிழவர் ஒட்டி உலர்ந்து கறுத்துப்போன உடல். பளபளக்கும் வழுக்கைத் தலை. மூக்கின் நுனியிலே வந்து நிற்கும் கண்ணாடி. கையிலே இருக்கும் தடிகொடுக்கும் உதவியையும் மீறிக் குனிரிலே நிற்பதைப் போலத் தள்ளாடும் உருவம் — என் நினைவுப் பொறியிலே ஏதோ ஒன்று தட்டியது.

''டே சேஷு!'' என்று கத்த என் நாக்குத் துடித்தது. எப்படியோ அடக்கிக் கொண்டு



அம்பாமூர்த்தி

கையைப் பிடித்து அவனை உட்கார வைத்தேன்.

"மனசு அலைபாய்கிறதுன்னு பெரியவா சொல்லுவா. ஏதோ ஆசை தூண்டினதாலே வந்துட்டேன். வந்தப்புறம்தான் சின்ன வயசுலே இருந்த பலமெல்லாம் போயிடுத்து. இந்தப் படிகூட ஏற முடியாது என்று புரியறது."

கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் தீர்ந்துவிட்டது. இந்த முரட்டுத்தனம் இழையோடும் குரல் அவனுடையதுதான். வருடங்கள் ஏறத்தாழ ஐம்பதுக்கு மேல் ஓடிவிட்ட பின்பும் எத்தனையோ விஷயங்களில் மாறாதவனாக இருக்கிறானே? தலையில் கையை வைத்தவாறு குனிந்து உட்கார்ந்தான் அவன். என் பேத்தி பக்கத்திலே உட்கார்ந்தவாறு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுமார் அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் தொப்புளுக்குக் கீழே தொங்கும் காக்கி அரை நிஜாரும் உடல் முழுக்கப் பட்டை பட்டையாகத் தீட்டிய விபூதியுமாக நின்றவனா இப்போது இப்படி என் முன்னால் தள்ளாடும் கிழவனாக நிற்கிறான்? போஸ்ட்



ஆபீசில் கிளார்க்காக வேலை பார்த்துக்கொண்டிருந்தார் அப்பா அப்போது. திருநெல்வேலியிலிருந்து எங்களுக்கு நாகர்கோவிலுக்கு மாற்றம் ஆகியிருந்தது. நாகர்கோவிலில் ஒழுகினசேரி கிராமத்தில் வீடு பார்த்திருந்தோம் நாங்கள். மாட்டுவண்டியிலிருந்து சாமான்களை எடுத்து அடுக்கி வைத்துக்கொண்டிருந்தார்கள் அம்மாவும் அப்பாவும். அப்போதுதான் அடுத்த வீட்டுத் திண்ணையில் தூணைப் பிடித்தவாறு நின்றுகொண்டிருந்த சேஷு மெள்ள மெள்ள வந்தான்.

"மாமா! ஒங்காத்துக்குள்ளே சாமானெல்லாம் எடுத்து வெக்கட்டுமா?"

"வேண்டாண்டா. நீ எங்காத்துப் பொண்ணு அதோ நிக்கறாளே, ஜானகி அவகிட்டப் பேசிண்டிரு. அதுக்குள்ளே நாங்க சாமானை எடுத்து வைச்சுடுவோம். இல்லாட்டா எங்களை ஒண்ணும் பண்ணவிட மாட்டா அவ."

மெள்ள என்கிட்டே வந்தான் சேஷு. கொஞ்ச நேரத்துக்கு அவனுக்குள் தயக்கம், எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்று. திடீரென்று கேட்டான், "உன் பேர் என்னடி?" என்று.

"அதுதான் ஒங்கிட்ட அப்பா சொன்னாளே ஜானகின்னு. ஆனா எல்லாரும் ஜானுன்னுதான் கூப்பிடுவா."

"என்னடி ஜானு. எம்பேரு சேஷுவாக்கும். நானும் எங்கம்மாவும் அடுத்தாத்துலே இருக்கோம். அப்பா இல்லை எனக்கு. அவர் ரொம்ப வருஷம் முன்னாடியே செத்துப் போயிட்டார். அம்மாவுக்கு எம்மேலே ரொம்ப ஆசை. எங்கம்மா அழகா இருப்பாளாக்கும். ஒங்கம்மாவும் நன்னாத்தான் இருக்கா. ஜானு! நீ என்னடி படிக்கிறே?"

"இனிமேத்தான் பள்ளிக்கூடத்துக்குப் போகணும்."

"ஐயே, பெரிய பொண்ணா இருக்கயேடி பாக்க. எத்தனை வயசு ஒனக்கு? எனக்கு ஏழு வயசாச்சு."

"எனக்கு அஞ்சு வயசு."

இப்படித்தான் ஆரம்பித்தது எங்கள் உறவு. நான் பள்ளிக்கூடத்துக்குப் போக ஆரம்பித்தபோது அவன்தான் தினமும் என்னை அழைத்துக் கொண்டு போவான். நாகராஜா கோவிலுக்குப் பக்கத்திலேதான் பள்ளிக்கூடம் இருந்தது. சேஷுவுக்கு மத்த பசங்களோடோ பொண்களோடோ அதிகம் பழக்கமே கிடையாது. சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டு வந்துட்டா அம்மாவுக்கு ஏதாவது ஒத்தாசை பண்ணுவான். இல்லாட்டா வாசல் திண்ணையிலே உக்காந்து ரோட்டையே பார்த்துண்டு இருப்பன். மத்தப் பசங்க எல்லாம் அவனைப் "பொம்பளை மச்சான்" என்று கேலி பண்ணும். அதுக்கெல்லாம் அவன் கவலைப்படறதே கிடையாது. அவனோட அப்பா செத்துப் போயிட்டதாலே அவருக்குக் காரியங்கள் எல்லாம் பண்ணணும் என்கிறதுக்காக அந்த வயசிலே அவனுக்குப் பூணூலும் போட்டுட்டா. சாயந்தரம் தவறாமச் சந்தியாவந்தனம் பண்ணிட்டு எதிரே இருக்கிற சிவன் கோயிலுக்குப் போய் விட்டு வருவன். நான் இருட்டற வரைக்கும் பாண்டியெல்லாம் விளையாடிட்டுத்தான் வீட்டுக்கு வருவேன். அப்போ அம்மா சொல்லுவாள், 'நம்மாத்துப் பொண் ஜானு ஆம்பளை மாதிரி ஊரை ரெண்டு பண்றது. அடுத்தாத்துப் பையன் சமர்த்தா அம்மாவுக்கு எவ்வளவு ஒத்தாசை பண்றான்!' என்று. நான் சேஷுகிட்டே கேட்டேன் ஒரு நாள், "நீ ஏண்டா வெளையாடவே போறதில்லை" என்று. பதிலே இல்லாமல் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

எனக்கும் அவனுக்கும் எப்படியோ அப்படி ஒரு பாசம் வளர்ந்தது. நான் எட்டாம் வகுப்புப் படிக்கறப்போ பத்து படித்தான் அவன். படிப்பில் அவன் சுமார்தான். நான் எட்டாவது பாஸ் பண்ணினதுமே எங்காத்திலே படிப்பை நிறுத்திட்டா. "பொண்ணாப் பொறந்தவளுக்கு எதுக்குப் படிப்பு? ஆத்துக்

காரியத்தைப் பார்த்துண்டு ஆம்படையானுக்குச் செய்ய வேண்டியதைச் செய்ய இதுவே அதிகம்'' என்றாள் அம்மா. எனக்கே ஆச்சரியமா இருக்கு, காலம் எப்படி மாறிப் போயிடுத்து இப்ப? என்னுடை மூத்த புள்ளே மணியோட பொண் நிருபமா ஹைதராபாத்துலே டாக்டருக்குப் படிச்சுட்டு இப்ப மேலே படிக்க இங்கிலாத்துக்குப் போகப் போறா. போனதரம் ஊருக்கு வந்தப்ப நான் அவகிட்ட கேட்டேன், ''ஏன்மா நிரு, வெள்ளைக்கார ராஜ்யத்துலே போய்ப் படிக்கிறேன்னு சொல்லி எவனையாவது கல்யாணம் பண்ணிண்டு வந்துடாதே'' என்று. அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமா? ''ஏன் பாட்டி, ஒனக்கு வெள்ளை வெள்ளையா பேரக் குழந்தைகள் வேண்டாமா?'' என்று. வாய்த் துடுக்கு ரொம்ப அதிகம் அந்தப் பொண்ணுக்கு.

நான் படிப்பை நிறுத்தறேன்னவுடனே, சேஷு வந்து கேட்டான், ''ஏண்டி ஜானு, ஒனக்கோ நன்னாப் படிப்பு வறது. ஏன் நிறுத்தறே?'' என்று. ''போருமடா. இனிமேல் கல்யாணம் பண்ணிண்டு புருஷன் வீட்டுக்குப் போக வேண்டியவதானே நான்?'' என்றேன்.

வீட்டிலே சும்மா இருக்க ஆரம்பித்த பிறகும் எனக்கு வயசு ஏறத் தொடங்கிய பின்னும் நானும் சேஷுவும் எப்பவும்போல் தான் பழகிக் கொண்டிருந்தோம். கிழாத்துச் சீதாப் பாட்டி அம்மாகிட்டே ஒரு நாள் சொன்னா, ''ஏண்டி, கல்யாணி! வயசுவந்த ஆணும் பொண்ணும் நெருப்பும் பஞ்சும் போல. நம்ப ஜானுவும் சேஷுவும் இப்படிப் பழகறது பாக்க நன்னாயில்லே'' என்று. அம்மா அப்போ சொன்னது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது, ''அவா இன்னும் கொழந்தைகள்தான் பாட்டி. சின்ன வயசிலிருந்தே கபடமில்லாமப் பழகறதுகள். அதுக மனசுலே கட்டுப்பாடு போட்டு விஷமத்தை நாமளே இளப்ப வேண்டாம்'' என்று.

அம்மாவுக்குத் தெரிந்திருக்காது, சேஷுவின்மேல் எனக்கு ஆசை உண்டாக ஆரம்பித்திருக்கிறதென்று. அப்பா அம்மா ஆத்தில் கல்யாணத்தைப் பத்திப் பேசறப்போ எல்லாம் அவனுடை உருவம்தான் என் கண் முன்னாலே வரும். இன்னும் ஒரு வருஷத்துலே அவன் எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சுட்டா வேலைக்குப் போயிடுவான். அதுக்கப்புறம் அவனைக் கல்யாணம் பண்ணிக்கலாம் என்றெல்லாம் கோட்டை கட்டுவேன்.

நான் பெரியவளாக ஆக எனக்கில்லாத கூச்சம் சேஷுவுக்கு வர ஆரம்பித்தது. என் முன்னாடி தலையைக் குனிந்துதான் பேசுவான் சுருக்கமாய். சாயங்காலம் கோவிலிலே புவனேசுவரி அம்மன் சந்நிதியிலே நிக்கறப்போ நாங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்துப்போம். ஓரக்கண்ணாலேதான். இல்லாட்டா ஊர் வம்பாயிடுமே? கிருஷ்ண வாத்தியார் அம்மனுக்கு அர்ச்சனை பண்ணிண்டே இதையெல்லாம் கவனிக்கறதுலே பெரிய எமன். அதனாலே கோவில்லே நாங்க பேசிக்கறதுகூட இல்லே. ஆனா புவனேசுவரி தேவிகிட்ட நான் தினம் வேண்டிப்பேன், ''எனக்கும் சேஷுவுக்கும் எப்படியாவது கல்யாணம் பண்ணி வைச்சுடு'' என்று.

சேஷு எஸ். எஸ். எல். சி. பாஸ் பண்ணிட்டான். யாரோ ஒருத்தர் சிபாரிசுலே ஊர்த் தாலுக்கா கச்சேரியிலே வேலையும் கிடைத்தது அவனுக்கு. இந்த வேளையில்தான் எங்காத்திலும் எனக்குக் கல்யாணத்துக்கு வரன் பார்க்க ஆரம்பித்தார்கள். இவரோட மாமா அப்பாவுக்குப் பால்ய சிநேகிதராம். ''என்னுடை மருமான் ஜில்லாக் கோர்ட்டிலே வேலை பாக்கறான். நம்மாத்து ஜானுவுக்கு அவனைப் பார்க்கலாமே!'' என்றார். 'புவனேசுவரி தேவி, ஜாதகம் சேராமல் போகணுமே' என்று வேண்டிண்டேன். இவரோட ஜாதகமே இல்லேன்னு சொல்லிட்டதுனாலே கடைசியில் கோவில்லேதான் பூக்கட்டிப் போட்டோம். துளசி வந்தது. சுப சகுனம் என்று சொல்லிக் கல்யாணத்துக்கு நிச்சயம் செய்தார்கள். நமக்கு எப்படியாவது மனசுலே தைரியம் வந்து சேஷுவைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு அப்பா, அம்மா கிட்டச் சொல்ல மாட்டோமா என்று நினைத்தேன். அதற்கு என்னால் முடியலே யில்லே.

நிச்சய தாம்பூலம் நடந்த அன்றைக்குச் சாயந்திரம் கோவிலுக்குப் போனேன். அங்கே வந்திருந்தான் சேஷு.

''என்னடி ஜானு, ஒனக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்தாமே? பையனைப் பிடிச்சிருக்காடி?''

அவன் குரல் தடுமாறியது. அவன் கண்களிலே கண்ணீர் தளும்பியது.

''ஆமாண்டா'' என்று சொல்லத்தான் நினைத்தேன். என் தொண்டையை ஏதோ அடைத்தது. எனக்கும் அழுகை வந்தது. சுடர் விட்டெரியும் நீல விளக்குகளைப் பார்த்தவாறே பேச்சின்றி நின்றோம் இரண்டுபேரும்.

''ஏண்டா அமுக்குப் பயலே, ராத்திரி நேரத்துலே, கோவில்லே வயசுப் பொண்ணை முழுங்கிவிடுகிற மாதிரி ஏண்டா பாத்துண்டு நிக்கறே?'' என்ற கிருஷ்ண வாத்தியாரின் குரல் எங்களைப் பிரித்தது. ஆத்துக்கு வந்து அம்மாவுக்குத் தெரியாமல் தலகாணியில் வாயை அழுத்திக்கொண்டு மனக் கஷ்டத்தை அழுது தீர்த்தேன்.


கல்யாணத்தின்போதுதான் எத்தனை சுறுசுறுப்பாக வேலை செய்தான் அவன்? பந்தியில் பரிமாறுவது முதல் இலையைத் தூக்கித் தெருவிலே எறிகிற வரையில் அத்தனை வேலையையும் சளைக்காமல் செய்தான். அதைப் பார்த்துவிட்டுத்தான் அம்மாகூட அப்பாவிடம், ''பாவம் சேஷு மாடாட்டம் உழைக்கிறான். வேஷ்டியாவது வாங்கிக் கொடுக்கணும்'' என்றாள்.

முகூர்த்த வேளையில் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அப்போது அவன் முகத்திலே படிந்த சோகச் சாயையைப் பார்த்தபோது என் நெஞ்சிலே முள்ளொன்று இடறிற்று. அவன் இதயத் துயரத்துக்குக் காரணமாகி விட்டோமே என்று.

நான் சீமந்தத்துக்கு ஊருக்கு வந்தபோது சேஷுவின் அம்மா இறந்து போய்விட்டதாகவும், அதற்குப் பிறகு அவன் ஊரை விட்டே போய்விட்டதாகவும் அம்மா சொன்னாள். எனக்குத் தலைச்சன் பம்பாயிலே இருக்கானே

**Asia's most popular journal The Illustrated Weekly of India presents its second annual**

# THE NEW LANDSCAPE OF INDIA




The 1973 Annual brings you a 200-page volume on the progress - and failures - of our different States; the changing life style of our people since Independence, the difference made by industrialisation and electrification and other close-ups of our national life.

**Written by acknowledged experts and fully illustrated in colour and black and white**

**Buy Your Copy Today**

**Price : Rs. 10.00**

## NOW ON SALE

**A TIMES OF INDIA PUBLICATION**

மணி, அவன் பிறந்தான். அதற்கப்புறம் கமலா, தங்கம், கடைக்குட்டி ஆனந்த்—இப்படிச் சம்சாரச் சுமை அதிகமாக ஆகச் சேஷுவின் நினைவு என் நெஞ்சை அரிப்பதிலிருந்து மெள்ள மெள்ள விலகியது. ஆனாலும் எப்போதாவது அவன் நினைவுவரும். அத்தனை வருடங்களுக்குப் பின் இப்போதுதான் பார்க்கிறேன்.

"டாண்...!"

கோவிலில் எழுந்த தீபாராதனை மணியின் ஒலி என் சிந்தனையைக் கலைத்தது.

லதா எழுந்திருந்தாள். என் கையைப் பிடித்துக் கொண்டு சேஷுவும் எழுந்திருந்தான்.

"கொழந்தே, ஒன் பேரு என்னு?"

சேஷு லதாவிடம் கேட்டான்.

"ஜானகி, தாத்தா. ஆனா எல்லாரும் என்னை லதான்னுதான் கூப்பிடுவா."

"ஜானகியா?"

இந்தக் கேள்வியைக் கேட்கும்போது சோகமும் வியப்பும் கலந்த உணர்ச்சி சேஷுவின் முகத்திலே பளிச்சிட்டது. அவன் நெஞ்சிலும் நினைவு மின்னல் வெட்டுகிறதோ?

பிள்ளையாருக்குத் தீபாராதனை நடந்தது. கண்கொள்ளாக் காட்சி.

"தாத்தா, நீங்க சாமிகிட்டே என்ன வேண்டிண்டேள்?"

"நீ என்ன கேட்டே?"

"நேக்கு மூணாங் கிளாஸ் பாஸாகணும்னு வேண்டிண்டேன். நீங்க தாத்தா?..."

"என்னோட ஜானு நன்னா இருக்கணும்னு. அப்படித்தான் தினமும் வேண்டிக்கற வழக்கம்!"

என் கண்களைத் துடைத்துக் கொண்டேன். சேஷு சொன்னது குழந்தை லதாவுக்குப் புரிந்திருக்க வழியில்லைதான்.

'சேஷு! உன் ஜானு இதோ இருக்கேண்டா' என்று சொல்லத் துடித்தேன். ஆனால் என் நினைவாகவே வாழும் அந்தத் தெய்வத்தோடு உறவு கொண்டாட, சம்சாரத்தில் உழன்று, அவனையே மறந்து வாழ்ந்து விட்ட என் குற்ற உணர்வு தடுத்தது.

"இருட்டிடுத்தே? கொஞ்சம் கையைப் பிடிச்சுக்கிறியாம்மா?"

சேஷுவின் கையைப் பிடித்துக்கொண்டேன். இன்னொரு கையை லதா பிடித்துக் கொண்டாள். மெள்ளக் கீழே இறங்கினோம்.

"வர்றபோது யாராவது குழந்தையைக் கூட்டிண்டு வரப்படாதோ? இந்த வயசிலே தனியா வந்திருக்கேளே?"

"கொழந்தையா? எனக்கு ஏது இந்த லகத்திலே சொந்தம், பந்தமெல்லாம்? இருக்கற சொந்தமெல்லாம் ஒரேயொரு நெனவுதான். அந்த நெனவை வைச்சுண்டே கட்டைப் பிரம்மச்சாரியா இத்தனை நாட்களும் தேசாந்தரம் சுத்திண்டு காலத்தை ஓட்டிட்டேன். நாளைக்கு எந்த ஊரோ, வாழ்க்கை இன்னும் எத்தனை நாளோ? இப்போ நேராச் சத்திரத்துக்குப் போய்ச் சாப்பிட்டுட்டு மண்டபத்திலே போய்க் கட்டையைக் கிடத்தணும்."

என் நெஞ்சைக் கொள்ளிகொண்டு சுட்டது. எனக்காகத் தன் வாழ்க்கையைப் பாலைவனமாக்கிக் கொண்டு விட்டானே? 'நீ




என்னோட வா சேஷு' என்று ஆத்துக்குக் கூட்டிக் கொண்டு போய் வயசான காலத்திலாவது அவனைக் கவனித்துக் கொள்ளலாமே யென்று மனசு துடித்தது. ஆனால் என்னைப் பற்றியே சேஷு ஏதாவது பேசிக் கொண்டிருக்க, இவருக்கு வாழ்வின் இந்நேரத்தில் மனசில் ஏதாவது விபரீத எண்ணங்கள் தோன்றி விட்டால்! இதுவரை வாழ்ந்த வாழ்க்கையில் முழு அன்பை இவருக்குக் கொடுக்கவில்லையோ என்ற சந்தேக வித்து முளைத்து விட்டால்...! விளையாடிப் பார்க்க எனக்குத் தைரியமில்லை. இதுவரை வாழ்ந்தது போலவே இனியும் சேஷு வாழட்டும். என் தொண்டையைப் பந்துபோல் இறுக்கமாக எதுவோ அடைத்தது. சேஷுவின் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். மெள்ள மெள்ள அடிவாரத்தை அடைந்தோம். மெள்ள மெள்ள நான் அவனை ரோட்டைக் கடத்தி விட்டேன்.

"நான் இனிமேத் தனியாப் போய்ப்பேன் அம்மா. நல்ல காலத்துக்கு நீ தெய்வம் மாதிரி வந்தே. மஞ்சளும் கழுத்துமா ஆயுசு முழுக்க நீ நன்னா இருக்கணும்."

கைத்தடியை ஊன்றிக் கொண்டு சேஷு போக ஆரம்பித்தான். அவன் உருவம் பார்வையிலிருந்து மறையும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். வாழ்க்கைத் துணையாக அவனுக்கு நான் இருக்க முடியாவிட்டாலும் வழித் துணையாகவாவது சிறிது நேரம் இருக்க முடிந்ததே என்ற சந்தோஷம் எனக்கு.

உச்சிப் பிள்ளையார் கோவிலை நிமிர்ந்து பார்த்தேன். முன்னைவிட உயரமாகத் தெரிந்தது கோபுரம் என் கண்களுக்கு.

உடலில் ஊனம்; உள்ளத்தில் ஊக்கம்

# காலை இழந்தவர் காலனை வெல்கிறார்!

சீர்காழி. ஒற்றை மாட்டு வண்டி யொன்றி லிருந்து கைத்தாங்கலுடன் ஒரு மனிதர் இறங்குகிறார். பளிச்சென்று திருநீறும்; சந்தனமும் குங்குமமும் இட்டிருக்கும் நெற்றி. முகத்தில் புன்சிரிப்பு. வயது முப்பதுக்கு மேல் இருக்கும். தூய கதராடை அணிந்திருக்கிறார்.

உடற்கட்டுடன் காணப்பட்ட மனிதரின் இடது கால் மட்டும் மெலிந்து, ஊனமுற்று இருக்கிறது. அதனால்தான் கைத்தாங்கலை உபயோகித்து வண்டியை விட்டு இறங்குகிறார். அவர் வண்டியில் ஒரு வைத்தியத் தோல் பெட்டியும் தென்படுகிறது.

காலை நேரம்: மணி எட்டரை.

'ஸ்ரீ வேல் முருகன் ஹோமியோ கிளினிக்' கில் டாக்டர் ஆர். வி. நாதனைக் காணப் பலர் வந்து காத்திருக்கிறார்கள்.

'முருகா' என்று முருகன் படத்தை வணங்கி விட்டுத் தம் ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறார். வரிசையாக நோயாளிகள் வருகிறார்கள்.

''இரண்டு நாட்களாக ஜுரம்... நடக்க முடியல்லே...'' என்று ஒரு மெலிந்த வாலிபர் குரல் கொடுக்கிறார்.

டாக்டர் நாதன் வந்தவரை உட்காரச் சொல்லிப் பரிசோதிக்கிறார்.

''இரண்டு நாளைக்கு மருந்து தருகிறேன். நாளைக்கே ஜுரம் தணிஞ்சுடும். நாளைக் கழித்து வா...'' என்று கூறி மருந்து, மாத்திரைகளைத் தருகிறார்.

அடுத்தடுத்து ஆண்கள், பெண்கள் வருகிறார்கள்.

''டாக்டர்! உங்களை வீட்டுக்கு வரச் சொல்லி அப்பா சொல்லச் சொன்னார்...'' என்று ஒரு பையன் மேல் மூச்சு வாங்க ஓடி வந்து சொல்கிறான்.

''ஆகட்டும்! பத்து மணிக்கு வரேன்... மணி இப்போது ஒன்பதரை... அரை மணி டயம் இருக்கு!'' என்று சிரித்துக் கொண்டே பையனைத் தட்டிக் கொடுத்து அனுப்புகிறார்.

அந்த அரை மணி அவகாசத்துக்குள் அவரைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிகிறேன்.

பிறந்த எட்டாம் மாதம் 'போலியோ' என்ற இளம்பிள்ளை வாதம் காரணமாக அவரது இடது கால் பாதிக்கப்பட்டது. எட்டு வயதுவரையில் குழந்தைபோல் தவழ்ந்தார். பிறகு மின்சாரச் சிகிச்சை நடந்தது. கம்பு கொண்டு நடக்க முடிந்தது.

''எந்த வயதில் ஹோமியோபதி வைத்தியம் கற்க ஆரம்பித்தீர்கள்? யாரிடம் கூட இருந்து அனுபவம் பெற்றீர்கள்?''

பதினேழாம் வயதில் கும்பகோணம் டாக்டர் வி. ஆர். மூர்த்தியின் 'இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டில்' சேர்ந்து படித்தேன். ஹோமியோபதி சம்பந்தமான எல்லாப் புத்தகங்களையும் படித்தேன். திருவாரூரில் டாக்டர் சீனிவாசனிடம் நேரிடையாகப் பயிற்சியும் பெற்றேன்.

தம் சிகிச்சை நிலையம் தொடங்கிய பதினறு ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டு சுமார் இருபத்தைந்து பேட்டண்ட் மருந்துகளும் இவர் தயாரித்துள்ளார்! குழந்தைகளுக்காக ஓமவாட்டர், கிரைப் வாட்டர் ஆகியவற்றை அதிக அளவில் தாய்மார்கள் வாங்குகிறார்களாம்.

வைத்தியத்துடன் சமூகத் தொண்டும் செய்கிறார். தினமும் பதினொரு மணி முதல் பன்னிரண்டு வரை ஏழைகளுக்கு மட்டும் இலவசச் சிகிச்சை செய்யும் நேரம்.

''காஞ்சி புதுப் பெரியவர்களின் அருளாசியோடு 'பிரேம பக்தி சபா' என்ற வேத பாட சாலை நடத்தி வருகிறார்.

பல அன்பர்களின் ஒத்துழைப்புடன் சீர்காழியின் தென் பாதிப் பகுதியில் பால தண்டாயுதபாணிக் கோயிலைக் கட்டி முடித்து அதற்குக் கும்பாபிஷேகம் 8-11-73ல் நடத்தி இருக்கிறார் டாக்டர் நாதன்.

திரு கி. வா. ஜ., அ. சீநிவாச ராகவன், திருச்சி ராதாகிருஷ்ணன் முதலியவர்களை அடிக்கடி சீர்காழிக்கு வரவழைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தச் செய்வதில் ரொம்ப உற்சாகம் காட்டுகிறார். சீர்காழி வாசிகளின் உடலுக்கு மட்டுமின்றி உள்ளத்துக்கும் இவ்வாறு மருந்து கொடுக்கிறார் டாக்டர் நாதன்.

பேட்டி: ஏ. சுவாமிநாதன்



# நகைகளைக் கவர்ந்த நாணயமான திருடன்!

அன்னம்

**வீ**ட்டு வாசலில் டாக்ஸி வந்து காத்துக் கொண்டிருந்தது.

தன் கடைசித் தங்கையின் திருமணத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் கௌரி. சுந்தரம் முன் ஹாலில் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

''இன்னுமா புறப்படவில்லை?.... கௌரி ! நாம் ஸ்டேஷன் போவதற்குள் நிச்சயம் ரயில் ஊதிவிடப் போகிறது!'' என்று எச்சரித்தான் சுந்தரம்.

''நான் தயார்!'' என்று சொல்லியபடி கௌரி தன் கையில் ஒரு பிளாஸ்டிக் தண்ணீர்க் கூஜாவுடன் வந்து நின்றாள்.

''தயாரா?'' என்று சுந்தரம் அவளை ஏறிட்டுப் பார்த்தான். ஒரு கையில் மட்டும் இரண்டு தங்க வளையல்கள். கழுத்தில் மெல்லியதாக ஒரு சங்கிலி. இன்னொரு கையில் சாம்பல் நிறத்தைக் காண்பித்த பழைய கறுப்பு நைலான் பட்டையில் கோக்கப்பட்ட ஒரு கைக் கடிகாரம்.

போன மாதம் அவன் ஆசையாக வாங்கித் தந்த கருகமணி பூட்டிய தங்க நெக்லேஸை அவள் அணியவில்லை. நீலமும் சிவப்பும் மாற்றி மாற்றிப் பதித்த கல் வளையல்களை அவள் போட்டிருக்கவில்லை. தங்கச் சங்கிலியுடன்கூடிய புதிய கைக் கடிகாரம்-இலங்கையிலிருந்து வரவழைத்தது – அதையும் போட்டுக் கொள்ளக் காணோம் ! ஒவ்வொரு வருஷ தீபாவளிக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வண்ணங்களில் அவன் அவளுக்குப் பட்டுப் புடவைகள் வாங்கித் தந்திருக்க, சாதாரணச் சின்னாளப்பட்டிப் புடவை அவள் மேனியைத் தழுவி நின்றது. காரட் மூவாயிரத்துக்கு மேல் கொடுத்து வாங்கிய வைரக் கம்மல்களுக்குப் பதில் தேய்ந்து போன தகட்டை ஒத்த ஒரு தோடு.

''இது என்ன கோலம்? நகைகளையெல்லாம் கைப் பெட்டியில் வைத்திருக்கிறாயா?'' என்று கேட்டான் சுந்தரம்.

''பெட்டியில் இல்லை. இங்கே பீரோவில் தான் இருக்கிறது !'' என்றாள் கௌரி.

''ஏன்? வெளியில் போகும்போது போட்டுக் கொள்ளாமல் பீரோவில் வைத்துப் பூட்டுவானேன் ? ஆயிரமாகவும் இரண்டாயிரமாகவும் கொடுத்து வாங்கியதை உள்ளே வைத்துப் பூஜை செய்வானேன் ?''

''எல்லாம் காரணமாகத்தான்!'' என்று சொல்லியபடி கௌரி வாசற் கதவை இழுத்துப் பூட்டலானாள்.

''ஏன்? எடுத்து வந்தால் தேய்ந்து விடும் என்று பயப்படுகிறாயா?'' என்று கேலி செய்தான் சுந்தரம்.

''தேய்ந்து போகாது. அப்படியே கருகிப் போகும்..... என் தங்கைகளைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அத்தனையும் வயிற்றெரிச்சல் பிண்டங்கள்.... எல்லாவற்றையும் தொட்டுத் தொட்டுப் பொருமிப் போகும்... வைரக் கம்மலிலிருந்து ஒரு கல் உதிர்ந்து வைக்கும்.....'' எனப் பொரிந்தாள் கௌரி.

சுந்தரம் பதில் பேசவில்லை. மௌனமாக வாசற் கதவை இழுத்துப் பார்த்துவிட்டு டாக்ஸியில் ஏறிக் கொண்டான். ஒரு நடுத்தரக் குடும்பத்தில் தலைமகளாகப் பிறந்தவள் கௌரி. தன் சொந்த சுக சௌக்கியங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அப்படிப் பிறந்த எத்தனை பேர் தன் குடும்பத்துக்காக உழைக்கிறார்கள்? அவள் அப்பா ரிடையரானவுடன் தன் சேமிப்பு அத்தனையையும் செலவழித்து அவள் திருமணத்தை முடித்தார். கல்யாணம் நடக்கும்போது சுந்தரம் பாங்கிக் குமாஸ்தாவாக இருந்தான். ஏதோ பரீட்சைகள் பாஸ் செய்து அதிகாரியாக உயர்ந்து விட்டான். நீண்ட காலத் தவணை முறையில் நகர்ப்புறக் குடியிருப்பில் சொந்தத்தில் ஒரு வீடும் ஏற்பட்டு விட்டது. தன் சேமிப்பிலும் போனஸிலும் கௌரிக்குக்குறையில்லாமல் வாங்கிக்கொடுத்தான்.



ஆனால் கௌரியின் மற்றத் தங்கைகளுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புக் கிட்டவில்லை. மூத்தவள் ஹேமாவைத் தனியார் பஸ் கம்பெனி கண்டக்டர் ஒருவன் மாலையிட்டான். பாருவின் கைப் பிடித்தவன் தந்தி ஆபீஸில் சேவகனாகப் பணியாற்றினான். இப்போது கடைக்குட்டி கிரிஜாவுக்குக் கல்யாணம். பையன் சிறியதாக ஒரு ஹோட்டல் வைத்து நடத்திக் கொண்டிருந்தான்.

கல்யாணத்துக்குத் தங்கள் பரிசாக ஒரு தங்கச் சங்கிலியாவது போட வேண்டும் என்று சுந்தரம் விரும்பினான். முதல் இரண்டு தங்கைகளுக்கு ஓதியிட்டதுபோல் ஐம்பது ரூபாய்கள் கொடுத்தால் போதும் என்று பிடிவாதமாகச் சொன்னாள் அவள். ஏன் இவள் இப்படிப் பணப் பித்துப் பிடித்து அலைகிறாள் என்று நொந்து கொண்டான் சுந்தரம்.

கல்யாணம் நல்லபடியாக முடிந்தது. இவர்கள் ஓதியிட்ட ஐம்பது ரூபாய்களுக்கு மேல் மதிப்புள்ள புடவை வேஷ்டிகளை எதிர்ச்சீராகக் கொடுத்தார் அவள் மாமனார்.

தனிமையில் கௌரி அலுத்துக் கொண்டாள். ''உங்கள் பாங்கி காவல்காரர் பெண் திருமணத்துக்கு நாம் வாங்கி ஓதியிட்ட புடவை விலையைக் காட்டிலும் இது குறைவு..... அது நாற்பத்தெட்டு ரூபாய். இது முப்பது ரூபாய்கூடப் பெறாது !'' என்று கூறிக் குறைப்பட்டுக் கொண்டாள்.

திருமணம் முடிந்த நாளன்று கௌரி புறப்பட யத்தனித்தபோது மற்றவர்கள் விடவில்லை. நான்கு நாட்கள் தங்கித்தான் போக வேண்டும் என்று கட்டாயப்படுத்தி இருக்க வைத்துவிட்டார்கள். சுந்தரம் மட்டும் தனியாக ஊர் திரும்பினான்.

நான்கு நாட்கள் கழித்துத் திரும்பிய கௌரிக்கு எத்தனையோ ஆசை. அந்த வார இறுதியில் சுந்தரத்தின் நண்பன் ஒருவனின் தங்கையின் திருமணம். எந்தப் புடவை எந்த வேளைக்கு உடுத்துவது, எந்த நகையை எப்போது போட்டுக் கொள்வது என்று யோசித்தபடி ரயிலில் வந்தாள்.

வீட்டில் நுழைந்த கௌரியை அசாதாரணமான மௌனத்துடன் சுந்தரம் வரவேற்றான். பீரோக் கதவைத் திறக்க யத்தனித்த அவள் கையைப் பரிவுடன் பற்றினான் சுந்தரம்.

'' நீ கொஞ்சமும் கலங்கக் கூடாது, கௌரி. மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும் !'' என்று ஆரம்பித்தான்.

'' என்ன சொல்கிறீர்கள் ?'' என்று கலவரத்துடன் கேட்டாள் கௌரி.

''நம்முடைய போதாத காலம் அப்படி நடந்து விட்டது... நாம் ஊருக்குப் போவதை எவன் பார்த்துக் கொண்டு இருந்தானோ, கள்ளச் சாவி போட்டு வீட்டைத் திறந்து...''

'' என்ன ஆயிற்று ? சீக்கிரம் சொல்லுங்கள்!'' என்று பதறினாள் கௌரி.

'' எல்லாமே போச்சு !.... அத்தனையும் போச்சு !'' என்று கூறிய சுந்தரம் பீரோவைத் திறந்தான். அந்த இரும்புப் பீரோவில் இரண்டாவது தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பட்டுப் புடவைகள் தாறுமாறாகக் கிடந்தன. அடியில் மறைவாக வைத்திருந்த கௌரியின் நகைகளில் ஒரு திருகாணிகூட அங்கு காணோம் !

''நான் வரும்போது பீரோ திறந்து கிடந்தது. கீழேயெல்லாம் உன் புடவைகள். நான் தான் எனக்குத் தெரிந்த வரையில் அவற்றை மடித்து வைத்தேன்.''

திறந்த கண்களை மூடாமல் அப்படியே வெறித்த பார்வையுடன் கீழே உட்கார்ந்தாள் கௌரி.

''நீ அப்படி என்னைப் பார்க்காதே...எனக்கும் வேதனைதான். என்ன செய்ய? நமக்கு நஷ்டப்படும் வேளை. அவ்வளவுதான். இதைப் போல் இரண்டு மடங்கு சம்பாதித்து உனக்குப் போட முடியும். நீ மனத்தைத் தளர விடாதே!'' என்றான் சுந்தரம்.

கண்களில் நீர் மல்க அழமாட்டாத குறையாகக் கௌரி, ''போலீஸில் சொன்னீர்களா?'' என்று கேட்டாள்.

சுந்தரம் சூள் கொட்டினான்.



''அவர்கள் என்ன கிழித்துவிடப் போகிறார்கள்? எதற்கும் நான் எழுதி வைத்திருக்கிறேன். எனக்கு அவர்கள் உபதேசம் செய்கிறார்கள். அக்கம்பக்கத்தில் மனிதர்கள் இல்லாத எக்ஸ்டென்ஷன் பகுதியில் நாம் வீட்டைப் பூட்டிக்கொண்டு போனது தப்பாம். 'பத்திரிகை படிப்பது கிடையாதா?' என்று என்னை நையாண்டி செய்கிறார்கள்'' என வருத்தப்பட்டான் சுந்தரம்.

வெறுமையாகிக் கிடந்த பீரோவின் தட்டைத் தடவிப் பார்த்தாள் கௌரி. ''எல்லாவற்றையும் துடைத்து எடுத்துக்கொண்டு போய்விட்டானே, பாவி!'' என்று முணுமுணுத்தாள்.

''நீ மட்டும் கல்யாணத்துக்கு எல்லா நகைகளையும் போட்டுக் கொண்டு வந்திருந்தால் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்குமா?''

''உண்மைதான். கூடப் பிறந்தவர்களுக்குக் காட்டாமல் ஒளிக்க நினைத்தேன். கடவுள் எனக்குச் சரியான தண்டனை கொடுத்துவிட்டார்'' என்று கண்ணீர் விட்டாள் அவள்.

''போகிறது... விடு... நமக்குப் பிராப்தம் அவ்வளவுதான்!'' என்றான் சுந்தரம். ''நல்ல வேளை — தனியாகப் பூட்டியிருந்த சமையல் அறையில் எல்லாம் வைத்தபடியிருக்கிறது'' என்று அவளை அங்கிருந்து அழைத்துப் போனான்.

அவளைச் சமாதானப்படுத்திய திருப்தியில் சுந்தரம் தன் அலுவலகம் போனான்.

**மா**லையில் அவன் திரும்பியபோது கௌரி மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள்.

''சீக்கிரமாக டிபன் சாப்பிட்டு விட்டுப் புறப்படுங்கள். போலீஸ் ஸ்டேஷனில் கூப்பிட்டு அனுப்பினார்கள்'' என்றாள்.

''போலீஸ் ஸ்டேஷனிலா?'' என்று கேட்டான் சுந்தரம் அவளை நம்பாமல்.

''ஆமாம்... அந்தத் திருடனைப் பிடித்து விட்டார்களாம். எல்லா நகைகளையும் மீட்டு விட்டார்களாம்!'' என்றாள் அவள் மிகுந்த உவகையுடன்.

திருடனாவது பிடிபடுவதாவது! இவளுக்கு என்ன, நகை போன அதிர்ச்சியில் பைத்தியம் பிடித்து விட்டதா? அவன் அவளைக் கண் கொட்டாமல் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டாள் கௌரி.

சுந்தரம் மென்று விழுங்கினான். ''உண்மையில்... கௌரி....'' என்று மெதுவாக ஆரம்பித்தான்.

''நான் சொல்லட்டுமா?'' எனக் கேட்டுச் சிரித்தாள் கௌரி. ''உண்மையில் நகை ஏதும் களவு போகவில்லை. அத்தனையையும் அடகு வைத்து ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கினீர்கள், உங்களுக்கு வேண்டியவர் ஒருவருக்குத் தபாலில் அனுப்பினீர்கள்...''

''கூட இருந்து பார்த்தது போல் சொல்கிறாயே?'' என்றான் சுந்தரம் அயர்ந்துபோய்.

''காலையில் நீங்கள் சொன்னவுடன் நான் முதலில் நம்பத்தான் செய்தேன். ஆனால் என் மனம் சமாதானம் அடையவில்லை. உண்மையில் திருடன் வந்திருந்தான் என்றால் என் புடவைத் தட்டை மட்டும்தான் கலைத்துத் தேடியிருப்பானா? உங்கள் டெரிகாட்டன் பாண்டு, சட்டைகளைத் தொடாமல் போவானா? போகட்டும். பக்கத்தில் ஒரு பையில் நான் சேர்த்து வைத்திருந்த முந்நூறு ரூபாய் பணத்தைக்கூடவா தொடாமல் போவான்? யோசித்துப் பார்த்தேன். உங்கள் டெரிகாட்டன் 'பாண்ட்' 'ஹாங்கரி'ல் அழுக்காகத் தொங்கிக்கொண்டிருந்தது. தோய்க்கலாம் என்று எடுத்த போது விடை கிடைத்தது... அந்தப் பையில் இது கிடந்தது....''

சுந்தரம் அவன் மாமனார் பெயருக்கு இன்ஷூர் பண்ணி அனுப்பிய பணத்துக்கு ரசீது அது.

''சரி... என்மீது உனக்கு இப்போது மகா கோபம்... இல்லையா?'' எனக் கேட்டான் சுந்தரம்.

''நிச்சயம் இல்லை... என்னைத்தான் நான் நொந்துகொள்கிறேன். உண்மையில் திருட்டு நடந்திருந்தால் நான் என்ன செய்யப் போகிறேன்?... பெற்றவரின் சிரமம் தெரியாத மகளாகப் பிறந்து விட்டேன். அதனால்தான் என்னவோ மகனைக் காட்டிலும் அதிக வாஞ்சை காட்டும் மாப்பிள்ளை அவருக்குக் கிடைத்திருக்கிறீர்கள்!'' என்றாள் கௌரி, கண்களில் நீர் மல்க.

அவள் முகம் புடமிட்ட பொன்னாகப் பளிச்சிட்டது சுந்தரத்துக்கு.

# பலம் பெறுவாய் பலே பாண்டியா



தூரப் புலிகளின் பரம்பரை சுருண்டுகிடப்பதா?
தென்பை உறிஞ்சும் இன்றைய வேகத்தின் முன்
சோர்ந்துவிடாதீர். இழந்த சக்தியை மீட்க
இதோ டானிக் மாத்திரைகளான ஒகாஸா.
உடல்பலம், ஊக்க சக்தி, ஆரோக்கியம்.
உங்களுக்கே. வேங்கையென விழித்தெழுவீர்.
பாரெங்கும் வெற்றிகண்ட
பாக்கியசாலிகளின் வழி: ஒகாஸா.
வெள்ளிமுலாம் பூசிய டானிக் மாத்திரை
இது ஒன்றே.

ஹார்மோ-பார்மா லிமிடெட், லண்டன்-பெர்லின் முறைப்படி தயாரிப்பு
(ஆடவருக்கும் பெண்டிருக்கும் தனித்தனி மாத்திரைகள்)

வல்லவராய் வாழ்வதற்கே

**ஒகாஸா**

OKASA CO.PVT.LTD.,12A, Gunbow Street, P. B. No. 396,Bombay-400001.



சென்னை அடையாறைச் சுற்றி வெகு வேகமாக வளர்ந்து வரும் புற நகர்களின் பல்லாயிரக்கணக்கான ஆஸ்திகப் பெருமக்களுக்கு அருகிலேயே இருந்து அருள் பாலிக்க ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர், வெங்கடரத்னம் நகரில் கோவில் கொண்டிருக்கிறார். காஞ்சிப் பெரியவர்களின் அருளாசியுடன் சென்ற மார்ச்சு மாதம் ஆரம்பிக்கப் பட்டகோவில் கட்ட திருப்பணி முடிந்து விட்டது. நவநாயகர்களுக்குத் தனிக் கோயிலும், ஸ்ரீ ஸுப்ரமண்யர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ மஹாவிஷ்ணு, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ துர்க்கை விக்ரகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நிகழும் பிரமாதீச ஆண்டு தை மாதம் 28-ந் தேதி (10-2-1974) ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ ஜகத்குரு சகடாபுரம் பதரி சங்கராச்சார்ய ஸ்வாமி அவர்கள் முன்னிலையில், கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடு ஆகி இருக்கிறது. அன்பர்கள் பெருமனளவில் பொருளுதவி செய்து குடமுழுக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகரின் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

பொருளுதவி அனுப்ப வேண்டிய முகவரி—

P S சங்கரநாராயணன், பொருளாளர்
9, வெங்கடரத்னம் நகர், சென்னை - 20

1898
முதல் பிரசித்தி பெற்றது

பண்டிட் D.கோபாலாசார்லுவின்

# ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்

**ஆயுர்வேதாஸ்ரமம்**
பிரைவேட் லிமிடெட் - சென்னை-17.




Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

# எஃகு நகரம்
# ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப்பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.




**டாடா ஸ்டீல்**

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)